2014, May 16 - 31

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/146/News/2014



ஜனாதிபதி தேர்தலும் விக்னேஸ்வரனும்

தமிழ்நாடு மீண்டும் ஒரு முறை மறந்த இனப்பிரச்சினை

சர்வதேச சமூகமும் அதன் நோக்கங்களும்

இந்தியாவின் புதிய அரசாங்கத்தின் முன்னால் உள்ள சவால்கள்

திராவிடக்கட்சிகளை மிரட்டும் ஊழல் வழக்குகள்

தமிழ்த்தேசியத்தின் தளமாற்றங்களும் இலக்கிய களமாற்றங்களும்

## மீண்டும் தேர்தலில் போட்டியிட தார்மீக உரிமையுண்டா?

| | | |
|---|---|---|
| INDIA...............IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கான சஞ்சிகை

CHUTTI KESARI

# சுட்டி கேசரி

நாளைய தினம் நம் கையில்




## இப்பொழுது விற்பனையில்


உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்

அருகிலுள்ள பத்திரிகை

முகவர்களை நாடுங்கள்

மாதம் இருமுறை வெளிவரும் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நெறிமுறை (Ethics) என்பது எதைச் செய்வதற்கு எமக்கு உரிமை இருக்கிறதோ அதற்கும் சரியானது எதுவோ அதை செய்வதற்கும் இடையே உள்ள வேறுபாடேயாகும்.


- பொட்டர் ஸ்ருவர்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமகாலம்
2014, மே 16 - 31
பக்கங்கள் - 68






12 மீண்டும் தேர்தலில் போட்டியிட ஜனாதிபதிக்கு தார்மீக உரிமை உண்டா?
19 விக்னேஸ்வரனும் ஜனாதிபதி தேர்தலும்
22 அமைச்சர்களின் எண்ணிக்கையை குறைக்க நாடு தழுவிய இயக்கம் தேவை
27 தமிழ்நாடு மீண்டும் ஒருமுறை மறந்த இனப்பிரச்சினை
30 பாலஸ்தீன நல்லிணக்க உடன்பாடு
34 திராவிடக் கட்சிகளை மிரட்டும் ஊழல் வழக்குகள்
39 சர்வதேச சமூகமும் அதன் நோக்கங்களும்
42 இந்தியாவின் புதிய அரசாங்கத்தின் முன்னாள் உள்ள சவால்கள்
45 காபிரியேல் கார்ஸியா மார்க்வெஸ்
54 தமிழ்த்தேசியத்தின் தளமாற்றங்களும் இலக்கிய களமாற்றங்களும்
59 கனவுலகின் மர்மக்கோட்டைகளில் புது வெளிச்சம்









*Samakalam focuses on issues that affect the lives of people of Sri Lanka, the neighbourhood and the world*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து...

# போர் வெற்றிக் கொண்டாட்டங்கள்

இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த பிறகு அரசாங்கம் வருடாந்தம் மே மாத நடுப்பகுதியில் போர் வெற்றியைக் கொண்டாடும் தேசிய நிகழ்வுகளை ஏற்பாடு செய்துவருகிறது. அதன் பிரகாரம் போர் வெற்றியின் ஐந்தாவது வருட நிறைவை இப்போது அரசாங்கம் கொண்டாடுகிறது. வழமையாக கொழும்பு காலி முகத்திடலில் நடைபெற்று வந்த இக்கொண்டாட்டங்கள் இத்தடவை தென் மாகாணத்தில் மாத்தறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

தென்னிலங்கை கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருக்கும் வேளையில் வடக்கு, கிழக்கில் அத்தகைய கொண்டாட்டம் ஏதும் இல்லை. அந்தப் பகுதிகளில் போரின் இறுதிக் கட்டத்தில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு எந்தவொரு பொது வைபவமும் ஏற்பாடு செய்யப்படக் கூடாது என்று அரசாங்கம் தடைவிதித்திருக்கிறது. சண்டையில் பலியான தங்கள் உறவினர்களின் நினைவாக வேண்டுமானால் எவரும் தனிப்பட்ட முறையில் மத அனுஷ்டானங்களை மேற்கொள்ள முடியும். ஆனால், பொது வைபவம் என்று எதையும் நடத்த முடியாது என்று அரசாங்கத்தின் சார்பில் இராணுவப் பேச்சாளர் அறிவித்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

போரில் இறந்தவர்களை நினைவு கூருவதற்கென்று ஏற்பாடு செய்யப்படக்கூடிய எந்தவொரு பொதுவைபவமும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை போற்றிப் புகழ்வதற்குப் பயன்படுத்தப்படக்கூடும் என்று அரசாங்கம் கருதுகின்றது. தங்களது அன்புக்குரியவர்களைப் பலி கொடுத்தவர்கள் ஒரு நினைவு வைபவத்தைக் கூட வடக்கு, கிழக்கில் ஏற்பாடுசெய்ய முடியாத அளவுக்கு அரசாங்கத்தின் ஒடுக்குமுறை காணப்படுகிறது. விடுதலை புலிகளைப் 'பயங்கரவாதிகள்' என்று கூறும் அரசாங்கம் அந்தப் பயங்கரவாதிகள் நினைவு கூரப்படக்கூடாது என்று கருதுகின்றதானால், அதே போன்ற 'பயங்கரவாதச்' செயல்களில் ஈடுபட்டு தென்னிலங்கையில் இரு ஆயுதக் கிளர்ச்சிகளைச் செய்த ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி.) அதன் இறந்த தோழர்களை வருடாந்தம் 'கார்த்திகை வீரர்கள் தினம்' என்ற பெயரில் நினைவு கூருவதற்கு எவ்வாறு அனுமதிக்கிறது? இன்றைய அரசாங்கம் மாத்திரமல்ல, முன்னைய அரசாங்கங்களும் ஜே.வி.பி. அதன் தோழர்களை பொதுவைபவத்தை ஏற்பாடு செய்து நினைவு கூருவதற்கு அனுமதித்தே வந்திருக்கின்றன. பயங்கரவாதத்திலும் 'தமிழ்ப் பயங்கரவாதத்தை'யும் 'சிங்களப் பயங்கரவாதத்தை'யும் கையாளுவதற்கு இரு வேறுபட்ட அணுகுமுறைகளைக் கையாண்டு இனப்பாரபட்சக் கொள்கையை உச்சபட்சத்துக்கு கடைப்பிடிப்பதாக அரசாங்கம் நிரூபித்துக்கொள்கிறதா?

எது எவ்வாறிருப்பினும், மே 18 தெற்கிலும் வடக்கிலும் முற்றிலும் துருவமயப்பட்ட உணர்வுகளுடனேயே நோக்கப்படுகிறது. போர்க்காலத்தில் இருந்ததையும் விட, உள்நாட்டுப் போர் முடிவுக்குவந்து ஐந்து வருடங்கள் நிறைவுற்றுள்ள இன்றைய கட்டத்தில் இலங்கையில் இனங்களுக்கிடையிலான பிளவு மிகவும் கூடுதலான அளவுக்கு ஆழமாக்கப்பட்டுள்ளது என்பதே யதார்த்த நிலை.

இறந்தவர்களை நினைவுகூருகின்ற விடயத்தில் வடக்கையும் தெற்கையும் வேறுபட்ட முறைகளில் நடத்துகின்ற அரசாங்கத்தின் போக்கு போர் முடிவுக்கு வந்திருந்தாலும், இனத்துவ அரசியல் நெருக்கடி தொடருகிறது என்பதற்கு பிரகாசமான சான்றாகும்.

போர் வெற்றிக் கொண்டாட்டங்களை அரசாங்கம் நடத்துகின்ற கால கட்டம் தொடர்பில் விசித்திரமான அம்சமொன்றையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. வெசாக் கொண்டாட்டங்களுக்குப் பிறகே போர் வெற்றிக் கொண்டாட்டங்கள் இடம்பெறுகின்றன. உலகிற்கு வன்முறையற்ற வாழ்க்கை நெறியை போதனை செய்த கௌதம புத்தரின் கோட்பாடுகளை அவற்றின் தொன்மை நலம் கெடாமல் தூய்மையாகப் பேணிக் காத்து வருகின்றமைக்காக உலகினால் இலங்கை மதிக்கப்படுவதாக ஜனாதிபதி கூறுகிறார். அத்தகையதொரு நாட்டினால், அதுவும் 2500 வருடங்களுக்கும் மேலான பௌத்த பாரம்பரியத்தைக் கொண்டதாகக் பெருமைப்பட்டுக் கொள்கின்ற ஒரு நாட்டினால் ஆயிரக்கணக்கில் மனித உயிர்களைப் பலியெடுத்த கொடூரயுத்தத்தின் வெற்றியை எவ்வாறு கொண்டாட முடியும்? ▪

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்கள்













## குசல் பெரேராவின் கவனத்துக்கு

சமகாலத்தின் கடந்த இதழில் குசல்பெரேரா எழுதிய 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் புதிய சிந்தனை வேண்டும்' என்ற கட்டுரை சிறப்பானதாகவிருக்கின்ற போதிலும் அவர் அழுத்திக்கூறும் ஒரு விடயத்தில் மட்டும் இணங்க முடியாதுள்ளது. தங்களின் அரசியல் நடவடிக்கைகளில் வடக்கு, கிழக்கு மக்களை பங்கேற்கச் செய்ய முடியாமல் இருப்பது தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு இருக்கின்ற இயலாமையென இவர் கூறுகின்றார். வடக்கு, கிழக்கு முற்றாக இராணுவமயப்படுத்தப்பட்ட நிலையிலும் மக்களுடன் மக்களாக புலனாய்வுத்துறையினர் ஊடுருவியுள்ள நிலையிலும், அரசியல்வாதிகளே அச்சுறுத்தப்பட்டும் தாக்கப்பட்டும் பொலிஸ் நிலையம், 4 ஆம் மாடியென விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையிலும் எப்படி வடக்கு, கிழக்கு மக்களினால் அரசியல் நடவடிக்கைகளில் பங்கேற்க முடியுமெனக் குசல்பெரேரா கருதுகின்றார்?

அரசின் ஆதரவுடன் வடக்கில் அரசியல் செய்யும் ஈ.பி.டி.பி. அமைப்பு ஆயுதங்களைக் கையளித்ததாக ஒருபோதுமே தான் கேள்விப்படவில்லையெனக் கூறும் குசல் பெரேரா பின்னர் எப்படி வடக்கு, கிழக்கு மக்களை அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு இயலாமலுள்ளதெனக் கூறமுடியும்? வடக்கு, கிழக்கு மக்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியாமைக்கு அரசும் அரசுடன் சேர்ந்தியங்கும் அரசியல் (ஆயுத) குழுக்களுமே காரணம். அது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இயலாமை அல்ல. இதனை ஒவ்வொரு தேர்தலிலும் தமிழ் மக்கள் யாருக்கு வாக்களித்துள்ளார்கள் என்பதை குசல்பெரேரா கணிப்பீடு செய்தாரேயானால் புரிந்து கொள்ள முடியும்.

சிந்துஜன் சின்னத்துரை, கோப்பாய்.

## இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகள்

அகதிகள் பற்றிய அ. மார்க்ஸின் கட்டுரை அருமை. ஈழத்தமிழர்கள் அகதிகளாகச் சென்ற நாடுகளில் எல்லாம் அந்த நாடுகள் அவர்களுக்கு குடியுரிமை வழங்கியுள்ள நிலையில், தொப்புள்கொடி உறவான அயல் நாடான இந்தியா மட்டும் குடியுரிமை வழங்க மறுப்பது வேதனையானது மட்டுமல்ல வெட்கக் கேடானதுமாகும். (ஈழத்தமிழர்களுக்காக தமிழகத்தவர்கள் எத்த

## தேர்தல் கணிப்பீடுகள்

கடந்த இதழின் டில்லி டயறி பகுதியில் 'அதிகாரத்துக்கு வரப்போகிறவர் யார்?' என்ற கட்டுரை வெளியாகியிருந்தது. இதில் தற்போதைய இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் எந்தக் கட்சி வெற்றி பெறப்போகிறது என்பது பற்றிய எதிர்வு கூறல்கள் பொதுவாக நாமறிந்த நிகழ்கால கள நிலைவரங்களுக்கு ஏற்ப யதார்த்தபூர்வமாகவும் அதிக சாத்தியப்பாடுகளைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது. எனினும், 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய நாடாளுமன்றத் தேர்தலின் போது அரசியல் அவதானிகளினதும் ஊடகங்களினதும் எதிர்வு கூறல்களும் கணிப்பீடுகளும் பிழைத்துப் போனமையையும் இந்த இடத்தில் கவனத்தில் எடுக்க தவறக்கூடாது.

பிரசன்னகுமார் ரவீந்திரன்,
அவிசாவளை.

விளம்பரங்களுக்கு : தொலைபேசி; 011-7767702, 011-7767703, 011-7322736

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னையோ பேர் தமது உயிர்களைத் தியாகம் செய்துள்ளனர். எமக்கான போராட்டங்களைத் தொடர்கின்றனர். சிறை கூட செல்கின்றனர். ஆனால் ஏன் ஈழத்தமிழர்களுக்கு இந்தியா குடியுரிமை வழங்க வேண்டுமெனக் கேட்க வில்லை. போராடவில்லை? இலங்கையிலுள்ள முள்வேலி முகாம்கள் தொடர் பாகவும் அகதி முகாம்கள் தொடர்பிலும் அக்கறை செலுத்தும், ஆத்திரப்படும் இந்தத் தமிழ் நாட்டு அரசியல்வாதிகள்தான் தமது நாட்டில், தமது மாநிலத் திலேயே ஈழத்தமிழர்களை எத்தனை வருடங்களாக அகதி முகாம்களிலே பொலிஸ் பாதுகாப்புடன் அடைத்து வைத்துள்ளார்கள். அத்துடன் இலங்கை அகதி என்ற பட்டம் வேறு. அதுமட்டுமல்ல கல்விக்குச் சென்றால், தொழிலுக் குச் சென்றால் கூட இலங்கை அகதியென்ற புறக்கணிப்பு.

அசோக் ராஜேந்திரன், அச்சுவேலி.

### சீனா பற்றிய அச்சங்கள்

'அமெரிக்கப் படைத்தளம் அவுஸ்திரேலியாவில் வியாபிக்கின்றதா?' எனும் தலைப்பில் கடந்த சமகாலம் இதழில் கட்டுரையொன்று வெளியாகியிருந்தது. பிராந்திய நாடுகளுக்கு சீனாவினால் ஏற்படக்கூடிய பாதுகாப்பு அச்சுறுத்தல் பற்றிய அவுஸ்திரேலியாவின் கரிசனைகளே இந்தக் கட்டுரையில் சுட்டிக்காட்டப் பட்டிருக்கின்றது. பொதுவாக சீனா இவ்வாறு அதன் அயல் மற்றும் பிராந்திய நாடுகளுடன் எல்லை உள்ளிட்ட பாதுகாப்பு சார்ந்த சர்ச்சைகளுக்குக் காரணமாக இருக்கின்றபோதிலும், சீனா மட்டுமே இந்த அனைத்து நாடுகளினதும் பாது காப்புப் பிரச்சினைகளுக்கு காரணமாக இருந்துவிடுமா அல்லது தத்தமது படைப் பலத்தை மேம்படுத்திக் கொள்வதற்காக சம்பந்தப்பட்ட நாடுகள் சீனாவைக் காரணம் காட்டுகின்றனவா என்ற சந்தேகமும் எழாமல் இல்லை.

மணிவண்ணன் கிருஷ்ணகுமார், வெள்ளவத்தை, கொழும்பு - 06.

### யதார்த்தத்தை உணர்த்தும் கருத்துகள்

''ஜெனீவாவுக்கும் மாகாணசபைத் தேர்தல்களுக்கும் பிறகு....'' என்ற தலைப் பில் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவின் கட்டுரையில் இலங்கை தொடர் பான ஜெனீவா தீர்மானம் அதற்குப்பிறகு நடைபெற்ற மேல் மற்றும் தென் மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் அதன் பின்னர் புலம்பெயர் தமிழர்கள் மத்தி யிலுள்ள அமைப்புகள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னணி அமைப்பு கள் என்ற அடிப்படையில் இலங்கை அரசால் தடைசெய்யப்பட்டமை ஆகிய விடயங்கள் அவற்றின் பின்னணியிலான விளைவுகள் தொடர்பில் ஆராயப்பட் டிருக்கிறது. இந்தக் கட்டுரை நிறைவுசெய்யப்பட்டிருக்கும் விதம் பொறுப்புக்கூ றல் விடயத்தில் இலங்கையின் முன்பாக தற்போதிருக்கும் நிலைமையின் யதார்த் தத்தை நன்கு உணர்த்துவதாக அமைந்துள்ளது.

முத்தையா ஜீவராணி, கொழும்பு - 10.




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 02 இதழ் 22
2014, மே 16-31

A Fortnigtly Tamil News Magazine

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
தொலைபேசி : +94 11 7322700
ஈ-மெயில்: samakalam@expressnewspapers.lk

ஆசிரியர்
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)

உதவி ஆசிரியர்
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

பக்க வடிவமைப்பு
எம்.ஸ்ரீதரகுமார்

ஒப்பு நோக்கல்
என்.லெப்ரின் ராஜ்



விபசாரத்தை விட ஊழல் படுமோச மானது. விபசாரம் தனிப்பட்ட ஆட் களின் ஒழுக்கத்தை ஆபத்துக் குள்ளாக்கக்கூடும். ஆனால் ஊழலோ முழு நாட்டினதும் ஒழுக் கத்தை ஆபத்துக்குள்ளாக்கிவிடும்.

-கார்ள் கிரவுஸ்

வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
சமகாலம்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

பெக்ஸ்; 011 7778752, 011-7767704, 011-2327827,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரக்குழலம்....



போர் வெற்றிக்குப் பிறகு சகல துறைகளிலும் இலங்கை செய்திருக்கும் சாதனைகளை அனேகமான ஐக்கிய நாடுகள் சபையின் சகல நிறுவனங்களுமே பெரிதும் பாராட்டு கின்ற அதேவேளை, இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளைக் கொண்டுவருபவர்கள் மாத்திரம் அந்தச் சாதனைகளைப் பற்றி எதுவும் பேசாமல் மௌனம் சாதிக்கிறார்கள்.

**ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ**



அடுத்த மேதினம் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் கீழ் கொண்டாடப் படும். பொதுத் தேர்தலை நடத்துமாறு நாம் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறோம். மீதியை நாம் பார்த்துக்கொள்வோம்.

**கருஜெயசூரிய**



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது பதவிக்காலத்துக்கு தேர்தலில் போட்டியிடுவது அரசியலமைப்புக்கு முரணானது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எதிரணியினர் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கு காத்துக்கொண்டிருப்பதைவிடுத்து, ராஜபக்ஷவின் இரண்டா வது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னதாகவே அவரை வீட்டுக்கு அனுப்புவதற்கு பொதுமக்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்த வேண்டும்.

**ஜனதாவிமுக்தி பெரமுனை தலைவர் அநுர குமார திசாநாயக்க**



தமிழ் நாட்டில் இடம்பெற்ற பாரிய ஆர்ப்பாட்டங்கள் காரணமாகவே 2012 ஆம் ஆண்டிலும் 2013 ஆம் ஆண்டிலும் ஜெனீவா ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங் கைக்கு எதிரான தீர்மானங்களை இந்தியா ஆதரித்தது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாரா ளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தமிழ்நாட்டுக்கு மேற்கொண்ட ஒரு விஜயத்தின் போது அங் குள்ளவர்களிடம் உங்கள் அலுவல்களை நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள். எங்கள் பிரச்சினையை நாம் பார்த்துக்கொள்கிறோம் என்று கூறினார். அதற்குப் பிறகு எமக்கு தமிழ் நாட்டவர்களின் ஆதரவு கடுமையாகக் குறைந்துவிட்டது. கடந்த மார்ச் மாதம் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் இந்தியா கலந்து கொள்ளாத தற்கு கூட்டமைப்பே காரணம்.

**தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**



நாம் இரகசியமாகச் செயற்படுவதில்லை. நாம் எதைச் செய்தாலும் அது ஊடகங்களுக் குத் தெரிகிறது. மதங்களுக்கிடையிலான அமைதியைச் சீர்குலைக்கும் நோக்கில் நாம் எதையும் செய்ததில்லை. நாம் எதை அம்பலப்படுத்தினாலும், வெளியிட்டாலும் அதை மிகுந்த கவனத்துடனேயே செய்கிறோம். எமக்குத் தெரிந்த சகலதையும் இப்போது நாம் வெளியிடாவிட்டால், நாட்டில் பெரிய இரத்தக்களரி ஏற்படும்.

**பொதுபலசேனா பொதுச்செயலாளர் கலகொட அத்தேஞானசார தேரர்**



சீனர்கள் இப்போது இலங்கையின் புதியதொரு இனப்பிரிவினராக வந்துவிட்டார் கள். தெற்கில் அதிவேகப் பாதை மற்றும் அபிவிருத்தித் திட்டங்களில் பணியாற்றி வந்த பல சீனர்கள் சிங்களப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டுள்ளார்கள். அவர்கள் சிங்களத்தைப் பேசுகிறார்கள். அவர்களை மணந்த சிங்களப் பெண்கள் சீன மொழியைப் பேச ஆரம்பித்திருக்கிறார்கள்.

**ஜே.வி.பி.பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி ஆய்வு

# வீழ்ச்சி கண்டு வரும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் வாக்குப்பலம்



தென்னாபிரிக்காவில் மே 7 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் உறுதியான வெற்றியைப் பெற்றிருக்கிறது. 20 வருடங்களுக்கு முன்னர் இன ஒதுக்கலுக்கு எதிரான போராட்டத்தில் தங்களுக்குத் தலைமை தாங்கி வழிநடத்திய கட்சி மீது தென்னாபிரிக்கர்கள் தொடர்ந்தும் நம்பிக்கையைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டுகின்றன.

62 சதவீதமான வாக்குகளை ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் பெற்ற அதேவேளை, இரண்டாவது இடத்துக்கு வந்த ஜனநாயகக் கூட்டணியினால் 22 சதவீதமான வாக்குகளை மாத்திரமே கைப்பற்றக்கூடியதாக இருந்தது. இன ஒதுக்கலின் முடிவுக்குப் பின்னர் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் தொடர்ச்சியாக வெற்றி கண்டிருக்கும் 5 ஆவது பொதுத் தேர்தல் இதுவாகும். காங்கிரஸ் இதனால் திருப்தியடைய முடியுமென்றாலும், உண்மையான நிலைவரம் எத்தகையதாக இருக்கிறது என்பதை அதன் தலைவர்கள் புரிந்துகொண்டு எதிர்கால செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமென்று அரசியல் அவதானிகள் அபிப்பிராயம் தெரிவித்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

ஆபிரிக்கத்தேசிய காங்கிரஸின் வாக்குப் பலத்தில் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. காங்கிரஸின் செயற்பாட்டுச் சாதனைகள் அல்ல, நம்பகத்தன்மையான மாற்று அரசியல் அணியொன்று இல்லாத சூழ்நிலையே அதை தொடர்ந்தும் அதிகாரத்தில் வைத்திருக்கிறது என்று அவதானிகள் கூறுகிறார்கள்.

உருப்படியான மாற்று அரசியல் அணியொன்று தோன்றும் பட்சத்தில் நிலைவரத்தில் மாற்றம் ஏற்படக் கூடும். இந்தத் தேர்தலில் தென்னாபிரிக்கர்கள் வாக்களித்திருக்கும் முறையை நோக்கும் போது, ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸின் மிகவும் நெருக்கமான ஆதரவாளர்களில் கணிசமான எண்ணிக்கையினர் வேறு கட்சிகளுக்குத் தங்கள் ஆதரவை வழங்கியிருக்கிறார்கள் என்பதை புரிந்துகொள்ளக் கூடியதாக இருப்பதாக தேர்தல் முடிவுகளை மதிப்பீடு செய்யும் ஆய்வாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள். பொருளாதார விடுதலைப் போராளிகள் (Economic freedom fighters) என்ற கட்சி குறித்து ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று இவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். பொருளாதார வளங்களை பகிர்ந்தளித்தல் தொடர்பாக பொருளாதார விடுதலைப் போராளிகள் கட்சி அளித்த உறுதிமொழியும் வெள்ளையினத்தவர்கள்

*(18ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்தியர்களுக்குச் செய்யப்படும் வஞ்சனை

எகிப்திய நீதிமன்றமொன்று கடந்த மார்ச் 24ஆம் திகதி 529 பேருக்கு மரணதண்டனை விதித்ததல்லவா? அந்தத் தீர்ப்பை வழங்கிய நீதிபதி சயீத் யூசுவ் அல்காசர் ஏப்ரில் 28ஆம் திகதி அவர்களில் 39பேரின் மரண தண்டனையையும் ஊர்ஜிதம் செய்து ஏனையவர்களின் தண்டனையை ஆயுட்காலச் சிறைத்தண்டனையாகக் குறைத்தார். அவ்வாறு செய்துவிட்டு மறுகணமே அவர் மேலும் ஒரு 683 பேருக்கு மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார். இவ்வாறு மரண தண்டனை வழங்கப்பட்டவர்களில் ஒருவர் முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் ஆன்மீகத் தலைவர் முஹமட்பதீயும் அடங்குகிறார்.



இந்த வழக்குகள் எல்லாமே தென் பகுதி மாகாணமான மின்யாவில் பொலிஸ்காரர்கள் கொல்லப்பட்டது தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்டவையாகும். தலைநகர் கெய்ரோவில் நூற்றுக்கணக்கான முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் ஆதரவாளர்கள் பொலிஸாரால் கொல்லப்பட்ட தினமான 2013 ஆகஸ்ட் 14ஆம் திகதியே தென்பகுதியில் அந்தப் பொலிஸ்காரர்களும் கொல்லப்பட்டார்கள்.

இந்த வழக்கு விசாரணைகளை சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு (Human Right watch) போன்ற சர்வதேச மனித உரிமைகள் நிறுவனங்கள் கடுமையாகக் கண்டனஞ் செய்திருக்கின்றன. விசாரணைகள் ஒரு சில மணித்தியாலங்கள் மாத்திரமே நீடித்தன. பிரதிவாதிகள் தரப்பு சாட்சியங்கள் சகலதையும் நீதிபதி தடைசெய்துவிட்டார். பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் தடுமாறிப் போனார்கள்.

பிரதிவாதிகளில் 60 சதவீதமானவர்கள் (அவர்களில் ஆசிரியர்கள், டாக்டர்களும் அடங்குவர்) பொலிஸ் நிலையம் தாக்குதலுக்கு இலக்கான போது தாங்கள் அந்த இடத்தில் இருக்கவில்லை என்பதை நிரூபிப்பதற்கான சான்றுகளை வைத்திருந்ததாக வழக்கறிஞர்கள் கூறுகிறார்கள். விசாரணை ஆரம்பிப்பதற்கு 15 நிமிடங்கள் மாத்திரம் முன்னதாக 3500 பக்கங்கள் கொண்ட ஆவணங்கள் தன்னிடம் தரப்பட்டதாக ஒரு வழக்கறிஞர் கூறியதாக செய்திகளின் மூலமாக அறியக்கூடியதாக இருக்கிறது. வழக்கு சம்பந்தப்பட்ட சுமார் 6 ஆயிரம் பக்கங்கள் கொண்ட ஆவணங்கள் தன்னிடம் இருந்ததாகவும் தீர்ப்புக்கு வருவதற்கு முன்னதாக அந்த ஆவணங்களை நீதிபதி வாசித்திருக்கக்கூடிய சாத்தியமேயில்லை என்றும் இன்னொரு வழக்கறிஞர் கூறியிருக்கிறார்.

பிரதிவாதிகளில் பலர் தாங்கள் முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் ஆதரவாளர்கள் அல்ல என்று கூறுகிறார்கள். ஆனால், தனிப்பட்ட நோக்கங்களுக்காகவே தங்களைப் பற்றி சிலர் பொலிஸாருக்கு முறையிட்டிருக்கிறார்கள் என்பதே அவர்களின் நிலைப்பாடு.

வழங்கப்பட்டிருக்கும் சகல தீர்ப்புகள் தொடர்பிலும் எகிப்தின் அதியுயர் இஸ்லாமிய அதிகார சபையிடம் (Grand mufti) மேன்முறையீடு செய்யப்படுமென்றும் இது தொடர்பிலான தீர்ப்பு அடுத்தமாதம் வரலாம் என்றும் கூறப்படுகிறது. எது எவ்வாறிருந்தாலும் அந்த வழக்கு விசாரணைகள் எகிப்தின் நீதித்துறைச் செயற்பாடுகள் மீதும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி முஹமட் முர்சியை 2013 ஜூலையில் பதவி கவிழ்த்த இராணுவ ஆட்சிக்குழு மீதும் சர்வதேச கவனத்தைத் திசைதிருப்பியிருக்கின்றன.

மேன்முறையீட்டு கூட்டத்தில் மாத்திரமே ஏதாவது நீதியை எதிர்பார்க்க வேண்டிய அளவுக்கு எகிப்தின் நீதித்துறை படுமோசமானதாக இருக்கிறது. இரண்டாவதாக முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்துக்கு விரோதமான சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் குவைத் ஆகிய நாடுகளின் உதவிகளில் எகிப்து பெருமளவுக்கு தங்கியிருக்கிறது. இந்த மூன்று நாடுகளும் அண்மைய வருடங்களில் கெய்ரோவுக்கு 1200 கோடி டொலர்கள் நிதியுதவியை வழங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. எகிப்துக்கு வாஷிங்டன் வழங்கும் வருடாந்த 150 கோடி டொலர்கள்

***(21ஆம் பக்கம் பார்க்க...)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி ஆய்வு

# உலகின் கவனத்தை நைஜீரியா மீது திருப்பிய பாடசாலைச் சிறுமிகள் கடத்தல்


நைஜீரியாவில் அண்மையில் இடம்பெற்ற இரு படுபயங்கரமான சம்பவங்கள் அந்த நாட்டில் ஆழமாகிக் கொண்டிருக்கும் அரசியல் நெருக்கடியின் பாரதூரத் தன்மையை உலகிற்கு வெளிக்காட்டுகின்றன.

வடகிழக்கு மாவட்ட நகரான ஷிபொக்கில் உள்ள அரசாங்கப் பாடசாலையொன்றில் இருந்து ஏப்ரில் 14 ஆம் திகதி இரவு 276 மாணவிகளை போகோ ஹாரம் என்ற இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பு கடத்திச் சென்றது. மே 5ஆம் திகதி இன்னொரு கிராமத்தில் இருந்து மேலும் 8 சிறுமிகளை அதே அமைப்பு கடத்தியிருக்கிறது. அதே தினம் எல்லை நகரான காம்போரு நாகலாவில் 12 மணித்தியாலங்களாகத் தாக்குதல் நடத்திய போகோ ஹாரம் தீவிரவாதிகள் சுமார் 300 பேரை படுகொலை செய்தார்கள்.

ஷிபொக் நகரில் தீவிரவாதிகளை எதிர்த்து 15 அரசாங்கப்படை வீரர்கள் 5 மணித்தியாலங்களாகச் சண்டையிட்டார்கள். அயல் கிராமங்களில் இருந்து எச்சரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் இந்த படை வீரர்களுக்கு உதவ மேலதிக படையினர் அனுப்பப்படவில்லை. பெற்றோர்களும் ஏனையவர்களும் கடத்தல்காரர்களை காட்டுக்குள் விரட்டினார்கள். கடத்தப்பட்டவர்களில் 55 சிறுமிகள் தப்பிவரக் கூடியதாக இருந்தது.

இருவாரங்கள் கழித்து கமரூன் நாட்டு எல்லைக்கு அண்மையாகவுள்ள கிராமவாசிகள் பெரும் எண்ணிக்கையான சிறுமிகளை ஏற்றிக்கொண்டு 11 ட்ரக் வண்டிகள் சென்றதைக் கண்டதாக அறிவித்தார்கள்.

கடந்த பத்து மாதங்களில் 80க்கும் அதிகமான பாடசாலைச் சிறுவர்களை போகோ ஹாரம் தீவிரவாதிகள் கொலை செய்திருக்கிறார்கள். நைஜீரியாவை ஒரு கடும் போக்கான இஸ்லாமிய அரசாக மாற்றுவதற்காக அந்தத் தீவிரவாதிகள் நடத்திவரும் போராட்டம், இவ்வருடம் மாத்திரம் இதுவரையில் சுமார் 1500 பேரைப் பலியெடுத்து விட்டது. கொல்லப்பட்டவர்களில் முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் அடங்குவர்.




போகோ ஹாரமின் தலைவர் அபூ பக்கர் ஷேகோ கடத்தப்பட்ட சிறுமிகளை விற்பனை செய்யப்போவதாக வீடியோ ஒளிபரப்பு ஒன்றில் எச்சரிக்கை செய்தார். ஆனால் பின்னர் அரசாங்கத்தினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தீவிரவாதிகள் விடுதலை செய்யப்படுவார்களேயானால் அதற்கு பிரதியுபகாரமாக சிறுமிகளை விடுவிக்கத்தயாராக இருப்பதாக போகோ ஹாரம் நிபந்தனை ஒன்றை அறிவித்தது.

உகண்டாவில் லோர்ட்ஸ் றெஸிஸ்டன்ஸ் ஆமி என்று அழைக்கப்பட்ட கிறிஸ்தவ பிரிவினர் செயற்பட்ட பாணியிலேயே போகோ ஹாரம் இப்போது செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. 1990களில் உகண்டாவின் அந்த கிறிஸ்தவ பிரிவினர் தங்களது படைவீரர்களுக்கான பாலியல் அடிமைகளாக பெண்களையும் சிறுவர் போராளிகளாக படையணியில் சேர்ப்பதற்கு பையன்களையும் கடத்தினார்கள்.

போகோ ஹாரமின் அட்டூழியங்கள் தொடர்ந்து கொண்டிருந்த போதிலும் நைஜீரிய சமஷ்டி அரசாங்கம் துரித நடவடிக்கை எதிலும் இறங்கவில்லை. சிறுமிகள் கடத்தப்பட்டதை ஒத்துக்கொள்வதற்கு ஜனாதிபதி குட்லக் ஜொனாதனுக்கு இருவாரங்கள் பிடித்தது. அதையும்கூட சர்வதேச கண்டனங்களுக்குப் பிறகே செய்தார்.

சிறுமிகள் கடத்தப்பட்ட இந்தக் கொடூரச்செயல் சர்வதேச ரீதியில் கவனத்தைப் பெற்றிருக்கிறது. பல நாடுகளில் சிறுமிகள் விடுவிக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தி ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்ற வண்ணமிருக்கின்றன. சிறுமிகளை தேடிக் கண்டுபிடிக்க சர்வதேச வேட்டையொன்று முடுக்கி விடப்பட்டிருக்கிறது. வடகிழக்கு நைஜீரியாவின் தொலைதூர பகுதிகள் மேலாக அமெரிக்க வேவு விமானங்கள் பறந்து தேடுதல் நடத்திக்கொண்டிருக்கின்றன. கடத்தப்பட்ட சிறுமிகள் பாதுகாப்பாக திரும்புவார்களா என்று உலகம் ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருக்கிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்



# மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மகிந்த ராஜபக்ஷவுக்கு தார்மீக உரிமையில்லை



லக்சிறி பெர்னாண்டோ

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதி ராஜபக்ஷ இரண்டாவது தடவையாகப் போட்டியிட்டபோது நாட்டின் பெரும்பாலான மக்கள் அவர் தேர்தலில் வேட்பாளராக நிற்கும் இறுதிச் சந்தர்ப்பம் இதுவாகவே இருக்கும் என்று நம்பினர். அரசியல் யாப்பு மரபின்படியும், நாட்டில் இருந்து வந்த வழமையின் படியும் இந்த எதிர்பார்ப்பு சரியானது. பெரும்பான்மையான ஜனநாயக நாடுகளிலும் மதிக்கப்படும் ஜனநாயக மரபும் இதுவே. 1978ஆம் ஆண்டில் ஜனாதிபதிமுறை அறிமுகம் செய்யப்பட்ட பின்னர் ஜனாதிபதி பதவியில் ஒருவர் இருதடவையே இருக்கலாம் என்ற விதி அரசியல் யாப்பில் நிலைபெற்ற ஒன்றாகிவிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டது. 1994ஆம் ஆண்டு முதல் இலங்கை மக்கள் ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்காகத் தேர்தல்களில் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு வாக்களித்து வந்துள்ளார்கள். 2005 ஆம் ஆண்டு தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்காகவே வாக்களித்தார்கள். 1994, 2000, 2004 ஆகிய ஆண்டுகளில் நடந்த பாராளுமன்றத் தேர்தல்களில் அரசியல் கட்சிகளும், கட்சிக் கூட்டுக்களும் ஜனாதிபதி முறையை ஒழித்தல் என்ற விடயத்தை முன்வைத்தே தேர்தலில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றன.

## உட்கிடையான வாக்குறுதி

2010ஆம் ஆண்டில் மகிந்த சிந்தனையில் ஜனாதிபதி முறையை ஒழிப்பதான உறுதிமொழி கூறப்படவில்லை என்பது உண்மையாகும். அது முன்னைய கொள்கைகளினைத் தலைகீழாகப் புரட்டிப்போட்டது. அப்போது மகிந்த சிந்தனை ஜனாதிபதி பதவியை ஒரு நம்பிக்கைப் பொறுப்பாக ஆணையளிக்கும்படி கேட்டது. ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கும் நீதித்துறைக்கும் பொறுப்புக்கூறுபவராக இருப்பார் என்று உறுதி கூறப்பட்டது. ஆனால் இந்த நம்பிக்கைப் பொறுப்புக்காலம் ஆறு ஆண்டுகளுக்கு மட்டுமேயாகும்.

மகிந்த சிந்தனை என்ற ஆவணத்தைக் கவனமாகப் படித்துப் பாருங்கள். 'எதிர்வரும் ஆறுவருட காலத்தில்', 'ஆறு வருடகால எல்லைக்குள்' என்ற தொடர்கள் அங்கே திரும்பத் திரும்ப வருவதைக் காணலாம். ஜனாதிபதி 'இரு தடவைகள்' பதவியில் இருப்பார் என்ற கால எல்லைக் கட்டுப்பாட்டை அந்த ஆணை நீக்கிவிடவில்லை. அங்கே கூறப்பட்டவை எதனைக் குறிப்பிட்டதென்றால் அவர் ஆறு ஆண்டு முடிவில் கௌரவமாக இளைப்பாறுவார், வரலாற்றில் நுழைந்து கொள்வார் என்பதே அவருக்கு தனிப்பட்ட நிலையிலும் பொது நிலையிலும் கௌரவமான வாழ்வு உறுதியாகும். இதுவே 2010 இன் உட்கிடையான வாக்குறுதி. அவர் விரும்பினால் அரசியலில் அவர் ஈடுபடலாம். இதனை யாரும் மறுக்கவில்லை. ஆனால் அவர் ஜனாதிபதியாக அரசியலில் தொடருதல் முடியாது. இவ்விதி பழைய ஜனாதிபதிகளுக்கும் பொருந்துவதாகும்.

2010 தேர்தல் பிரகடனம் ஜனாதிபதி பதவி ஒரு நம்பிக்கைப் பொறுப்பு என்ற கருத்தைப் பின்வருமாறு 38 ஆம் பக்கத்தில் கூறுகிறது.

'ஜனாதிபதியின் அதிகாரங்களை உபயோகிப்பதில் நான் மிகுந்த கவனமாக இருந்துள்ளேன். கடந்த காலங்களில் நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரம் தேர்தல்களைப் பின்போடுவதற்கு உபயோகிக்கப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட அரசாங்கங்களைக் கவிழ்ப்பதற்கு உபயோகிக்கப்பட்டது. நீதித்துறையின் செயற்பாட்டைத் தடுப்பதற்கும், அரசியல் கட்சிகளைத் தடைசெய்வதற்கும், ஊர்வலங்களைத் தடைசெய்வதற்கும், நாட்டினை வன்முறைக் கலாசாரத்திற்கு இட்டுச் செல்லவும் பயன்படுத்தப்பட்டது. அரச நிறுவனங்களை குறைந்த விலை மதிப்பில் விற்றல், குற்றவாளிகளுக்குப் பாதுகாப்பு வழங்குதல், நேர்மையற்றவர்களும் ஊழல் செய்பவர்களுமான வர்த்தகர்களுக்குச் சலுகைகளை வழங்குதல், ஜனாதிபதி அதிகாரத்தை உபயோகித்து நாட்டுக்குத் துரோகம் இழைக்கும் உடன்படிக்கைகளைச் செய்தல் போன்றனவும் நடைபெற்றன. நான் நாட்டை ஐக்கியப்படுத்துவதற்கே இந்த அதிகாரங்களை உபயோகித்தேன். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி பற்றிய திறந்த விவாதத்தை நடத்தி அதனை நம்பிக்கைப் பொறுப்பாக ஆக்க வேண்டும். பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக் கூறுதல், சட்டத்தின் முன் யாவரும் சமம் என்பதை உறுதி செய்தல், நீதித்துறைக்குப் பொறுப்புக் கூறுதல், நீதித்துறைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப்பொறுப்புக் கூறுவதாக அமையும் சட்டங்களை ஆக்குதல், நீதித்துறையோடு முரண்பாடு கொள்ளாது செயற்படுதல் ஆகிய பண்பு இவ்வதிகாரப் பயன் பாட்டில் வெளிப்பட வேண்டும்'.

கடந்த காலம் பற்றிய அவரது மதிப்பீடு சரியானது. ஆனால், தான் 'அதிகாரங்களை உபயோகிப்பதில் கவனத்தோடு' செயற்பட்டதாக அவர் கூறுவது ஒரு மிகைப்படுத்தல். அவர் காலத்தில் நடந்தவற்றைப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரம் (பாராளுமன்றத்) தேர்தல்களைப் பின்போடுவதற்கு உபயோகிக்கப்பட்டது என்று அவர் கூறியிருப்பது சரியானது. 1982 முதல் 1989 வரையான காலத்தில் இது நடைபெற்றது. ஆனால் தற்போதைய ஜனாதிபதி இதனிலும் மோசமான ஒரு வேலையைச் செய்துள்ளார். இரு தடவைகள் மட்டும் ஒருவர் ஜனாதிபதியாகப் பதவி வகிக்கலாம் என்ற விதியை இவர் நீக்கிவிட்டார். ஜனாதிபதி முறை ஒரு சர்வாதிகாரமாகவும் 'தெரிவு செய்யப்பட்ட முடிமன்னர்' முறையாகவும் மாறுவதற்கு இருந்த தடையை மகிந்த நீக்கிவிட்டார்.

## உலகம் போற்றும் மரபு

உலகின் ஜனாதிபதி முறையைக் கொண்டு வந்த நாடு ஐக்கிய அமெரிக்கா. அந்நாட்டின் அரசியல் யாப்பு பற்றிய நிபுணத்துவ அறிவுடையவரான பீட்டர் சூல்ட்ஸ் Governing America (அமெரிக்காவை ஆட்சி செய்தல்) என்னும் தனது நூலில் பின்வருமாறு குறிப்பிட்டார். 'ஜனாதிபதியாக இருந்த வாஷிங்டன் மிக முக்கியமான ஒரு முடிவை எடுத்தார். தாம் இரு தடவைக்கு மேல் ஜனாதிபதியாக இருக்கப் போவதில்லை என்ற முடிவே அதுவாகும். அமெரிக்காவின் அரசியல் யாப்பில் ஒரு ஜனாதிபதி எத்தனை தடவைக்கு மேல் பதவி வகிக்க முடியாது என்று ஒரு கட்டுப்படுத்தும் விதி கிடையாது. ஆனால் வாஷிங்டன் எடுத்த முடிவு அந்நாட்டில் ஜனாதிபதி என்ற பதவியின் இயல்பு பற்றிய விளக்கமாக அமைந்தது. மட்டுப்படுத்தப்பட்ட பதவிக் காலம் என்ற கருத்தை அவரது முடிவு நிலைபெறச் செய்தது. ஜனாதிபதியின் அதிகாரமும் செல்வாக்கும் மிகப்பெரியது ஆயினும் அவை மட்டுப்படுத்தப்பட்ட காலத்தைக் கொண்டவை என்ற கருத்தை வாஷிங்டன் நிலைபெறச் செய்தார்'.

வாஷிங்டனுக்குப் பின்னர் அமெரிக்காவில் ஜனாதிபதியாகப் பதவி வகித்தோரில் சிலர் இரு தடவைக்கு மேல் மூன்றாவது தடவையும் ஜனாதிபதியாக வருவதற்கு முயற்சித்தது உண்மையே ஆயினும் அவர்களின் முயற்சி தோல்வியில் முடிந்தது. அங்குள்ள கட்சிகளின் வேட்பாளர் நியமன முறையூடாகவே அவர்களின் முயற்சி தோற்கடிக்கப்பட்டது. பிராங்ளின் டிரூஸ் வெல்ட் என்ற ஜனாதிபதி மட்டுமே அமெரிக்காவில் மூன்றாவது தடவையும் தொடர்ந்து ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவர். இரண்டாம் உலக யுத்தத்தின் விதிவிலக்கான நிலைமையில் அவர் 1940-45 காலத்தில் மூன்றாம் தடவை பதவிவகித்தார். யுத்தம் முடிந்ததும் 1947 இல் இரு தடவை பதவி வகித்தல் என்ற விதி அமெரிக்காவின் யாப்பில் புகுத்தப்பட்டது. ரூஸ்வெல்ட் நான்காவது தடவையாகவும் 1944இல் போட்டியிட்ட போது தோமஸ் டுவி என்பவர் கூறியதை இங்கு குறிப்பிடலாம். 'நான்காவது தடவை அல்லது பதினாறு வருடங்கள் இப்பதவியில் இருக்க எண்ணுவது எமது சுதந்திரத்திற்கு நேர்ந்த ஆபத்து இதுவரை சந்தித்த ஆபத்துகள் யாவற்றிலும் மிகப்பெரிய ஆபத்து'. அமெரிக்காவில் ஜனாதிபதியின் பதவிக்காலம் நான்கு வருடங்கள். மகிந்த ராஜபக்ஷ 2017ஆம் ஆண்டில் பதவியில் 12 வருடங்களைப் பூர்த்தி செய்யப்போகிறார். அவர் மூன்றாவது தடவையும் ஜனாதிபதியாக இருக்க விரும்புகிறார் என்றால் தோமஸ் டுவியின் வார்த்தைகளில் 'பதினெட்டு வருடங்கள் எமது சுதந்திரத்திற்கு வந்துள்ள மிகப்பெரிய ஆபத்து' என்று கூறலாம்.

உலகில் மேற்குறித்த ஜனநாயக மரபுக்கு மாறான எதிர் மரபு ஒன்றும் இருக்கவே செய்கிறது. குறிப்பாக ஆபிரிக்காவில் இந்த ஜனநாயக விரோத மரபு உள்ளது. அரசியல் யாப்பு ஒன்றைக் கொண்டு வந்த வேளையில் தொடக்கத்திலேயே ஜனாதிபதியின் பதவிக்காலத்தை மட்டுப்படுத்தாமல் விட்டுள்ள உதாரணங்களும் உள்ளன. 1964 இல் கானா நாட்டில் குவாமே என்குருமா முதலாக மாலவியின் ஹேஸ்டிங்ஸ் பண்டா, மத்திய ஆபிரிக்கக் குடியரசின் பொக்கசா, உகண்டாவின் இடி அமின், சிம்பாப்வேயின் றொபேர்ட் முகாபே என்போர் இந்த மரபைத் தொடர்ந்தனர். இம்மரபு 'தெரிவு செய்யப்பட்ட முடிமன்னர்' என்ற முறைக்கு ஒப்பானது. அல்லது இதனை நிரந்தர சர்வதிகாரம் என்றும் கூறலாம். 33 வருடங்களாக ஆட்சியில் இருந்த முகாபே ஜனாதிபதித் தேர்தலில் 2008 ஆம் ஆண்டில் தோற்கடிக்கப்பட்டபோது அவர் தோல்வியை ஏற்க மறுத்தார். தேர்தல் ஆணைக்குழுவிடம் மீளவும் வாக்குகளை எண்ணும்படி செய்வித்து மீண்டும் தன்னை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தார்.

மகிந்த ராஜபக்ஷவும் பிறரும் இந்த மரபைப் பின்பற்ற விரும்புகிறார்கள் போலும். ஏனென்றால் இந்த மரபு உலகின் தென்பகுதியில் இருந்து வருகிறது. இது மேற்குலகில் இருந்து வந்ததல்ல. ஏகாதிபத்திய எதிர்ப்புப் பின்னணியில் உதித்த மரபு அல்லவா? இந்த ஜனநாயக விரோத மரபை அறநெறி, அரசியல், அரசியல் சட்டம் என்ற மூன்று நிலைகளிலும் நாம் எதிர்க்க வேண்டும். கால எல்லை என்ற கட்டுப்பாட்டை அரசியல் யாப்புத் திருத்தம் மூலம் நிறைவேற்றி விட்டார்களே என்று யோசிக்கக் கூடாது. இந்த மீறல் சமூக ஒப்பந்தம் ஒன்றையும் ஜனநாயக மரபையும் மீறும் செயல் ஆகும்.

## திருத்தத்திற்கு மக்கள் ஆணை உள்ளதா?

1982 ஆம் ஆண்டில் ஜே.ஆர்.ஜயவர்தன பாராளுமன்றத் தேர்தலைத் தள்ளிப் போடுவதற்கு சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி அதில் சம்மதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றார். அச்சர்வஜன வாக்கெடுப்பு ஒரு தில்லுமுல்லு வேலை என்பது வேறு விடயம். இப்போது 18 ஆவது திருத்தம் மூலம் இரு தடவை பதவிக் காலம் என்ற கட்டுப்பாட்டை நீக்கியுள்ளனர். இதற்குச் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை. இப்போது உயர்நீதிமன்றத்தைக் கொண்டே இந்த வேலை செய்விக்கப்பட்டுள்ளது. கலாநிதி சிராணி பண்டாரநாயக்க பிரதம நீதியரசர் என்ற முறையில் இவ்விடயத்தில் ஒரு தவறை இழைத்துவிட்டார். 18 ஆவது திருத்தம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு சர்வஜன வாக்கெடுப்பு இல்லாமல் நிறைவேற்றப்பட்டது. இவ்விடயம் குறித்து நாடுதழுவிய உரையாடல் இடம்பெறவில்லை. பிரதம நீதியரசரின் இத்தவறுக்கு அவர் உரிய விலையைக் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. இத்திருத்தத்தைச் செய்வித்த பின்னர் சிராணி பண்டாரநாயக்க தன் காலில் விழ வேண்டும் என்று ஜனாதிபதி எதிர்பார்த்தார்.

1994ஆம் ஆண்டு முதல் நாட்டு மக்கள் ஜனாதிபதி முறை மீது அதிருப்தி கொண்டுள்ளனர். முறையான ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டிருந்தால் மக்கள் பதவிக்காலத்தை இருதடவைகளுக்கு மேல் நீடிக்கும் திருத்தத்தைத் தோற்கடித்திருப்பார்கள். இருந்தாலும் வாக்காளர்களின் வாக்களிப்பில் கடந்த காலத்தில் நிலையான ஒரு போக்கு இருந்தது என்று நான் கூறவரவில்லை. ஜனாதிபதியும், ஐக்கிய முன்னணியும் மக்கள் ஆணையைப் பெறுக்கொள்ளாமலேயே இந்தக் கைங்கரியத்தைச் செய்துள்ளார்கள் என்பதே கவனிப்புக்குரிய விடயமாகும். அத்தோடு அவர்கள் கொடுத்திருந்த வாக்குறுதிகளையும், அவ்வப்போது சொல்லியவற்றையும் காற்றில் பறக்கவிட்டதும், 1994 முதல் எந்த நிலைப்பாட்டை எடுத்தார்களோ அதனை மீறியதுமான அறநெறிக்கு ஒவ்வாத அடாத செயலாகும்.

இரு தவணை என்ற எல்லையை நீக்கும் திருத்தமான 18 ஆவது அரசியல் யாப்புத் திருத்தம் சுதந்திர ஆணைக்குழுக்களை ஒழித்தல் என்பதுடன் சேர்த்துக் குழப்பமாக்கப்பட்டது. சிலர் அரசியல் காரணங்களுக்காக 17ஆவது திருத்தத்தை நீக்க வேண்டும் என விரும்பினர். அனுபவம் மிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட இந்த இரண்டையும் கலந்ததால் தான் குழப்பத்திற்கு



பிராங்ளின் டிரூஸ்வெல்ட் மாத்திரமே அமெரிக்காவில் மூன்றாவது தடவையும் தொடர்ந்து ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டவர். இரண்டாம் உலக மகா யுத்தத்தின் விதிவிலக்கான நிலைமையில் அவர் 1940-1945 காலகட்டத்தில் 3ஆம் தடவை பதவி வகித்தார். யுத்தம் முடிவடைந்ததும் இரு தடவைகள் பதவி வகித்தல் என்ற விதி அமெரிக்காவின் யாப்பில் 1947இல் புகுத்தப்பட்டது.

ஆளானார்களோ தெரியவில்லை. 18 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது தொடக்கம் அரசின் பங்காளிகளான மூன்று கட்சிகளான இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பன அதற்குத் தமது எதிர்ப்பையும் உடன்பாடின்மையையும் தெரிவித்து வந்துள்ளன. இத்திருத்தம் ஒரு அவசர மசோதாவாகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அது அவசர அவசரமாக மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் சட்டமாகவும் ஆக்கப்பட்டது. இந்தத் திருத்தத்தின் விளைவுகள் பற்றிப் பாராளுமன்ற உறுப்பினர்களோ, பொதுமக்களோ விவாதிப்பதற்கும் சிந்திப்பதற்கும் போதிய அவகாசம் வழங்கப்படவில்லை. ஐக்கிய மக்கள் முன்னணியில் உள்ளவர்களுக்குக் கூட இத்திருத்தம் பற்றி இறுதி நேரம் வரை எதுவுமே தெரியாதபடி இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ரி.ஹசன் அலி சென்ற வருடம் (சிலோன் ருடே, 27 ஆகஸ்ட் 2013) பின்வருமாறு கூறினார். 'உண்மையில் இத்திருத்தத்தை நான் ஆதரிக்கவில்லை. நான் ஆதரிக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டேன். இதை நான் பகிரங்கமாகக் கூறவிரும்புகிறேன்'. ஐக்கிய மக்கள் முன்னணிக்குள் அரசியல் எப்படி நடத்தப்படுகிறது என்பது பற்றிய பாரதூரமான குற்றச்சாட்டு இதுவெனலாம்.

### மறைந்திருக்கும் ஆபத்துகள்

பாராளுமன்ற ஜனநாயக முறையின் கீழ் பிரதமரே பிரதான நிறைவேற்று அதிகாரமுடையவர். அத்தகைய பிரதமர் இரண்டு தடவைக்கு மேலும் அப்பதவியில் தொடரும் சந்தர்ப்பங்கள் பல நாடுகளில் ஏற்படுவது உண்டு. பிரதமர் பதவி விடயத்தில் இரு தடவைகளுக்கு மேல் பதவியில் தொடர்வதில் கட்டுப்பாடுகள் இல்லை. இவ்வாறு கட்டுப்பாட்டை விதிக்காமல் விடுவதால் ஆபத்து ஏற்படுவதற்கும் இடம் இல்லை. அவ்வாறான ஆபத்து விதிவிலக்கான சந்தர்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பங்களில் மட்டுமே ஏற்படலாம். பாராளுமன்ற ஜனநாயக முறையின்படி நிர்வாக அதிகாரம் கொண்ட பலர் மத்தியில் பிரதமர் முதன்மையானவராக இருப்பார். அதிகாரம் அவரது கையில் குவிகிறது என்ற நிலை ஏற்பட்டால் அதனைக் கட்டுப்படுத்துதல் முடியும். எவ்வாறாயினும் பாராளுமன்ற முறை உள்ள நாடுகளில் கூட பிரதமர் பதவியில் இருப்பவர் இரு தடவைகளுக்கு மேல் பதவியில் தொடராது விலகிக்கொள்ளும் மரபு அதிகரித்துச் செல்கிறது.


ஜனாதிபதிமுறை முற்றிலும் வேறானது. ஒரு நபர் தொடர்ந்து பதவியில் இருப்பதில் பல ஆபத்துகள் உள்ளன. உகண்டாவின் ஜனாதிபதி யோவெரி முசவெனி ஆபிரிக்காவின் பிரச்சினை யாது? (What is Africa's Problem?) (2000) என்ற நூலில் இவ்வாறு கூறுகிறார். எந்தவொரு ஆபிரிக்கத் தலைவரும் 10 ஆண்டுகளுக்கு மேல் பதவியில் இருக்கக்கூடாது. ஒருவர் நீண்டகாலம் பதவியில் இருந்தாரானால் அவரை அகற்றுவது இயலாத காரியமாகிவிடும். இக்கூற்றில் உள்ள வேடிக்கை என்னவென்றால் இடி அமின், மில்டன் ஒபடோ ஆகியோரின் ஆட்சிக்குப்பின் ஜனாதிபதிக்கு வந்த முசவெனி அப்பதவியில் 27 ஆண்டுகள் தொடர்ந்து இருந்தார். அதிகாரத்தில் அமர்பவர்கள் கூறும் கூற்றுகளும் அவர்களின் அரசியலும் இவ்விதமான நகை முரண்கள் கொண்டவையாக உள்ளன.


இலங்கையின் இன்றைய நிலை மிகவும் ஆபத்தானது. உலகில் ஜனாதிபதி முறை உள்ள இலங்கை மட்டுமே 'நிறைவேற்று ஜனாதிபதி' என்ற பெயரைச் சூட்டிக் கொண்டுள்ளது. அது 'நிறைவேற்றல்' அல்லது 'அதிகாரம்' என்பதை அழுத்திக் கூறும் சொற்பிரயோகம். ஜனாதிபதி சட்டத்திற்கு மேலானவர் என்ற நிலையே காணப்படுகிறது. அவரை நீதிமன்றின் முன்னால் நிறுத்த முடியாது. ஜனாதிபதிக்கு எதிராகக் குற்றம் சுமத்திப் பதவிநீக்கம் செய்தல் நடைமுறைச் சாத்தியம் இல்லாதது. கலாநிதி என்.எம். பெரேரா அன்று இப்புதிய அரசியல் யாப்பைப் பற்றிய தனது விமர்சன முறையான பகுப்பாய்வில் இதனைக் குறிப்பிட்டார்.


பாராளுமன்றத்திற்கும் ஜனாதிபதிக்கும் இடையே அதிகாரப்பகிர்வு இல்லை. குறைந்தது இரண்டு நிறுவனங்களையும் பிரித்து வைக்கும் அம்சம் சிறிதேனும் இல்லை. 67 பேர் அமைச்சர்களாக உள்ளனர். பிரதி அமைச்சர்களையும் சேர்த்து 105 பேரை ஜனாதிபதி அமைச்சரவைக்குள் வைத்திருக்கிறார். நடைமுறையில் பாராளுமன்றத்தின் பெரும்பான்மையை தன் கையினால் இறுக்கிப் பிடித்து வைத்திருக்கிறார் இது மிகவும் மோசமான துஷ்பிரயோகம். ஏன் என்று பாருங்கள். பாராளுமன்றத்தின் வேலை என்ன? கொள்கை வகுத்தலும் சட்டங்களை ஆக்குதலும் தான் அதன் வேலை. அந்த வேலையைச் செய்ய முடியாததாகப் பாராளுமன்றம் உள்ளது. 18ஆவது திருத்தம் பாராளுமன்ற அலுவல்களில் ஜனாதிபதி பங்கு பெறவும் இடம்தருகின்றது. சரியான வார்த்தைகளில் கூறுவதாயின் பாராளுமன்ற அலுவல்களில் தலையிடுவதற்கு இத்திருத்தம் வழி செய்துள்ளது. இவ்வாறு தலையிடுதல் கூட தேவையில்லை. ஏனென்றால் பாராளுமன்றத்தின் மத்தியில் உள்ள ஆசனங்க











**அரசியல் யாப்பு ஒன்றைக் கொண்டு வந்த வேளையில் தொடக்கத்திலேயே ஜனாதிபதியின் பதவிக் காலத்தை மட்டுப்படுத்தாமல் விட்டுள்ள உதாரணங்களும் உண்டு. 1964இல் கானா நாட்டில் குவாமே என்குருமா முதலாக மாலவியின் ஹேஸ்டிங்ஸ் பண்டா, மத்திய ஆபிரிக்க குடியரசின் பொக்கசா, உகண்டாவின் இடி அமின், சிம்பாப்வேயின் ரோபட் முகாபே என்போர் இந்த மரபைத் தொடர்ந்தனர். இது தெரிவு செய்யப்பட்ட முடி மன்னர் என்ற முறைக்கு ஒப்பானது அல்லது நிரந்தர சர்வாதிகாரம் என்றும் கூறலாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளில் குழப்பம் செய்பவர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் இந்தப் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் சகோதரர் சபாநாயகராக உள்ளார்.

### மாற்றுவழி என்ன?

இலங்கையைப் பொறுத்தவரை கையறுநிலைக்கு இன்னும் நாம் வரவில்லை. இலங்கை சிம்பாப்வே அல்லது உகண்டா போன்று இல்லை என்றே நம்புகிறேன். இலங்கைக்குப் பலம் பொருந்திய ஜனநாயகப் பாரம்பரியம் உள்ளது. முப்பது வருட யுத்தத்தால் இந்த மரபுகள் பெருமளவிற்கு உருத்திரிந்துவிட்டன. ஜனாதிபதி முறையும் இந்த உருத்திரிபுக்கும் சிதைவுக்கும் காரணமாகும். யுத்தம் முடிந்து விட்டது. ஆனால் ஜனாதிபதிமுறை இன்னும் தொடர்கிறது. 1618-1648 காலத்தில் ஐரோப்பாவில் ஒரு முப்பதாண்டு யுத்தம் நடைபெற்றது. அந்த யுத்தத்தின் முடிவில் தான் உலக அரசு முறைமை சீர்திருத்தம் பெற்று நிலைபேறுடையதாயிற்று. அதுபோன்றதொரு நவீன சீர்திருத்தமும் மாற்றமும் 21 நூற்றாண்டு இலங்கைக்குத் தேவை. அதைக் கொண்டுவரும் சாத்தியம் இல்லை என்று நான் கூறமாட்டேன். அரசியல் கட்சிகளிடமும் மக்களிடமும் அதற்கான அரசியல் துணிவு வேண்டும். எம்மிடையே உள்ள இனத்துவ, சமய வேறுபாடுகளைக் கடந்த அரசியல் துணிவு (Political will) வேண்டும்.

உள்ளுறை ஆபத்துகள் பல உள்ளன என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். இன்னொரு யுத்தத்தைத் தொடக்கி இத்தவறான ஜனாதிபதிமுறையையும் குடும்ப நலன்களையும் பேணுவதற்கும் நீடிப்பதற்கும் சாத்தியம் உள்ளது. அப்படி நிகழுமானால் அது ஒரு மோசமான அவலநிலை ஆகும். அப்படியான நிலை உருவாகும் முன்னர் தற்போதுள்ள வாய்ப்புகள் எவையோ அவற்றை உபயோகிக்க வேண்டும். மோசமான நிலையை நோக்கிச் செல்வதைத் தடுத்து நிறுத்தி செயல் சாத்தியமானவற்றை இப்பொழுதே செய்ய

**ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு மக்களின் ஆணை கிடையாது. அதற்கான தார்மீக உரிமையும் அவருக்கு இல்லை. அவ்வாறு போட்டியிட முனைந்தால் அதனை அறநெறிக்கு ஒவ்வாதது என்று எதிர்க்க வேண்டும். அரசியல் ரீதியில் எதிர்த்து தோற்கடிக்க வேண்டும். நீதிமன்றம் வரை சென்று சட்ட முறையிலும் அதனை எதிர்க்க வேண்டும்.**

வேண்டும். 18 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்தபொழுது சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் அல்லது ஐக்கிய மக்கள் முன்னணிக்குள் யார் அடுத்துப் பதவிக்கு வருவது என்பது தொடர்பான போட்டி அப்போது இருந்ததாம். அப்போட்டியைத் தவிர்த்துக் கொள்வதற்காகவே அத்திருத்தம் கொண்டுவரப்பட்டது என்று ஒரு பேச்சு அடிபட்டது. திருத்தத்திற்குச் சார்பான இத்தகைய வாதமும் முன் வைக்கப்பட்டது. போருக்குப் பின்னரான நாட்டில் உறுதி நிலையைப் பேண இந்தப் போட்டியைத் தவிர்க்க வேண்டிய தேவை இருந்ததாகவும் கூறப்பட்டது. அப்படியானால் இப்போது அப்பிரச்சினை இல்லை என்பது தெளிவு. இப்போது யார் பதவிக்கு வரவேண்டும் என்பதை தீர்மானிப்பதை ஏன் தடுக்க வேண்டும்?

18ஆவது திருத்தம் ஜனாதிபதியை நீங்கள் மூன்றாவது தடவையும் பதவியில் இருக்க வேண்டும் ஆகவே போட்டியிடுங்கள் என்று கட்டாயப்படுத்தவில்லை. 2010 ஆம் ஆண்டில் அவரை மக்கள் தெரிவு செய்த போது அதுவே அவரது கடைசியான பதவிக்காலம் என்ற எண்ணத்தோடு தான் மக்கள் வாக்களித்தனர். அவர் தேர்தலில் மீண்டும் போட்டியிட வேண்டும் என்று ஒரு மக்கள் ஆணை கிடையாது. இதை மீண்டும் நான் வலியுறுத்திக் கூறவேண்டும். அவர் ஒரு சமூக ஒப்பந்தத்தை மீறுவதற்கு எண்ணுகிறார். இது தார்மீக அடிப்படையில் தவறானது. அவர் ஒரு நம்பிக்கைப் பொறுப்பாளர் மட்டுமே. அவ்வாறானால் ஜனாதிபதி பதவியின் உடைமை அவரிடம் இல்லை. அதை இன்னொருவரிடம் பொறுப்புக் கொடுத்துவிட்டு விலகவேண்டும். ஜனநாயகச் செயல்முறை ஊடாக இன்னொருவரைத் தெரிவு செய்ய வேண்டும்.

இந்த ஜனநாயகச் செயல்முறையில் இரண்டு முக்கிய கட்டங்கள் உள்ளன. முதலாவது சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயகக் கட்சி முதலிய கட்சிகள் தனித்தனியாகவோ, பிறகட்சிகளுடன் சேர்ந்தோ தமது ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்தல். இரண்டாவது கட்டம் நீதியான சுதந்திரமான ஜனாதிபதித் தேர்தலை நடத்துதல் வேண்டும். (விளையாட்டுப் போட்டிகளில் கடைப்பிடிக்கப்படும் நியாயமான, பக்கச்சார்பற்ற நடைமுறையைக் குறிக்கும் உருவகமான 'லெவல் பிளேயிங் பீல்ட்' (சமதரையான விளையாட்டுத் திடல்) சமூக வாழ்க்கையிலும், அரசியல் களத்திலும் கூட வேண்டும்) சிறிலங்கா சுதந்திரக்கட்சி இன்றும் தனது ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை முடிவு செய்யவில்லை. சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மூத்த தலைவர்களுக்கு இத்தெரிவில் முக்கிய இடம் இருக்க வேண்டும். மேலும் கட்சி அமைப்பாளர்களும் பங்கெடுக்க வேண்டும். இப்பொழுதே அவர்கள் செயலில் இறங்காவிடில் அவர்கள் பின்தள்ளப்படுவர். பின்னர் பாராளுமன்றத் தேர்தலுக்கு வேட்பாளர்களை நியமிப்பதிலும், விருப்புவாக்குகள் விடயத்திலும் மூத்த தலைவர்களும் கட்சி அமைப்பாளர்களும் ராஜபக்ஷ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவாசிகளால் ஒதுக்கித் தள்ளப்பட்டு விடுவார்கள்.

எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டார நாயக்க, டி.ஏ.ராஜபக்ஷ போன்ற தலைவர்களால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தொடக்கப்பட்டது. இடையிடையே சில திரிபுகளும் குழறுபடியான போக்குகளும் இருந்துள்ள போதும் இக்கட்சிக்கு நீண்ட ஜனநாயகப் பாரம்பரியம் உள்ளது. இப்போது இந்தப் பாரம்பரியத்தை மீள் உயிர்ப்பிப்பதற்கும் கட்சியைப் பலப்படுத்துவதற்குமான தேவை எழுந்துள்ளது. கடந்த காலத்தில் எதிர்பாராத நிகழ்வுகள் நடந்தபொழுது கட்சி பொருத்தமான ஒரு தலைவரைத் தேடிக்கொள்வதில் சிக்கல்களை எதிர்நோக்கியது. 1959 இல் பண்டார நாயக்க கொலைசெய்யப்பட்டபோது இப்படியான நெருக்கடி ஒன்று தோன்றியது. ஆனால் இதுபோன்ற சிக்கல்கள் இப்போது இல்லை.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி நீண்ட காலம் நாட்டை ஆட்சி செய்துள்ளது. அக்கட்சியில் இரண்டாம் நிலைத் தலைவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் அமைச்சுகளை நிர்வகித்த அனுபவம் உடையவர்கள். கட்சியின் கொள்கைகள், மரபுகள், என்பனவற்றின்படியும், முக்கியமாக இன்று நாட்டில் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் தேவையையும் மனதில் கொண்டு யாரை அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்க வேண்டும் என்ற முடிவை எடுப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குத் தகுதி உண்டு. அதுபோன்றே ஐக்கிய மக்கள் முன்னணிக்கும் தகுதி உண்டு. ஆகையால் இன்னொருவருக்கு அதிகாரப் பொறுப்பைக் கையளித்து விலகிச் செல்லாவிட்டால் அது ராஜபக்ஷவிற்குக் கௌரவக் குறைவான செயலாக அமையும்.

எதிர்க்கட்சியின் பொதுவேட்பாளராக யாரை நிறுத்தலாம் என்று என்னை யாராவது கேட்டால் நான் மறுபேச்சின்றி கரு ஜயசூரியவின் பெயரைச் சொல்வேன். அதிகளவு சர்ச்சையைக் கிளப்ப முடியாத தெரிவு என்றால் அவரைத்தான் குறிப்பிடலாம். பொதுவேட்பாளருக்குத் துணையாக முறைசாரா வகையில் இரு துணைத் தலைவர்களையும் வைத்துக்கொள்ளலாம். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இருந்து ஒருதமிழர் (மலையகத்தைப் பிரதிநிதித்துவம் செய்பவர்) முஸ்லிம் ஒருவர், மக்கள் விடுதலை முன்னணி, ஜனநாயகக்கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இவற்றில் இருந்து ஒருவர் என்ற வகையில் வைத்துக்கொள்ளலாம். இதுவிடயத்தில் கட்சிகள் ஒரு உடன்பாட்டுக்கு வரவேண்டும்.

ஜனாதிபதி ராஜபக்ஷவிற்கு அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக போட்டியிடுவதற்கு மக்களின் ஆணை கிடையாது. அதற்கான தார்மீக உரிமையும் அவருக்கு இல்லை. இதனை எடுத்துச் சொல்வதே எனது இக்கட்டுரையின் நோக்கம். அவர் அவ்வாறு போட்டியிட முனைந்தால் அதனை அறநெறிக்கு ஒவ்வாதது என்று எதிர்க்க வேண்டும். அதனை அரசியல் ரீதியில் எதிர்த்து தோற்கடிக்க வேண்டும். நீதிமன்றம் வரை சென்று சட்டமுறையிலும் அதனை எதிர்க்கவும் வேண்டும்.

2010 ஆம் ஆண்டில் ராஜபக்ஷ 'நான் சொன்னதைச் செய்வேன்; நான் செய்ய உத்தேசித்திருப்பதைச் சொல்வேன்' என்று முழக்கமிட்டார். மூன்றாம் தடவையும் போட்டியிடுவேன் என்று அவர் சொல்லவில்லை. 'ஆட்சியாளர் என்பவர் ஒரு தற்காலிக நம்பிக்கைப் பொறுப்பாளர். உங்கள் குழந்தைகளின் மரபுரிமையின் உடைமையாளன் அல்ல' என்றும் சொல்லப்பட்டது.

ஆதலால், 'தற்காலிக நம்பிக்கைப் பொறுப்பாளர்' வெளியேறிச் செல்ல வேண்டும். ■

---

***(9ஆம் பக்கத் தொடர்ச்சி...)***

அனுபவிக்கின்ற விசேட சலுகைகள் மீது அக்கட்சி மேற்கொண்ட தாக்குதல்களும் மாற்றத்தைக் காண ஏங்கிக் கொண்டிருக்கும் வறிய தென்னாபிரிக்கர்கள் மத்தியில் அதற்கு செல்வாக்கை அதிகரித்திருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

இன்னும் 5 வருடங்களுக்குப் பிறகு நடைபெறப்போகின்ற அடுத்த பொதுத் தேர்தலில் வாக்களிக்கப் போகிறவர்களில் பெரும்பாலானவர்கள் இன ஒதுக்கல் ஆட்சியின் முடிவுக்குப் பிறகு பிறந்த 'சுதந்திரமான தலைமுறையைச்' சேர்ந்தவர்களாகவே இருக்கப் போகிறார்கள். இன ஒதுக்கலின் கொடுமைகளினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டிராத இந்தத் தலைமுறையைச் சேர்ந்த இளம் வாக்காளர்கள் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் மீதான விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டு அல்ல, அதன் அரசாங்கத்தின் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டே தங்கள் தீர்மானங்களை எடுக்கப்போகிறார்கள்.

அதனால் அந்தத் தலைமுறையினரின் எதிர்பார்ப்புகளுக்கு ஈடுகொடுக்கக்கூடிய முறையில் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் அதன் கொள்கைகளையும் செயற்திட்டங்களையும் மாற்றியமைக்காவிட்டால் தேர்தல்களில் எதிர்காலத்தில் பாரிய பின்னடைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்பதிற் சந்தேகமில்லை.

ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸிற்குள் முன்னரைப் போலன்றி தற்போது பல்வேறு சீரழிவுத்தனங்கள் தலைதூக்கியிருப்பதாகவும் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. சீரழிவுத்தனங்களைத் தடுத்துநிறுத்த தென்னாபிரிக்கர்கள் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸுக்கு இன்னொரு சந்தர்ப்பத்தை வழங்கியிருக்கிறார்கள். அதிகரித்துவரும் வேலையில்லாத் திண்டாட்டம், குற்றச் செயல்கள் மற்றும் ஊழல் மோசடிகளைக் கட்டுப்படுத்தக் கூடியதாக நல்லாட்சியை வழங்குவதற்கான வழிமுறைகளில் காங்கிரஸின் தலைவர்கள் அக்கறை காட்டாவிட்டால் நாளடைவில் பெரிய நெருக்கடிகள் உருவெடுக்கக் கூடிய ஆபத்து இருக்கிறது. ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

தன்னைப்பற்றி தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வட்டாரத்திலிருந்து வெளிப்படுத்தப்படும் ஒரு அபிப்பிராயத்தை மறுதலிப்பதற்காக தானே அறிக்கையை வெளியிட வேண்டிய இக்கட்டு நிலை வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு.



யதீந்திரா



# விக்னேஸ்வரனும் ஜனாதிபதித் தேர்தலும்

சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போது, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது, எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக, வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் விக்னேஸ்வரனை நிறுத்த வேண்டுமென்னும் ஒரு முன்மொழி இருக்கிறது. இது குறித்து, ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பி.யும் என்ன நினைக்கின்றன? என்று கேள்வி எழுப்பியிருந்தார். இதே ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய மனோகணேசனும் இதற்கு ஆதரவாக பேசியதுடன் எதிர்க்கட்சியினர் விக்னேஸ்வரன் ஒரு தமிழர் என்பதை காரணம்காட்டி, இந்த முன்மொழிவை நிராகரிக்க மாட்டார்கள் என்று தான் நம்புவதாகக் குறிப்பிட்டிருந்தார். இது ஊடக மட்டத்தில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இம்மாதம் 7ஆம் திகதி ராவய என்னும் சிங்கள பத்திரிகையில் அரசியல் ஆய்வாளர் குசல் பெரேரா எழுதியிருந்த கட்டுரை ஒன்றிலேயே இந்தக் கருத்தை முதன் முதலாக வெளியிட்டிருந்தார். இதனை அடியொற்றியே சுமந்திரன் இந்த விடயத்தை ஊடக அரங்கிற்குக் கொண்டு வந்திருந்தார்.

கூட்டமைப்பில் இரா.சம்பந்தனுக்கு அடுத்து அபிப்பிராயங்களைச் சொல்ல வல்லவராக ஊடகங்களால் நோக்கப்படும் சுமந்திரன், இவ்வாறானதொரு அபிப்பிராயத்தை வெளிப்படுத்தியிருந்ததை, ஊடகங்கள் அனைத்தும் கூட்டமைப்பின் உத்தியோக பூர்வமான நிலைப்பாடு போன்றே அறிக்கையிட்டிருந்தன. ஆனால், சுமந்திரனின் மேற்படி அறிவிப்பு தொடர்பில் கூட்டமைப்பின் ஏனைய தலைவர்களோ ஆகக் குறைந்தது தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா கூட அறிந்திருக்கவில்லை. ஆனால் சுமந்திரன் மேற்படி கருத்தை வெளிப்படுத்தியிருந்த மறுதினமே வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் அம் முன்மொழிவை மறுதலிக்கும் வகையில் ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தார். தன்னிடம் அவ்வாறான எண்ணம் எதுவுமில்லை என்று தெரிவித்திருந்த விக்னேஸ்வரன், இவ்வாறான கருத்துகளை எண்ணி சிரிப்பதா அல்லது அழுவதா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் விளங்கவில்லை என்றவாறு தன் அறிக்கையில் தெரிவித்திருந்தார். இதன் மூலம் விக்னேஸ்வரனுடைய அரசியல் பிரவேசத்திற்குப் பின்னர் அவர் பலரால் சிரிக்கப்படும் நிலைக்கும் அதனை எண்ணி அவர் அழ வேண்டிய நிலையில் இருப்பதையும் மறைமுகமாக ஏற்றுக்கொண்டிருக்கிறார் போலும்.

ஒரு அரசியல் ஆய்வாளர் எத்தகைய அபிப்பிராயங்களையும் முன்வைக்க முடியும். ஆனால் அவ் அபிப்பிராயங்களை அரசியல் தலைவர்கள் என்போர் ஆழமான பரிசீலனையின் பின்னரே, பொது அரங்கிற்குக் கொண்டுவர வேண்டும். சுமந்திரன் ஏன் இவ்வாறானதொரு விடயத்தை பொது அரங்கிற்குக் கொண்டுவந்தார் என்பதை ஊகிப்பது கடினமாயினும் கூட, இது ஒரு முதிர்ச்சியற்ற வெளிப்பாடு என்பதில் இரு வேறு கருத்தில்லை. ஆகக் குறைந்தது இது போன்ற கருத்துகளை பொது அரங்கத்திற்குள் கொண்டுவரும் போது, எவரது பெயர் முன்மொழியப்பட்டதோ, அந்த குறித்த நபரின் அனுமதியாவது பெறப்பட்டிருக்க வேண்டும். அதேவேளை கூட்டமைப்பின் ஏனைய தலைவர்களுடன் கலந்துரையாடி ஒரு பொது இணக்கப்பாட்டிற்கு வந்த பின்னரே இது போன்றதொரு அபிப்பிராயத்தை வெளிப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் சுமந்திரன் எது குறித்தும் சிந்திக்காமல் இவ்வாறானதொரு அபிப்பிராயத்தை வெளியிட்டதன் மூலம் எதிர்க்கட்சிகளை ஒரு சிக்கலுக்குள் தள்ளிவிட்டிருக்கின்றார். பெரும்பான்மை இன மக்களான சிங்கள மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒருவரே ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் பதிலளித்திருக்கின்றன. இது சுமந்திரனும் அறியாத ஒன்றல்ல. ஆனால் மேற்படி நடவடிக்கையால் பரிகசிப்புக்குரிய ஒருவராக ஆகியிருப்பது வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனே அன்றி வேறு எவருமல்லர். விக்னேஸ்வரன் இதனை எந்தளவு உணர்ந்திருக்கிறார் என்பதற்கான பதில் அவரிடம் மட்டுமே உண்டு.

**சுமந்திரன் அரசியலுக்குள் கொண்டுவரப்பட்ட காலத்தில் மிகுந்த நிதானத்துடனும் தெளிவுடனும் பேசக்கூடிய ஒருவராகவே தன்னை நிலை நிறுத்தியிருந்தார். ஆனால் நாளடைவில் அவரும் மெதுமெதுவாக நிதானத்தை விடுத்து கற்பனாவாத சுலோகவாதிகளின் அரசியலின் பக்கம் சாயத் தொடங்கி விட்டார் போல தெரிகிறது**

ஒரு ஆட்சிமாற்றத்திற்கான உரையாடல் தெற்கு அரசியல் வட்டாரங்களில் சில மாதங்களாகவே நடைபெற்று வருகிறது. ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை விழுத்துவதோடு மட்டுமல்லாது, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையும் இல்லாமலாக்கப்பட வேண்டும் என்பதே மேற்படி உரையாடல்களின் அடிப்படையாக இருக்கிறது. இந்த அடிப்படையில் முதலில் தெற்கில் செல்வாக்குமிக்க சோபித தேரரை நிறுத்துவது தொடர்பில் சிந்திக்கப்பட்டிருந்தது. இதற்கு சோபித தேரரும் இணக்கம் தெரிவித்திருந்தார். அதிகாரத்தில் தான் இருக்கப் போவதில்லை என்று தெரிவித்திருந்த சோபித தேரர், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாமலாக்குதல் என்னும் ஒரு தனித்த இலக்கின் (Single task) அடிப்படையில் போட்டியிடுவதற்கு ஆதரவு தெரிவித்திருந்தார். இதன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவின் பெயரும் இந்த இலக்கிற்காக சிலரால் பிரேரிக்கப்பட்டிருந்தது. ஆனால் சந்திரிக்கா இது குறித்து திட்டவட்டமாக எதுவும் தெரிவிக்காவிட்டாலும் கூட, அவரது பெயரும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

ஆனாலும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவரும் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்து நின்று, தோற்கடிக்கும் ஆற்றலுள்ள ஒருவராக இதுவரை எவரும் தென்படவில்லை. ஒப்பீட்டளவில் ராஜபக்ஷவின் முன்னைய செல்வாக்கில் சிறிது வீழ்ச்சி ஏற்பட்டிருந்தாலும் கூட, ஒரு ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஆற்றல் எதிரணிகளிடம் இருக்கிறதா என்பது கேள்விக்குறியே. இது பற்றி ஒரு முறை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் பேசிக் கொண்டிருக்கும் போது, அவர் ஒரு விடயத்தை குறிப்பிட்டிருந்தார். சந்திரிக்கா ஒரு பொது வேட்பாளராக வருவார் என்பது சந்தேகமே. ஏனெனில் அவர் தோல்வியடைய விரும்பமாட்டார். வெல்லக்கூடியதொரு சூழல் இருந்தாலொழிய அவர் தேர்தலில் போட்டியிடமாட்டார். சம்பந்தன் இவ்வாறு ஆழமாக சிந்திக்கும் போது, சுமந்திரன் ஏன் அரசியல் முதிர்ச்சியற்ற ஒருவராக நடந்து கொண்டிருக்கிறார் என்பது விளங்கவில்லை. சுமந்திரனுக்கு வேறு ஏதேனும் உள்நோக்கம் இருந்திருப்பின் அது வேறு விடயம். இன்றைய சூழலில் தெற்கில் மகிந்த ராஜபக்ஷ என்னும் ஒரு திடகாத்திரமான சிங்கள மனிதருக்கு முன்னால் நிற்கக்கூடிய தகுதிநிலை ஒருவருக்கு இருக்கிறதென்றால், அது ஒப்பீட்டளவில் சந்திரிக்கா குமாரதுங்கவாக மட்டுமே இருக்க முடியும். பாரம்பரியம் மிக்க அரசியல் குடும்பப் பின்னணி, முன்னாள் ஜனாதிபதி என்னும் அடையாளம், இடதுசாரி மற்றும் தாராளவாத சக்திகளின் ஆதரவை இலகுவில் திரட்டக்கூடிய ஆற்றல், மேலும் விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிர்தப்பியவர். இப்படிப்பட்ட பின்னணியுடன் தெற்கில் வேறு எவரையும் காண முடியாது. ஆனால் அப்படிப்பட்ட ஒருவர் கூட தோல்வியடைய விரும்பமாட்டார் என்கிறார் சம்பந்தன். இப்படிப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொரு சூழலில் அண்மையில்தான் அரசியலில் அரங்கேற்றம் செய்த விக்னேஸ்வரனை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவது குறித்து சுமந்திரன் பேசுகின்றார் என்றால் இதனை என்னவென்பது. சுமார் 65 வருடகால அரசியல் அனுபவத்திற்கு பின்னரும் கூட நாம் வெறும் வீண் ஜம்பங்களில் திருப்தியுற முற்படுகின்றோமா?

சுமந்திரன் அரசியலுக்குள் கொண்டுவரப்பட்ட காலத்தில் மிகுந்த நிதானத்துடனும், தெளிவுடனும் பேசக்கூடிய ஒருவராகவே தன்னை நிலைநிறுத்தியிருந்தார். ஆனால் நாளடைவில் சுமந்திரனும் மெதுவாக நிதானத்தை விடுத்து, கற்பனாவாத சுலோகவாதிகளின் அரசியலின் பக்கமாகச் சாயத் தொடங்கினார். அடுத்து வரவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெல்ல வேண்டிய நிலை இருப்பதும் இதற்கொரு காரணமாக இருக்கலாம். தற்போது தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற சுமந்திரன் அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான தயார்படுத்தல்களில் இறங்கிவிட்டார். இத்தகையதொரு சூழலில்தான் ஒரு ஊடக பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றார். ஆனால் இவ்வாறான பரபரப்புக் கோஷங்கள் தமிழர் அரசியலின் முதிர்ச்சியற்ற தன்மைக்கான சான்றாக அமையுமேயன்றி, வேறு எந்தவொரு உருப்படியான மாற்றங்களுக்கும் வித்திடாது. ஆனால் மேற்படி பரபரப்பால், தமிழர் அரசியலில் விக்னேஸ்வரனின் இடம் நகைப்புக்கிடமான ஒன்றாகிக் கொண்டிருக்கிறது என்பது மட்டும் உண்மை. ஒரு ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர் என்னும் உயர்ந்தவொரு ஸ்தானத்தில் நின்றுகொண்டிருந்த விக்னேஸ்வரன், இன்று அரசியலில் மிகவும் மலினப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றார். தன் தொடர்பில் கூட்டமைப்பு வட்டாரத்திலிருந்து வெளிப்படுத்தப்படும் ஒரு அபிப்பிராயத்தை மறுதலிப்பதற்காக, தானே அறிக்கை வெளியிட வேண்டிய இக்கட்டு நிலை இன்று விக்னேஸ்வரனுக்கு ஏற்பட்டிருக்கிறது. இது எதனைக் காட்டுகின்றது? விக்னேஸ்வரன் ஒரு திடகாத்திரமான தலைவராக இருக்கிறார் என்பதையா அல்லது வேறு எதையுமா? பதில் விக்னேஸ்வரனின் எதிர்கால செயற்பாடுகளிலேயே தங்கியிருக்கிறது. ■

---

*(10ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

உதவியில் ஒரு பகுதியைத் தடுப்பதற்கான முயற்சிகளில் அமெரிக்க காங்கிரஸின் உறுப்பினர்கள் இறங்கியிருக்கிறார்கள். ஆனால், தாக்குதல் ஹெலிகொப்டர்களை எகிப்துக்கு வழங்குவதற்கு ஒபாமா நிருவாகம் அனுமதியளித்திருக்கிறது.

மேற்கூறப்பட்ட வழக்குகளில் பிரதிவாதிகளின் மதநம்பிக்கையை அல்லது அரசியல் பின்னணியைக் கருத்திலெடுக்காமல் தண்டனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. பதில் ஜனாதிபதி அட்லி மன்சூரின் இராணுவ ஆதிக்கத்திலான அரசாங்கம் சகல எதிர்ப்புகளையும் ஒடுக்குவதில் முழுவீச்சில் நாட்டங்கொண்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இது ஹொஸ்னி முபாரக்கின் 30 வருடகால கொடுங்கோன்மை ஆட்சிக்கு எதிராக 2011 ஜனவரியில் கிளர்ந்தெழுந்து அந்த ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்த எகிப்தியர்களுக்கு மாத்திரமல்ல, சகல எகிப்தியர்களுக்குமே செய்யப்படுகின்றன துரோகமும் வஞ்சனையுமாகும். ■



உள்நாட்டு அரசியல்



# அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைக்க நாடு தழுவிய இயக்கம் தேவை



பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க எம்.பி.

பாராளுமன்ற உறுப்பினர் வசந்த சேனநாயக்க அமைச்சரவையின் அளவை 30 ஆக மட்டுப்படுத்த வேண்டும் என்று ஒரு அரசியல் யாப்புத் திருத்தப் பிரேரணை கொண்டு வந்திருக்கிறார். கடந்த சில மாத காலத்திற்குள் ஏற்பட்ட உற்சாகமூட்டும் சாதகமான அரசியல் விடயம் என்றால் அவரின் இப்பிரேரணையே ஆகும் என்று கூறலாம். பாராளுமன்ற தெரிவுக்குழுவிற்கு அவர் சமர்ப்பித்த ஆலோசனைகளில் இத்திருத்தப் பிரேரணை அடங்கியுள்ளது. இளைஞர்கள் குழு ஒன்றுடன் கலந்தாலோசித்த பின் அவர் இக்கருத்தை முன்வைத்துள்ளார். பாராளுமன்ற தெரிவுக்குழு இன்றைய நிலையில் சாதகமான எந்த விளைவையும் கொண்டுவரப் போவதில்லை. ஆகக்குறைந்தது, நாட்டுக்கு மிக அவசியமான இந்தத் திருத்தத்தையாவது கொண்டு வரலாமே என்பது தான் பாராளுமன்ற உறுப்பினர்களின் நோக்கம்.

வசந்த சேனநாயக்கவின் இந்த முன்மொழிவை ஆதரித்து நாட்டின் அரசியல் குழுக்கள் அனைத்தும் ஒன்று திரள வேண்டும் என்று நம்புவோமாக. கடந்த காலத்தில் சிறுபான்மைக் கட்சிகள் தமது சொந்த நலன்களுக்கு எவை ஏற்றனவோ அவற்றை மட்டும் ஆதரிக்கும் போக்கைக் கடைப்பிடித்தன. தேசம் முழுமைக்குமாக நன்மை தரக்கூடிய விடயங்களையிட்டு சிறுபான்மைக் கட்சிகள் அக்கறை காட்டாமல் விடுவது பாதகமான விளைவுகளைத்தரக்கூடிய விடயம். இதனைச் சாட்டாக வைத்துக் கொண்டு தீவிரவாதிகள், சிறுபான்மையினருக்கும் தேசத்திற்கும் பொதுவான நலன்களில் அக்கறையில்லை என்ற பிரசாரத்தை நடத்த முடியும். அதன் அர்த்தம் யாதெனில், சிறுபான்மை மக்களது கட்சிகள் பிரிவினைவாதத்திலேயே அக்கறை கொண்டுள்ளன என்பதாக தீவிரவாதிகளால் விளக்கப்பட முடியும். சிறுபான்மையினர் நாடு முழுமையுமாகப் பரந்திருக்கிறார்கள். ஆகையால் இப்படிக் கூறுவது அர்த்தமற்ற அபத்தமான ஒரு கருத்தாகும். ஆயினும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நடத்தை சிலவேளைகளில் நாடுமுழுமையையும் தழுவிய சீர்திருத்தங்களில் தமக்கு அக்கறை கிடையாது என்ற பாங்கில் அமைந்திருப்பதையும் காணலாம்.

சேனநாயக்க கொண்டு வந்த ஆலோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சனை நடைமுறைக்கு வந்தால் அது சிறுபான்மையினருக்கும் நன்மையாக அமையும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இன்று அமைச்சரவைக் கூட்டங்களில் சிந்திக்கும் திறன் உள்ளவர்கள் சிறு எண்ணிக்கையினராக இருப்பதால் கூச்சலிடும் பெரும்பான்மைவாத உணர்வாளர்களின் சத்தத்தினால் அடங்கிப் போய்விடுகின்றனர். அமைச்சரவையை 30 ஆகக் குறைத்தால் சிறுபான்மையினரின் எண்ணிக்கையின் வீதாசாரம் அமைச்சரவைக்குள் 20% ஆக இருக்கும் வாய்ப்பு உள்ளது. இச்சிறுபான்மை இன அமைச்சர்களுக்குக் கூட்டாளிகளாக திறமையும் ஆற்றலும் உள்ள தனி நபர்கள் பலரும் அமைச்சரவைக்குள் இருப்பார்கள். இன்றைய சூழ்நிலையில் அமைச்சரவை முடிவுகளை எடுப்பதில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொள்கின்றனர். அங்கு விடயங்கள் பற்றிய விரிவான விவாதங்கள் இடம் பெறுவதில்லை.

அமைச்சரவையின் அளவைக் குறைப்பதால் நாடு திறமையான முறையில் ஆட்சி செய்யப்படும். சிறுதொகை அமைச்சர்கள் இருக்கும் போது விவாதத்தின் தரம் உயர்ந்ததாக இருக்கும். பல்வேறுபட்ட கருத்துகள் வெளிவருவதற்கான வாய்ப்பும் இருக்கும். நான் சார்ந்துள்ள லிபரல் கட்சி முப்பதையும் விட இன்னும் குறைவான உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவையையே தெரிவுக்குழுவிற்குச் சிபார்சு செய்தது. இருப்பினும் சேனநாயக்க கொண்டு வந்த திருத்தத்தை ஆதரிப்பதே இன்றைய நிலையில் நல்லது என்று நாம் முடிவு செய்தோம்.

ஜனாதிபதியும் முப்பது என்ற தொகையையே விரும்புவார் எனக் கருதுகிறேன். நான் பல தடவைகளில் பல்வேறு விடயங்கள் பற்றி அவருக்கு முறைப்பாடு செய்த பொழுது அவர் இந்தளவு எண்ணிக்கையுள்ள அமைச்சரவையை வைத்துக் கொண்டு நான் எதைச் செய்ய முடியும் என்று தம் இயலாமையைத் தெரிவிப்பதுண்டு. இவர் இவ்வாறு கூறிய போதும் அளவுக்கு அதிகமாக அமைச்சர்களின் எண்ணிக்கையை உயர்த்திச் சென்ற தவறுக்கு அவரே காரணம் என்று வாதிக்க இடம் உள்ளது. அவரின் பக்கத்து நியாயமாக ஒன்றைச்சொல்ல முடியும். பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்து வரும் அழுத்தத்தை அவரால் சமாளிக்க முடியாது. அமைச்சர் பதவிகளை வழங்கி அவர்களைத் திருப்திப்படுத்தாவிட்டால் அவர்கள் மறுபக்கத்தில் இருந்து கிடைக்கக் கூடிய நன்மைகளால் கவரப்பட்டு எதிர்க்கட்சிக்குத் தாவிக் குழப்பத்தை ஏற்படுத்துவர். ஆனால் அரசியல் யாப்பு அமைச்சரவை எண்ணிக்கையை கட்டுப்படுத்துமாக இருந்

**அமைச்சரவையின் அளவைக் குறைப்பதால் நாடு திறமையான முறையில் ஆட்சி செய்யப்படும். சிறு தொகை அமைச்சர்கள் இருக்கும்போது விவாதத்தின் தரம் உயர்ந்ததாக இருக்கும். பெரிய அமைச்சரவையை வைத்துக்கொண்டு தன்னால் எதைச் செய்ய முடியும் என்று தனது இயலாமையை ஜனாதிபதி கூட தெரிவிப்பதுண்டு**



வசந்த சேனநாயக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் கோபம் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தாம் விரும்பியவாறு பதவிகளை கேட்டுப்பெற்றுக் கொள்ள முடியாது. ஆகையால் எதிர் காலத்தில் இப்படியான பிரச்சினை இருக்காது. தமக்குக் கிடைத்த பாரா ளுமன்ற உறுப்பினர் பதவியுட னேயே அவர்கள் தம்மைத் திருப்திப் படுத்திக்கொள்ள வேண்டியிருக்கும்.

அமைச்சர்கள் ஆகும் வாய்ப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இல்லாவிட்டால் தாம் பயனுள்ள பணிகள் எதனையும் செய்ய முடிய வில்லையே என்று அவர்கள் உணரு வார்கள் அல்லவா என்றொரு கேள்வி உள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் அவர்கள் செய்வதற்கு ஏராளமான பணிகள் உள்ளன என்று இக்கேள் விக்குச் சேனநாயக்க பதில் கூறுகி றார். இன்று பாராளுமன்ற உறுப்பி னர்களில் பெரும்பாலானோர் பாரா ளுமன்ற அங்கத்தவர் என்ற முறை யில் தமக்குள்ள கடமைகளை முறை யாக நிறைவேற்றுவதில்லை. ஏனெ னில் இப்போது சட்டங்களை ஆக்கும் பணியை நிர்வாகத்துறையே செய்கி றது. சட்டங்களை நிறைவேற்றுதலை மேற்பார்வை செய்யும் பணியையும் அமைச்சர்கள் தலைமையிலான குழுக்கள் செய்கின்றன. பொதுக் கணக்குக் குழு என்று (PAC) ஒரு குழு உள்ளது. இதனை விட பொதுத் துறைத் தொழில்கள் பற்றிய குழு ஒன்றும் (Committee on public Enterprises) உள்ளது. இரண்டிற்கும் அவற்றின் பணிநிறை வேற்றம் தொடர்பான வேறுபாடு ஒன்றினை இங்கே சுட்டிக்காட்டலாம். பொதுக்கணக்குக்குழு ஒரு அறிக்கை யைக்கூட வெளியிட முன்னரே பொதுத்துறைத் தொழில்கள் பற்றிய குழு பல அறிக்கைகளை வெளியிட் டது. இதற்குக் காரணம் என்ன? பொதுத்துறைத் தொழில்கள் பற்றிய குழுவின் தலைவர் ஒரு சிரேஷ்ட அமைச்சர். ஆனால் அவருக்கு திணைக்கள பொறுப்புகள் இல்லை. பொதுக் கணக்குக்குழுவின் தலை வர் ஒரு சிரேஷ்ட அமைச்சர்; அவர் ஒரு பிரதி அமைச்சராகவும் இருக்கி றார். பல திணைக்களங்களின் பொறு ப்பு அவர் தலையில் சுமத்தப்பட்டுள் ளது. நிதியமைச்சு வேலைகளைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் உள்ள சிலரில் அவரும் ஒருவர். அவர் சர்வ தேச அரங்குகளில் இலங்கையைச் சிறந்த முறையில் பிரதிநிதித்துவப் படுத்தியும் வருகிறார். இவர் அமைச் சராக இல்லாமல் பிரதியமைச்சராக இருப்பது அமைச்சர் பதவி முக்கிய மற்றது என்பதையே எடுத்துக் காட்டு கிறது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் பாரா ளுமன்றத்தில் ஆற்ற வேண்டிய பணி களை விட தமது தொகுதி மக்களுக் குச் செய்ய வேண்டிய சேவைகளும் நிறைய உள்ளன. நாம் சிறந்தவொரு தேர்தல் தொகுதி முறையை அமைத் துக் கொள்வோமானால் பாராளு மன்ற உறுப்பினர்கள் தமது தொகுதி மக்களுக்குச் சிறந்த சேவையை ஆற்ற முடியும். அப்படியொரு தொகுதி முறையை வழங்குவதாக வாக்குறுதி அளித்த போதிலும் உள் ளூராட்சி மன்றங்களில் உறுப்பினர்க ளின் பிரதிநிதித்துவ முறையில் மாற் றங்கள் தகுந்த முன்யோசனை இன்றி நிறைவேற்றப்பட்டது. திருத்தச் சட் டப்படி மாற்றம் செய்ய வேண்டியது பாராளுமன்றத் தேர்தல் முறையை யேயாகும். ஆனால் அரசாங்கம் இம் மாற்றத்தைக் கொண்டுவரத் தயங்கு கிறது. இவ்விடயத்திலும் பாராளு மன்றத் தெரிவுக் குழுவிற்குச் சேனநாயக்க சமர்ப்பித்த ஆலோச

**ஏறக்குறைய 12 அமைச்சுகள் மூலமாகவே அரசாங்க செயற்பாடுகள் நடைபெறுகின்றன. மீதமுள்ள அமைச்சுகளுக்கு வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு வழங்குதல் வெறும் சம்பிரதாயமே என்று திறைசேரியின் செயலாளர் கூறுகிறார். இவ்வளவு தொகை அமைச்சுகளின் நடவடிக்கை களை ஒருங்கிணைப்பது என்பது சகலவற்றையும் விட பெரிய தொல்லை.**



பிரதியமைச்சர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னைகளில் விபரங்களைக் கூறியுள்ளார். அவர் பல்வேறு அரசாங்கங்களால் தொடர்ச்சியாகக் கூறப்பட்டு வந்ததும் பின்னர் கவனிக்கப்படாததுமான கலப்புமுறை பற்றி தனது சிபார்சுகளைக் குறிப்பிட்டுள்ளார். இவை யாவும் பிரேரிக்கப்பட்டுள்ள அரசியல் யாப்புத் திருத்த ஆலோசனைகளில் உள்ளடக்கப்படவில்லை என்பது துரதிர்ஷ்டமானது. சேனநாயக்க தேர்தல் முறைச் சீர்திருத்தம் பற்றிய ஓர் அம்சத்தை வலியுறுத்திக் கூறியதன் மூலம் சரியானதைச் செய்துள்ளார்.

சேனநாயக்கவின் பிரேரணையின் சிறப்பு என்னவென்றால் அவரது பிரேரணையை நியாய புத்தியுடைய எவராலும் எதிர்க்க முடியாது. தேர்தல் முறைச் சீர்திருத்தம், அதிகாரப் பரவலாக்கம், பொறுப்புக் கூறவைத்தல் என்ற அவரின் சிபார்சுகள் யாவும் அர்த்தமுடையன. எனினும் இவற்றுக்கு எதிராகவும் வாதங்கள் முன்வைக்கப்படலாம். எனினும் தேர்தல் சீர்திருத்தம் போன்ற இவ்விடயங்கள் சுயநலத்தின் அடிப்படையைக் கொண்டவை அல்ல. ஆனால் அவற்றுக்கு எதிரான வாதங்களைச் சுயநலநோக்குடன் கூறலாம்.

பெரும் எண்ணிக்கையினரைக் கொண்ட அமைச்சரவையால் வீண் செலவும் விரயமும் ஏற்படும். ஒவ்வொரு அமைச்சருக்கும் வழங்கப்படும் விசேட சலுகைகள், அவர்களுக்கு வழங்கப்படும் ஆளணி, போக்குவரத்து வாகனங்கள், எரிபொருள் என்பனவற்றால் மட்டும் செலவும் விரயமும் ஏற்படப்போவதில்லை. ஒவ்வொரு அமைச்சினதும் ஸ்தாபனச் செலவுகள் நிறைய உள்ளன. ஆயினும் இந்த அரசாங்கம் விக்கிரமசிங்க அரசாங்கம் சென்ற அளவிற்கு மோசமான எல்லைவரை செல்லவில்லை. விக்கிரமசிங்க அரசாங்கம் ஆரம்பத்தில் அமைச்சரவையின் அளவைச் சிறிதாக வைத்துக் கொள்ள முயற்சி செய்தது. பின்னர் கட்டுப்பாடு இல்லாத வகையில் அமைச்சர்களை அவ்வரசாங்கம் நியமனம் செய்தது. அவ்வாறு நியமிக்கப்பட்ட அமைச்சர் ஒருவருக்கு செயற்பாடுகளைக் கொண்டு நடத்துவதற்கான பண ஒதுக்கீடு வழங்கப்படவில்லை. ஒருவருக்கு பதவி ஒன்றை அளிப்பதற்காகவே அமைச்சை உருவாக்கிய விக்கிரமசிங்கவின் செயல் நீண்ட கால நோக்கில் அதிக தீங்கில்லாததாகவே தோன்றுகிறது. ஏனெனில் இப்போது அமைச்சுப் பதவிகளைக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், அவர்களின் செயற்பாடுகளுக்கான நிதி ஒதுக்கீடும் வழங்கப்பட்டு செலவுகள் பன்மடங்காக உயர்ந்துள்ளன.

திறைசேரியின் செயலாளர் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார். ஏறக்குறைய பன்னிரண்டு அமைச்சுகள் மூலமாகவே அரசாங்க செயற்பாடுகள் நடைபெறுகின்றன; மீதமுள்ள அமைச்சுகளுக்கு வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீடு வழங்குதல் வெறும் சம்பிரதாயமே என்று அவர் குறிப்பிட்டார். இருந்தபோதும் செலவிடப்படும் பணம் திறைசேரிக்கு ஒரு சுமையாகவும், வீண் விரயமாகவும் உள்ளது. இதைவிடப் பெரிய தொல்லை இவ்வளவு தொகை அமைச்சுகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதாகும். இது செயற்சாத்தியமற்றதொரு விடயம்.



நான் தேசிய மனித உரிமை நடவடிக்கைத் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளராகக் கடமையாற்றிய போது இது ஒரு கடினமான பணி என்பதை அனுபவத்தில் அறிந்து கொண்டேன். ஒரு விடயத்தைச் செய்து முடிக்க வேண்டும் என்ற விருப்பம் அமைச்சு ஒன்றிடம் இருந்தாலும் பொறுப்புகள் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்காததால் எந்தப் பணியையும் சரிவர நிறைவேற்ற முடியவில்லை. பிரதேச செயலாளர்கள் பிரிவு மட்டத்தில் நல்லிணக்கம் தொடர்பான கூட்டங்களில் நான் பங்குபற்றிய போது பணிப் பொறுப்புகள் தொடர்பான தெளிவற்ற நிலையில் எழும் குழப்பநிலையை அவதானித்துள்ளேன். விவசாயக் காப்புறுதி என்ற விடயம் பற்றி குறிப்பிட்ட ஒரு அமைச்சு அல்லாது பல சம்பந்தப்பட்டிருப்பதையும் முடிவு எடுப்பதில் சிக்கல் எழுந்ததையும் அவதானித்தேன். இப்படியான தெளிவற்ற நிலை செயற்பாடுகளைச் ஸ்தம்பிதமடையச் செய்யும். பொருளாதார அபிவிருத்தி அமைச்சு எல்லா விடயங்களையும் தனது நோக்கெல்லைக்குள் கொண்டுவர முயற்சிக்கிறது. அவ்வமைச்சிற்கு ஒழுங்கமைப்பு தொடர்பான பல பிரச்சினைகள் உள்ளன. இவை யாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல் அவ்வமைச்சுக்கு முழுநேரச் செயலாளர் என்று ஒருவர் இல்லை. அதன் வேலைகள் அரைகுறையாக அமைகின்றன. இதனால் அரசு உத்தியோகத்தர்களும் குழம்பிப்போய் உள்ளனர். பொதுமக்களும் குழப்பத்திற்கு உள்ளாகின்றனர்.

தெளிவான திட்டவட்டமான ஒழுங்கமைப்புடைய அமைச்சுகள் இருந்தால் அது எல்லோருக்கும் பயன்தரும். ஆக அமைச்சுப் பதவிகளைத் தற்போது பிடித்து வைத்திருப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போருக்கும், எதிர்காலத்தில் அமைச் சுப் பதவியைப் பெற ஆசையோடு இருப்பவர்களுக்கும் தான் இதனால் இழப்பு உண்டாகும். சேனநாயக்க அடுத்து வரும் தேர்தலுக்குப் பின்னர் தான் அமைச்சுகளின் அளவைக் குறைக்க வேண்டும் என்று கூறியிருக் கிறார். அவ்வகையில் அவர் கற்பனா வாதியாக இல்லாமல் புத்தி பூர்வமாக இருப்பதைக் காட்டிக்கொள்கிறார். தேர்தல் முடிந்த பின்தான் மாற்றம் என்றால் அமைச்சர்கள் கூட இத் திருத்தத்திற்கு ஆதரவு தெரிவிக்க லாம்.

இவ்வாண்டு ஏப்ரல் 19 ஆம் திகதி லிபரல் ஜனநாயகத்திற்கான சபை (கவுன்சில் போர் டிமோகிறசி-CLD) என்ற அமைப்பின் நிறுவகத்தலைவர் சனக அமரதுங்கவின் நினைவு தினத்தை முன்னிட்டு CLD இவ்வி டயம் பற்றி ஒரு கலந்துரையாடலை ஒழுங்கு செய்தது. அக்கலந்துரையா டலில் அமைச்சர் ஒருவர் பங்குபற்றி அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதைத் தாம் ஆதரிப்பதாகக் குறிப்பிட்டார். காலஞ்சென்ற சனக அமரதுங்க 1980 களில் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் பற்றிய முக்கிய மான கலந்துரையாடல் திட்டத்தைத் தொடக்கி வைத்தவர் என்பது குறிப் பிடத்தக்கது. அவரது நினைவு தினக் கூட்டத்தில் வாசுதேவநாணயக்கார கலந்துகொண்டார். இப்பிரேர ணையை அக்கூட்டத்தில் முன்வை த்த இளைஞர்களோடு இணைந்து பணியாற்ற தாம் விரும்புவதாக அவர் தெரிவித்தார். அரசாங்கத் திட் டங்களினதும் செயற்பாடுகளதும் பயன்களை விடத் தம் சுய நன்மைக ளையே கவனத்தில் கொண்டு செயற்படும் பிற அரசியல்வாதி களும் இந்த முயற்சிக்குத் தமது ஆத ரவை வழங்குவர் என்று எதிர்பார்க்க லாம்.

இத்திருத்தத்திற்கு எதிர்க்கட்சியி னரும் தமது ஆதரவைக் கொடுத்து நிறைவேற்றினால் இலங்கையின் அர சியலில் பெருமாற்றம் நிகழும் என் பது உறுதி. இப்பொழுது மேற்கிள ரும் பிரச்சினைகள் சர்ச்சைக்குரி யவை. அரசியல்வாதிகள் தமக்கு மாறுபட்டோரின் கருத்துகளை எதிர்ப் பதிலும் விவாதத்தில் வெற்றி பெறு வதிலுமே குறியாக இருக்கிறார்கள். தற்போது அரசியல் யாப்பு மாற்றம் பற்றிய விவாதம் சிறுபான்மையினர் பிரச்சினையைப் பற்றியதாகவே உள் ளது. சிறுபான்மையினரும் நாட்டை ஆட்சி செய்வதில் எதிர்நோக்கும் ஆளுகை தொடர்பான பிரச்சினை களிலும் கவனம் செலுத்த வேண்டும். அவர்கள் இதனைக் கருத்தில் கொண்டு பிறரோடு ஒத்துழைக்க முன்வருவார்களானால் இப்பிரச்சி னைக்குத் தீர்வு காணமுடியும். சிறு பான்மையின அரசியல்வாதிகள் கடந்த காலத்தில் நடந்துகொண்டது போல் அல்லாமல் நாட்டின் முன் னேற்றத்தில் தமக்கு உள்ள நம்பிக் கையை வெளிப்படுத்த வேண்டும். கடந்த காலத்தில் அவர்கள் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்து அவ்வரசு தம்மக் களின் முன்னேற்றத்திற்காகப் பணி யாற்ற உதவவில்லை. இப்பொழுது ஐக்கியப்பட்டு ஒரு நோக்கத்தை அடைவதற்காக உழைக்கும் சந்தர்ப் பம் கிட்டியுள்ளது. இதனைத் தவற விடக்கூடாது. ■

---

*(33ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

அத்துடன் ஏனைய பாலஸ்தீன தீவி ரவாத அமைப்புகளும் இஸ்ரேலுக்கு ஆத்திரமூட்டும் செயல்களைச் செய் வதையும் உடன்பாடு தடுக்கிறது. கடந்த மூன்று வருடங்களாக இந்தக் காரியங்களையே ஹமாஸ் செய்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பாலஸ்தீன அரசு சமுதாயத்தின் (Palestinian body Politic) தவிர் க்க முடியாத ஒரு அங்கமாக ஹமா ஸைக் கொண்டு வந்து இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு எதிரான வன்மு றைப் போராட்டத்தை நிரந்தரமாகக் கைவிடச் செய்து அமைதி வழியி லான அரசியல் எதிர்ப்பியக்கத்தில் நாட்டம் காட்டச் செய்வதே ஐக்கிய உடன்பாட்டின் பின்னணியில் உள்ள சிந்தனையாகும்.

தற்போதைய தறுவாயில் இந்த பாலஸ்தீன ஐக்கிய உடன்பாடு நீடித்து நிலைக்கக்கூடிய சாத்தியங் கள் பெருமளவுக்கு இருக்கின்றன என்று கூற முடியும். அத்துடன், இஸ் ரேலும் அமெரிக்காவும் உடன் பாட்டை நிராகரிப்பதை விடுத்து அதைப் பயன்படுத்தி முன்னேற்றங் காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய புதிய வாய்ப்பு கள் கிட்டுமென்று நம்பிக்கை கொள்ள முடியும். ஹமாஸ் இயக்கமும் காசா பள்ளத்தாக்கில் பாலஸ்தீனர்களும் எவருமே விரும்பினாலும் விரும்பா விட்டாலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய - மாற்றமுடியாத யதார்த் தங்களாகும். அமெரிக்காவும் இஸ் ரேலும் இதைக் கருத்தில் கொள்ளா மல் இருக்கத் தீர்மானித்தால் அது தொலைநோக்கற்ற செயல் மாத்திர மல்ல, பயங்கரமான முறையில் தவ றான வழியில் செல்வதுமாகும். உண்மையில், அமெரிக்காவோ, இஸ் ரேலோ ஹமாஸை அலட்சியம் செய் துவிட முடியாது. ஹமாஸ் அதன் வழிமுறைகளை மிதவாதமானதாக் கிக் கொண்டு, (ஒரு நாடாக இருப்ப தற்கான இஸ்ரேலின் உரிமைக்கு சவால் விடுக்காமல்) சமாதானத்தைக் காண வருமாறு இஸ்ரேலுக்கு அறை கூவல் விடுக்குமானால், அந்த நிலை நீடிக்குமட்டும் அமெரிக்காவும் இஸ் ரேலும் அந்த இயக்கத்துடன் காரிய மாற்றவேண்டியிருக்கும். ■

*(ஈராக்கில் பிறந்தவரான பேராசிரியர் அலொன் பென் மெய்ர் யூத இனத்தைச் சேர்ந்தவர். மத்திய கிழக்கு விவகாரங்களில் நிபுணத்துவம் வாய்ந்த அவர் நியூயோர்க் பல்கலைக்கழகத்தின் உலக விவகாரங்களுக்கான நிலையத் தில் பணியாற்றுகிறார்.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கிரஸ் கட்சியின் முன்னுதாரணத்தை வைத்தே பாரதீய ஜனதாவின் தேசியத் தலைமையும் இலங்கைப் பிரச்சினை குறித்த தமிழ் நாட்டின் நிலைப்பாட்டை எதிர்கொள்ளும். மத்தியில் வேறெந்த கட்சி ஆளும் கூட்டணிக்குத் தலைமை வகித்தாலும் எதிர்பார்க்க வேண்டிய நிலைமை இதுவே



என்.சத்தியமூர்த்தி

# தமிழ் நாடு மீண்டும் ஒரு முறை மறந்த இனப்பிரச்சினை

இந்தியா எத்தனை ஆவலுடனும் குழப்பத்துடனும் எதிர்பார்த்ததோ, அதேயளவு ஆவல் மற்றும் எதிர்பார்ப்புடன் பிற தெற்காசியா நாடுகளும் இந்தியப் பாராளுமன்றத் தேர்தலில் நாட்டம் கொண்டிருந்தன. தெற்காசியாவின் ஒருமித்த கலாசார அடிப்படையும், இந்தப் பகுதியில் அரசியல், இராஜ்ய உபாயம், பொருளாதாரம், படைபலம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் இந்தியாவின் வளர்ச்சியும் இதற்கு முக்கிய காரணங்கள் எனலாம்.

இலங்கையைப் பொறுத்தவரையில், இனப்போர் காலகட்டத்திலும் சரி, பின்னரும் சரி, இந்தியாவின் அரசியல், இராஜ்ய உபாயம், இராணுவம் மற்றும் பொருளாதாரப் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. இலங்கையில், இந்தியாவின் பங்களிப்பையும் முயற்சிகளையும் ஏற்றுக்கொள்வோரும் உள்ளனர். அதனைத் தவறுதலாக விமர்சனம் செய்துவருவோரும் உள்ளனர். இதில் மட்டும் அவர்களில் இனப்பாகுபாடு இல்லை என்று கூடச் சொல்லலாம்.

இனப்போர் முடிவுற்ற காலகட்டத்தில் குறிப்பாக இந்திய அரசிற்கு அழுத்தம் கொடுக்கும் விதமாக தமிழ் நாடு அரசியல் கட்சிகளும் தமிழ் ஆர்வலர்களும் போட்டி அரசியலில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. அதேசமயம், கடந்த 2009-ஆம் ஆண்டு மே மாதம், இனப்போர் உச்சகட்டத்தை அடைந்த காலகட்டத்தில் இந்தியப் பாராளுமன்றத்திற்கு நடந்த தேர்தலில் இலங்கை இனப்பிரச்சினை தேர்தல் பிரச்சினையாக உருவெடுக்கவில்லை என்பதே உண்மை.

கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக, இலங்கைப் பிரச்சினையில், தமிழர் மற்றும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆதரவு நிலை எடுத்தவர் ம.தி.மு.க தலைவர் வைகோ. இதன் காரணமாகவே தான் சார்ந்திருந்த தி.மு.க-வில் இருந்து விலக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து அவர் தொடங்கிய ம.தி.மு.க என்ற கட்சியும் இலங்கை இனப்பிரச்சினை மற்றும் இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் குறித்தே முழு நேர அரசியல் செய்தது எனலாம்.

ஆனால், தனது சொந்த மக்கள் என்று வைகோ கருதிப் போட்டியிட்ட விருதுநகர் மக்களவைத் தொகுதியில் அவர் தோல்வி அடைந்தார். இனப்பிரச்சினை காரணமாக மத்தியில் ஆட்சி செய்த காங்கிரஸ் கட்சியை அவர் குறைகூறி வந்த அதே காலகட்டத்தில், அந்தக் கட்சியைச் சேர்ந்த மாணிக் தாகூர் என்ற முகம் தெரியாத வேட்பாளரிடம் அவர் தோல்வி அடைந்தது பரவலாக இன்றளவும் பேசப்பட்டு வருகிறது.

அதுபோன்றே, அடிப்படையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை எதிர்ப்பதாகக் காட்டிக்கொண்டு அரசியல் செய்த அ.இ.அ.தி.மு.க தலைவி ஜெயலலிதா, 2009-ஆம் ஆண்டு தேர்தல் கூட்டணியின் வெற்றிக்காக தனது தாளத்தை சிறிது மாற்றி வாசித்துப் பார்த்தார். ஆனால், அவரது தலைமையிலான கூட்டணி எதிர்பார்த்த வெற்றி பெறவில்லை. மாறாக, காங்கிரஸ்-தி.மு.க கூட்டணி பெருவாரியான இடங்களில் வெற்றி பெற்றது.

ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போது நடைபெற்று முடிந்த மக்களவைத் தேர்தலில் தமிழ் நாட்டின் நிலை என்னவாக இருந்தது. இடைப்பட்ட காலத்தில், ஜெனீவா ஐ.நா. மனித உரிமைகள் பேரவை குறித்த பிரச்சினைகளில் மத்திய அரசின் முடிவை மாற்றியதாக தம்பட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்துக்கொண்ட ஆளும் காங்கிர ஸின் கூட்டணிக் கட்சியான தி.மு.க. உட்பட்ட தமிழ் நாட்டைச் சேர்ந்த அரசியல் தலைமைகள், உள்நாட்டில் தேர்தல் என்று வந்த பின்னர் இனப் பிரச்சினை குறித்து கிஞ்சித்தும் பேச வில்லை என்பதே உண்மை.

இதற்கான தற்போதைய காரணம் என்ன? ஆளும் கட்சியான அ.இ. அ.தி.மு.க மற்ற கட்சிகளையும் கூட் டணிகளையும் விட இனப்பிரச்சி னையில் மத்தியில் ஆளும் மன்மோ கன் சிங் அரசைக் குற்றம்சாட்டி தேர்தல் பிரசாரம் செய்தது என் னவோ உண்மை. ஆனால், நாள் போக, தமிழ் நாட்டுத் தேர்தலில் தனி யாக விடப்பட்ட காங்கிரஸ் கட்சி பெரிதாக எதுவும் சாதித்துவிடப் போவதில்லை என்பது தெரிந்த பின் னர் அந்தக் கட்சியைத் தாக்குவது, தேர்தலில் காசுபெறாத விடயம் என் றாகிப் போனது. பிற பிரச்சினைக ளில் போலவே இனப்பிரச்சினை விடயத்திலும் காங்கிரஸ் கட்சியைத் தாக்குவதை ஜெயலலிதா கைவிட வேண்டிய சூழ்நிலை உருவானது.

தனித்து விடப்பட்ட காரணத்தால், தி.மு.க போன்ற கூட்டணிக் கட்சிக ளின் அரசியல் நிர்ப்பந்தங்களில் இருந்து விடுபட்ட தமிழ் நாட்டைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சித் தலைவர்க ளும் மாநிலக் கட்சிகளை பொது மேடைகளில் இருந்து விமர்சனம் செய்யத் துவங்கினர். இதனால் தேர் தலில் எந்தத் தாக்கமும் இருக்காது என்பது தெரிந்தும் அவர்களுடன் மல்லுக்கட்ட எந்த மாநிலக் கட்சியும் தயாராக இருக்கவில்லை. எங்கே, பிள்ளையார் பிடிக்கப்போய் குரங் காக மாறிவிடுமோ என்ற 'ராஜீவ் காந்தி படுகொலை' கொடுத்த அரசி யல் படிப்பினையை அவர்கள் மறந்து விடவில்லை.

இடைப்பட்ட காலத்தில், ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா முன்வைத்த இலங்கை எதிர்ப்பு தீர்மானம் குறித்த வாக் கெடுப்பில் இந்தியா பங்கெடுக்க வில்லை. இதனை மாநிலக் கட்சிகள் கண்டனம் செய்தாலும், மத்தியில் ஆட்சியைப் பிடிப்போம் என்ற நம் பிக்கை கொண்டுள்ள பாரதீய ஜன தாக் கட்சியும் அதன் பிரதமர் வேட் பாளருமான நரேந்திர மோடியும் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. இது மாநில பா.ஜ.க தலைவர்களை யும், அவர்களின் கூட்டணித் தலை வர்களான ம.தி.மு.க-வின் வைகோ, பா.ம.க-வின் ராமதாஸ், தே.மு.தி.க-வின் விஜய்காந்த் ஆகிய அனைவ ரையும் குழப்பத்தில் ஆழ்த்தியது.

> மத்தியில் பாரதீய ஜனதாக் கூட்டணி ஆட்சிக்கு வந்தால் அந்த அரசு நிலைத்திருக்க தமிழகக் கட்சிகளின் ஆதரவு தேவைப்பட்டால் மட்டுமே அவற்றின் கருத்துகளுக்கு செவிசாய்க்கப்படும். இது இலங்கைப் பிரச்சினை என்றல்ல எந்த கொள்கைப் பிரச்சினையிலும் அப்படித்தான் அமையும்

மத்தியில் எப்படியாவது மீண்டும் அமைச்சர் பதவியில் அமர வேண் டும் என்று நம்பியிருக்கும் ம.தி.மு.க மற்றும் பா.ம.க தலைமைகளுக்கு நரேந்திர மோடியின் ஆதரவும் பிர சாரமும் இலங்கைத் தமிழர் உண ர்வை விட முக்கியமானதாக மாறி யது. எதிர்வரும் 2016-ஆம் ஆண்டு தமிழ் நாடு சட்டசபைத் தேர்தலில் மாநிலத்தில் ஆட்சியைப் பிடிக்க ஆவலாய் இருக்கும் விஜயகாந்தின் நிலையும் அது தான்.

## தேசிய கொள்கை, மாநில அரசியல்

இந்த இரு தரப்பினருமே, இலங்கை இனப்பிரச்சினை குறித்த பாரதீய ஜனதா தலைமையின் தேசிய கொள்கை குறித்து அறியாமல் இல்லை. தமிழ் நாட்டு பாரதீய ஜனதா தலைவர்கள் என்ன கூறி னாலும், தேசிய அளவில் அந்தக் கட் சியின் நிலைப்பாடு, தற்போதைய அரசு தலைமையின் கொள்கைகளை ஒத்தே இருக்கிறது. நரேந்திர மோடி உட்பட்ட கட்சியின் தேசியத் தலை வர்கள் தமிழ் நாட்டில் பிரசாரம் செய் யும் போது என்ன கூறினாலும், அடிப்படையில் அந்தக் கட்சியின் இலங்கை உறவு மற்றும் இனப்பிரச்சி னை குறித்த கொள்கைகள் மாறிவிட வில்லை என்பதே உண்மை.

இன்னும் சொல்லப்போனால், மத் தியில் பா.ஜ.க கூட்டணி ஆட்சிக்கு வந்தால், அந்த அரசு நிலைத்திருக்க தமிழ் நாடு கட்சிகளின் ஆதரவு தேவைப்பட்டால் மட்டுமே அவர் களது கருத்துகளுக்கு தேசிய கூட் டணி தலைமை செவிசாய்க்கும். இது இலங்கைப் பிரச்சினை என்றல்ல. எந்தக் கொள்கைப் பிரச்சினையிலும், தமிழ் நாட்டின் குரல், மத்திய அர சின் ஸ்திரத் தன்மையை ஒட்டியே ஏற்றுக்கொள்ளப்படும் என்பதே அப் பட்டமான உண்மை.

இதில் இனப்பிரச்சினை சார்ந்த மற் றும் அது சாராத உள்நாட்டு அரசியல் விளையாடுகிறது என்று கூறினால், அது மிகையாகாது. கடந்த இரண்டு அல்லது மூன்று தசாப்தங்களாகவே, மத்தியில் கூட்டணி ஆட்சி ஏற்பட்ட போதெல்லாம், அதில் அங்கம் வகிக் கும் தமிழ் நாடு சார்ந்த கட்சிகள், மத் திய அரசை மிரட்டி பணிய வைத்து, காரியம் சாதித்து வந்துள்ளன என்ற கருத்து தலைநகர் புதுடில்லியில் புரையோடிப்போன ஒரு கருத்து.

இந்த எண்ணத்தை மாற்றுவதற்கு, தமிழ் நாட்டு அரசியல் கட்சிகள் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்பது மட்டுமல்ல, மாறிவந்த மத் திய அரசு கூட்டணியில், புதிதாக பங்குபெறும் தமிழ் நாட்டு கட்சி அல் லது கட்சிகள், தங்கள் பங்கிற்கு மத் திய அரசை மிரட்டி வந்துள்ளன என்ற கவலையைப் பரப்பி வந்தன என்பதும் உண்மை. அந்த வகையில், ஒரு கட்டத்திற்குப் பின்னர், மத்தி யில் அரசிற்கு தலைமை தாங்கும் தேசிய கட்சியின் தமிழ் நாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளைத் தலைவர்கள் கூட, கொள்கைப் பிரச்சினைகளில் மாநிலக் கட்சிகளோடு ஏட்டிக்குப்-போட்டியாக செயல்பட்டு வந்துள்ளார்கள்.

அந்த வகையில், பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான அரசு, இனப்பிரச்சினை சார்ந்த மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் குறித்து கூட்டணிக் கட்சியான தி.மு.க.வின் மிரட்டலுக்கு தொடர்ந்து பணிந்து வந்துள்ளதான எண்ணம் தற்போது மீண்டும் தேசிய அளவில் உயிர்த்தெழுந்துள்ளது. பாராளுமன்றத் தேர்தல் காலத்தில் இது சிறிது பின்னுக்குத் தள்ளப்பட்டாலும், எதிர்காலத்தில் எப்போதெல்லாம் இனப்பிரச்சினை குறித்த தேசிய அளவிலான சர்ச்சைகள் முன் வைக்கப்படுகிறதோ, அப்போதெல்லாம் தமிழ் நாடு அரசியல் கட்சிகள் குறித்த குற்றச்சாட்டுகள் சிறிது அழுத்தமாகவே உடனெடுக்கப்படும்.

காங்கிரஸ் கட்சியின் முன்னுதாரணத்தை வைத்தே பாரதீய ஜனதா தேசிய தலைமை, இலங்கைப் பிரச்சினை குறித்த தமிழ் நாட்டின் நிலைப்பாட்டை எதிர்கொள்ளும். இதுவே மத்தியில் வேறு எந்தக் கட்சி ஆளும் கூட்டணிக்கு தலைமை வகித்தாலும் எதிர்பார்க்க வேண்டிய நிலைமை. அவர்களை பொறுத்தவரை, தி.மு.க, காங்கிரஸ் கட்சியின் குழப்ப நிலைமையைப் பயன்படுத்தி தனக்கு ஆதரவான நிலைமையை ஜெனீவாவில் தொடர்ந்து எடுக்க வைத்த பிறகு, தனக்குத் தோன்றிய காலகட்டத்தில் மத்திய அரசிற்கான ஆதரவை பின் வாங்கிக்கொண்டது.

இனப்பிரச்சினை காரணமாக இல்லாவிட்டாலும், தி.மு.க முன்பு பா.ஜ.க-வின் வாஜ்பாய் அரசிற்கான ஆதரவை பின் வாங்கியதும் இது போன்ற சூழ்நிலையில் தான். அதற்கு முன்னர், 1998-ஆம் ஆண்டு, பா.ஜ.க-வுடன் கூட்டணி அமைத்து பாராளுமன்றத் தேர்தலைச் சந்தித்த அ.இ.அ.தி.மு.க, திடுதிப்பென்று வாஜ்பாய் அரசிற்கான ஆதரவை விலக்கிக் கொண்டதையும் எந்தத் தேசியக் கட்சியோ, பிற மாநிலங்களில் உள்ள கட்சிகளோ ஏற்றுக் கொள்ளவில்லை.

அதற்கு முன்னரும், அன்று தி.மு.க-வில் முக்கிய பொறுப்பிலிருந்த மறைந்த 'முரசொலி' மாறன் மற்றும் அன்றை தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரான ப.சிதம்பரம் ஆகியோர், தேவ கௌடா மற்றும் ஐ.கே. குஜ்ரால் ஆகிய இரு பிரதமர்களின் கீழும் முக்கிய அமைச்சரவைப் பொறுப்புகளை தங்களுக்கு என்று பெற்றுக் கொண்டதையும் யாரும் ரசிக்கவில்லை. அந்த வகையில், எம்.ஜி.ஆர் மறைவிற்குப் பின்னர், 1989-ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் மீண்டும் முதல்வரான தி.மு.க தலைவர் கருணாநிதி, மத்தியில் கூட்டணி அரசு அமைத்த பிரதமர் வி.பி. சிங்கிற்கு அழுத்தம் கொடுத்தே இலங்கையில் செயல்பட்டு வந்த இந்திய அமைதிப் படையினருக்கு எதிராக அரசியல் செய்தார் என்று கூறுவோர் இன்றளவும் உள்ளனர்.

> பொதுத் தேர்தலில் தமிழ் நாட்டில் தனியாக விடப்பட்ட காங்கிரஸ் கட்சி பெரிதாக எதையும் சாதிக்கப்போவதில்லை என்று தெரிந்த பின்னர் அந்தக்கட்சியைத் தாக்குவது தேர்தலில் காசுபெறாத விடயம் என்றாகிப்போனது. பிற பிரச்சினைகளில் போலவே இனப்பிரச்சினை விடயத்திலும் காங்கிரஸ் கட்சியைத் தாக்குவதை ஜெயலலிதா கைவிட வேண்டிய சூழ்நிலை உருவானது

அந்த வகையில், வி.பி. சிங்கிற்குப் பின்னர் பிரதமரான சந்திரசேகர் அரசினால், தமிழ் நாட்டில் கருணாநிதி அரசு 'டிஸ்மிஸ்' செய்யப்பட்ட போது, பாராளுமன்றத்தில் பேசிய பிரதமர், கருணாநிதி 'தேசிய நலனுக்கு' எதிராகச் செயல்பட்டார் என்று பகிரங்கமாக குற்றம்சாட்டினார். அன்று அது குறித்து யாரும் கேள்வி எழுப்பவில்லை என்றாலும், பின்னர் தமிழ் நாட்டில் அரங்கேறிய ராஜீவ் காந்தி படுகொலை, பிரதமர் சந்திரசேகரின் குற்றச்சாட்டிற்கு வலுச் சேர்ப்பதாக அமைந்தது.

இன்று, இலங்கையில் மீண்டும் விடுதலைப் புலிகள் இயக்கம் வேர் பரப்ப முயல்வதாக குற்றச்சாட்டு எழுந்துள்ள நிலையில், இந்தியாவிலும் அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள் என்று அமெரிக்க அரசின் தீவிரவாதம் குறித்த இலங்கைக்கான அறிக்கை கூறியுள்ளது. அதுவும் குறிப்பாக மே தினத்தன்று, தமிழ் நாடு தலைநகரான சென்னையில் இரயில் நிலைய குண்டுவெடிப்புச் சம்பவம், அதற்கு முன்னரான பாகிஸ்தானுடன் தொடர்பு கொண்டுள்ள இலங்கையைச் சேர்ந்த ஜாகீர் ஹுசேன் என்பவரை தீவிரவாத தொடர்பிற்காக கைது செய்தமை ஆகியவை, தமிழ் நாடு அரசியல் கட்சிகள் மற்றும் அரசு தலைமையைக் கூட யோசிக்க வைக்கும். இலங்கைத் தமிழ் மக்களுக்கு அளப்பரிய ஆதரவு தெரிவிக்கிறோம் என்ற பெயரில் எங்கே தாங்களே தமிழ் நாட்டில் தீவிரவாதம் மீண்டும் ஒரு முறை தலை தூக்குவதற்கான சூழலை உருவாக்கி விட்டோமோ என்ற சந்தேகமும் பயமும் உடனெழுவது இயற்கையே.


இது போன்ற சூழலில் தான் 1991-ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி படுகொலையும், பின்னர் 1998-ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் சமயத்தில் 'கோவை தொடர் குண்டு வெடிப்பு' சம்பவமும் அரங்கேறின என்ற உண்மைகளை, இலங்கைத் தமிழர்களும் அவர்களது புலம்பெயர் தலைமைகளும் மறக்கலாம். தமிழ் நாடு அரசியல் தலைமைகள் இந்த உண்மைகளை மறப்பதற்கோ, மறைப்பதற்கோ வாய்ப்பு இல்லை. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய கிழக்கு நெருக்கடி

# பாலஸ்தீன நல்லிணக்க உடன்பாடு

## விளைவுகள் குறித்து அவசரமான எந்த முடிவுக்கும் வந்துவிடக்கூடாது



அலொன் பென் மெய்ர்

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் உள்ள சக்திகளின் மாறுகின்ற நிலைப்பாடுகளுக்கு ஏற்ப தங்களை தக்கவாறு அமைத்துக் கொள்வது அவசியம் என்பதை பதாஹும் ஹமாஸும் உணர்ந்திருக்கின்றன



பாலஸ்தீன ஜனாதிபதி முஹமட் அப்பாஸும் ஹமாஸ் இயக்கத்தலைவர் காலீத் மெஷாலும் 2014 மே 5 டோஹாவில் சந்தித்த காட்சி

மத்திய கிழக்கில் பாலஸ்தீனர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி நிற்கும் பிரதான அமைப்புகளான பதாஹ் இயக்கத்துக்கும் (பாலஸ்தீன விடுதலை இயக்கம்) ஹமாஸ் இயக்கத்துக்கும் இடையே கடந்தமாத பிற்பகுதியில் ஏற்பட்ட ஐக்கிய அல்லது நல்லிணக்க உடன்பாட்டை இஸ்ரேலிய-பாலஸ்தீன சமாதானச் செயன்முறைகளுக்கு உதவக்கூடியது என்றோ அல்லது ஊறுவிளைவிக்கக்கூடியது என்றோ இப்போது வர்ணிப்பது பொருத்தமானதல்ல. கணிசமான காலத்துக்கு நிகழ்வுப் போக்குகளை அவதானித்தே ஒரு முடிவுக்கு வரவேண்டும். இத்தகையதொரு உடன்பாடு ஒப்பேறுமா இல்லையா என்பதை ஹமாஸ் இயக்கம் அதன் போக்குகளை மாற்றிக்கொள்வதன் பின்புலத்திலும் இஸ்ரேல் - பாலஸ்தீன சமாதான பேச்சுவார்த்தைகளின் அந்தஸ்தின் பின்புலத்திலுமே முதலில் ஆராயவேண்டும்.

பதாஹுக்கும் ஹமாஸுக்கும் இடையேயான இதேபோன்ற முன்னைய இரு உடன்பாடுகள் பயனளிக்கத் தவறிவிட்டன என்பதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே கதியே இந்த உடன்பாட்டுக்கும் நிச்சயமாக நேரும் என்று கூறிவிட முடியாது. பதாஹும் ஹமாஸும் தங்களுக்கிடையிலான கடந்தகால உடன்பாடுகளைப் போலன்றி, புதிய உடன்பாடு பிராந்தியத்தில் உள்ள சக்திகளின் மாறுகின்ற நிலைப்பாடுகளுக்கு ஏற்ப தங்களைத் தக்கவாறு அமைத்துக்கொள்வதற்கு அவசியமானது என்று முடிவுக்கு வந்திருக்கின்றன என்பதே எனது விளக்கப்பாடாகும். இரு இயக்கங்களுக்கும் இடையிலான உறவுகளின் மாறுகின்ற தன்மையும் இதுவிடயத்தில் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

ஹமாஸ் பல்வேறு காரணிகளினால் தூண்டப்பட்டிருக்கிறது என்பது தெளிவானது. காசா பள்ளத்தாக்கில் பாலஸ்தீனர்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் அது கடுமையான நெருக்கடிகளை எதிர்நோக்குகிறது. காசாவில் வேலைவாய்ப்பின்மை கிட்டத்தட்ட 40 சதவீதத்தை எட்டியிருக்கிறது. தரங்குறைந்த மருத்துவ சேவைகளே கிடைக்கின்றன. சிறப்பான எதிர்காலத்துக்கான வாய்ப்புகள் எதுவுமின்றி புதியதொரு தலைமுறை அன்றாட கேவலங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

எகிப்திலிருந்து ஹமாஸ் துண்டிக்கப்பட்டுவிட்டது. பெரும்பாலான சுரங்கப்பாதைகளை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள புதிய எகிப்திய அரசாங்கம் நிர்மூலஞ் செய்துவிட்டது. இதனால் காசாவுக்கு பொருட்களைக் கடத்திச் செல்வது தடுக்கப்பட்டிருக்கிறது. ஹமாஸ் அரசாங்கத்துக்கு கடந்த காலத்தில் நிதியுதவிகளுக்கான உயிர்ப்பாதையாக இந்தச் சுரங்கப் பாதைகளே விளங்கின. சிரியாவில் மூண்ட போரும் அங்கு அரசாங்கப் படைகளுடன் மோதுகின்ற கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவளிப்பதற்கு ஹமாஸ் எடுத்த தீர்மானமும் அசாத் அரசாங்கத்தினால் ஹமாஸுக்கு வழங்கப்பட்டு வந்த அரசியல் மற்றும் விநியோக ஆதரவை இல்லாமற் செய்துவிட்டன. மேலும், ஈரான் மீது விதிக்கப்பட்ட தடைகள் காரணமாக நிதியுதவிகளையும் இராணுவ விநியோகங்களையும் தெஹ்ரான் கணிசமான அளவுக்கு குறைத்துவிட்டது. கடந்த காலத்தில் ஈரானின் இந்த உதவிகள் மீது ஹமாஸ் பெருமளவுக்குத் தங்கியிருந்தது.

காசாவைச் சுற்றி இஸ்ரேல் மேற்கொண்ட முற்றுகை (கடந்த இருவருடங்களாக இம் முற்றுகை ஓரளவுக்குத் தளர்த்தப்பட்ட போதிலும்) பொருட்களின் சுதந்திரமான வருகையை இன்னமும் தடுக்கிறது. குறிப்பாக, கட்டிடப் பொருட்களைக் கொண்டு வர முடியவில்லை. வழக்க மீறிய பயணக் கட்டுப்பாடுகளைப் பற்றியும் வெளியுலகிலிருந்து பாலஸ்தீனர்கள் அனேகமாக தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் நிலையையும் சொல்லத் தேவையில்லை.

இறுதியாக, இஸ்ரேலிய இராணுவத்தை தற்போதாயினும் சரி எதிர்காலத்திலாயினும் சரி எதிர்த்துப் போரிடுவதில் ஹமாஸுக்கு இருக்கின்ற இயலாமை பதாஹுடன் இணைவது மாத்திரமே உருப்படியான ஒரே வழி என்ற முடிவுக்குவர அந்த இயக்கத்தை நிர்ப்பந்தித்திருக்கிறது. இவ்வாறு இணைந்து கொள்வதன் மூலமாக நிதிரீதியான நெருக்குதல்களைத் தணித்துக்கொள்ள முடியும் என்பதுடன், நாளடைவில் சர்வதேச சமூகத்திடமிருந்து கூடுதலான அளவுக்கு அரசியல் ஏற்புடைமையைப் பெற்று சமாதான முயற்சிகளின் அவசியமான ஒரு அங்கமாக வர முடியுமென்று ஹமாஸ் தீர்மானித்திருக்க வேண்டும்.

பாலஸ்தீன அதிகார சபையைப் (Palestinian Authority) பொறுத்தவரை ஹமாஸுடனான உடன்பாடு என்பது தவிர்க்க முடியாததை ஏற்றுக்கொள்வதாகும். ஹமாஸின் ஆதரவு இல்லாமல் இஸ்ரேலுடன் எந்தவொரு சமாதான உடன்பாட்டையும் கண்டு அதை முழுமையாக நடைமுறைப்படுத்தி நிலைபேறானதாக்க முடியாது. மஹ்மூட் அப்பாஸைப் பொறுத்தவரை, சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இதுவரையில் எந்த விதமான முன்னேற்றமும் ஏற்படவில்லையென்பதால், ஹமாஸுக்கு நேசக்கரம் நீட்டுவதால், தனக்கு ஆபத்து ஏதும் பெரிதாக வராது என்பதை உணர்ந்துகொண்டார். இவ்வாறு செய்வதன் மூலமாக சகல பாலஸ்தீனர்களினதும் தலைவராக தனது வகிபாகத்தை வலுப்படுத்திக் கொள்ளவும் பரந்தளவில் பாலஸ்தீனர்களின் அரசியல் ஆதரவைப் பெறக்கூடியதாக இருக்கும் என்று அவர் நினைத்துச் செயற்பட்டிருக்கிறார்.

**பாலஸ்தீன அதிகார சபையைப் பொறுத்தவரை ஹமாஸுடனான உடன்பாடு என்பது தவிர்க்க முடியாததை ஏற்றுக்கொள்வதாகும். ஹமாஸின் ஆதரவு இல்லாமல் இஸ்ரேலுடன் எந்தவொரு சமாதான உடன்பாட்டையும் கண்டு முழுமையாக நடைமுறைப்படுத்தி நிலைபேறானதாக்க முடியாது**

ஹமாஸுடன் இணைந்து செயற்படுவதன் மூலமாக பாலஸ்தீன அதிகாரசபையினால் ஐக்கிய முன்னணி ஒன்றை முன்னிலைப்படுத்தக்கூடியதாக இருக்கும். இதன் மூலமாக, இஸ்ரேல் அதன் 'பிளவுபடுத்தி வெற்றிகொள்ளும்' (Divide and conquer) கொள்கையைத் தொடர முடியாத நிலையை ஏற்படுத்தக்கூடியதாகவும் இருக்கும். அத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தனக்கு ஒரு தகுதியான பங்காளி இல்லை என்ற இஸ்ரேலின் கதையையும் பொய்யாக்க முடியும். அவ்வாறான சூழ்நிலை உருவாகும் பட்சத்தில் பாலஸ்தீன அதிகாரசபை ஆளுகைக்கான அதன் ஆணையைப் பலப்படுத்திக்கொள்ளவும் நாளடைவில் கூடுதலான சர்வதேச ஆதரவைப் பெறவும் கூடியதாக இருக்கும்.

இறுதியாக, ஹமாஸின் மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாக்கு குறைந்து கொண்டுவருவதை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது, இன்னும் ஒரு சில மாதங்களில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருக்கும் தேர்தலில் வெற்றி பெறும் தரப்பாக பதாஹ் வெளிக்கிளம்புவதற்கான வாய்ப்பே கூடுதலானதாக இருக்கிறது. ஹமாஸைப் பொறுத்தவரை, அரபு வட்டத்திற்குள் இணைவதென்பது நிதிநெருக்குதல்களில் இருந்து தளர்வைப் பெறுவதென்பதற்கு அப்பால், இஸ்ரேலை வன்முறை வழியில் எதிர்க்கின்ற அதன் கொள்கையிலிருந்து விலகுவதாகவும் தோன்றுகிறது.



**நல்லிணக்க உடன்பாடு காணப்பட்ட பின்னர் 2014 ஏப்ரல் 23இல் காஸா நகரில் பதாஹ் இயக்கத்தின் சிரேஸ்ட அதிகாரி அஸாம் அல் அஹமட், ஹமாஸ் அரசாங்கத்தின் தலைவர் இஸ்மாயில் ஹனியே மற்றும் ஹமாஸ் இயக்கத்தின் சிரேஸ்ட அதிகாரி முஸா அபூ மர்சுக் ஆகியோர்**

பதாஹ் - ஹமாஸ் உடன்பாடு தொடர்பில் எத்தகைய பிரதிபலிப்பை இஸ்ரேல் வெளிப்படுத்தும் என்பது பற்றிய அப்பாஸின் மதிப்பீடு எதிர்பார்க்கப்பட்டதைப் போன்றே இருக்கிறது. ஏற்கனவே தோல்வியடையும் நிலையில் இருந்த பேச்சுவார்த்தைகளை இடைநிறுத்துவதற்கு இஸ்ரேலியப் பிரதமர் நெதான்யாஹு தீர்மானித்த போதிலும் கூட, பாலஸ்தீன அதிகார சபை வீழ்ச்சியடைவதைத் தடுக்கவே அவர் விரும்புகிறார். மேற்கு ஆற்றங்கரையில் 25 இலட்சத்துக்கும் அதிகமான பாலஸ்தீன மக்களின் நிதி மற்றும் பாதுகாப்புச் சுமையைப் பொறுப்பேற்க வேண்டிய நிர்ப்பந்தம் தனக்கு வந்துவிடுமோ என்று நெதான்யாஹு பீதியடைந்தவராகக் காணப்படுகிறார்.

ஹமாஸுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு திடீரென்று அப்பாஸ் மேற்கொண்ட தீர்மானம் குறித்து அமெரிக்கா வெறுப்புணர்வை வெளிக்காட்டிய போதிலும், பாலஸ்தீன அதிகார சபையைத் தண்டிப்பதென்பது ஒபாமா நிருவாகத்தைப் பொறுத்தவரையிலும் கூட, மிகவும் சிக்கலான காரியமேயாகும். நிதியுதவியை நிறுத்தி வைப்பது போன்ற நடவடிக்கைகளை எடுத்தால், அது சமாதான முயற்சிகளில் எஞ்சியிருப்பவை என்று கூறக்கூடிய அம்சங்களைச் சீர்குலைப்பதாக அமையும் என்பது மாத்திரமல்ல, எதிர்காலத்தில் பாலஸ்தீன அதிகாரசபை மீது செல்வாக்குச் செலுத்துவதில் அமெரிக்காவுக்கு இருக்கக்கூடிய ஆற்றலையும் பாதித்துவிடும்.

இஸ்ரேலுடன் சமாதானத்தைக் காண்பதா அல்லது ஹமாஸுடன் சமாதானத்தைக் காண்பதா? இதில் ஏதாவது ஒன்றை அப்பாஸ் தெரிவு செய்துகொள்ள வேண்டும் என்ற நெதான்யாஹுவின் வலியுறுத்தல் உச்சபட்ச இரண்டகத்தனமான கூற்றாக இருக்கிறது. நெதான்யாஹுவைப் பொறுத்தவரை பதாஹும் ஹமாஸும் கண்டிருக்கும் உடன்பாடு அதிர்ஷ்டவசமானதாகும். ஏனென்றால், அவர் என்றுமே ஆதரித்திராத 'இரு அரசுகள்' அடிப்படையிலான (Two state solution) தீர்வொன்று தொடர்பான பேச்சுவார்த்தைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான வாய்ப்பான சந்தர்ப்பத்தை அந்த உடன்பாடு கொடுத்தது. அதே வேளை மிகவும் சுலபமாக பாலஸ்தீன அதிகார சபையைக் குற்றஞ்சாட்டவும் வாய்ப்பாகிப் போய்விட்டது.

நெதான்யாஹுவும் அவரது கூட்டரசாங்கப் பங்காளிகளும் ஹமாஸ் இயக்கம் அதன் தீவிரவாதப் போக்கைத் தணித்து மிதமான நிலைப்பாடுகளைக் கடைப்பிடிக்க முடியுமென்ற கருத்தை ஏற்றுக்கொள்ளக் கூடத் தயாராயில்லை. தற்போதைய மாற்றத்தைக் கொண்டுவந்தவை காலமும் சூழ்நிலையுமே என்பதைக் கருத்திலெடுக்கவும் அவர்கள் மறுக்கிறார்கள். இதில் பெருமளவு மாற்றத்துக்கு இஸ்ரேலே காரணமாகவும் இருந்திருக்கிறது. ஆனால், இப்போது தனது சொந்தக் கொள்கைகளினால் ஏற்பட்ட விளைவுகளை ஏற்றுக்கொள்ள இஸ்ரேல் மறுக்கிறது.

உண்மையிலேயே, இஸ்ரேல் தொடர்பில் ஹமாஸின் தற்போதைய அரசியல் மனப்போக்கு எவ்வாறிருந்தாலும், இப்போதோ அல்லது எதிர்காலத்தில் எந்தவொரு நேரத்திலுமோ இஸ்ரேலின் இருப்புக்கு அச்சுறுத்தலொன்றைத் தோற்றுவிக்க தங்களால் முடியாது என்பதை அந்த இயக்கத்தின் தலைவர்கள் நன்றாக அறிந்தே வைத்திருக்கிறார்கள். வரவிருக்கும் மாதங்களிலும் வருடங்களிலும் முக்கியத்துவம் வாய்ந்த மாற்றங்களைக் கொண்டுவரக்கூடிய ஆற்றலைக் கொண்ட பிரதான அரசியல் போக்குகளுக்கு வெளியே ஹமாஸ் தலைவர்களினால் நிற்க முடியாது. தாங்கள் பொருத்தப்பாடு உடையவர்களாக தொடர்ந்தும் இருக்க வேண்டுமென்று விரும்புவார்களேயானால், உருப்படக்கூடிய வேறு மாற்றுவழியில்லை என்பதையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் அறிவார்கள்.

ஹமாஸ் ஒரு பயங்கரவாத இயக்கமாக இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றினால் வகைப்படுத்தப்பட்டது. ஏன் பாலஸ்தீன விடுதலை இயக்கமும் கூட இருதசாப்தங்களுக்கு முன்னர் பயங்கரவாத இயக்கமாக வகைப்படுத்தப்பட்டேயிருந்தது. மாறிக்கொண்டிருந்த அரசியல் சூழ்நிலைகளும் மண்ணில் நிலவிய யதார்த்த நிலைவரமும் தான் இஸ்ரேல் தொடர்பான அதன் நிலைப்பாட்டை மாற்றுவதற்கு பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை நிர்ப்பந்தித்தன. இறுதியில் இஸ்ரேல் ஒரு நாடாக இருப்பதற்கான உரிமையை நிராகரித்த பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் சாசனத்தின் பிரிவுகள் 1996 ஏப்ரில் 24 ஆம் திகதி ரத்துச் செய்யப்பட்டன.

உண்மையில், ஹமாஸின் நிலைப்பாடும் இஸ்ரேலுடன் சமாதானத்தை ஏற்படுத்திக்கொள்வதற்கு அந்த இயக்கம் விதிக்கும் முன்னிபந்தனைகளுக்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தற்போதைய நிலைப்பாட்டுக்கும் இடையே பெரிதாக வேறுபாடு எதுவும் இல்லை. ஹமாஸின் அரசியல் குரு காலித்மெஷால் தான் ஏற்கனவே இரு தடவைகள் கூறியதையே 2012 நவம்பரில் சி.என்.என்.க்குத் தெரிவித்தார். ‘1967 இல் இருந்த எல்லைகளுடன் ஜெரூசலேத்தை தலைநகராகக் கொண்ட பாலஸ்தீன அரசொன்றை நான் ஏற்றுக்கொள்வேன். அகதிகளாக வெளியேறிய பாலஸ்தீன மக்கள் திரும்பி வந்து வாழக்கூடிய உரிமையும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்’ என்று அவர் கூறியிருந்தார்.

மேலும், ஹமாஸை ஒரு பயங்கரவாத இயக்கமாகக் கருதுகின்ற இஸ்ரேல் கடந்த 9 வருடங்களாக காசா பள்ளத்தாக்கை முற்றுகைக்குள்ளாக்கி வைத்திருக்கின்ற போதிலும் கூட, அந்த இயக்கத்துடன் (கைதிகள் பரிமாற்றம், இருமார்க்கங்களிலுமான வர்த்தகம், தற்செயலான மோதல்களைத் தடுப்பதற்காக சில தகவல்களைப் பரிமாறுதல் உட்பட) பல முனைகளில் நேரடியாகவும் மறைமுகமாகவும் இஸ்ரேல் காரியமாற்றியிருக்கிறது. பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறது.

பதாஹ்-ஹமாஸ் நல்லிணக்க உடன்பாட்டை அடியோடு நிராகரிப்பதற்குப் பதிலாக இஸ்ரேலும் அமெரிக்காவும் ஹமாஸ் அதன் நோக்கங்களை வெளிக்காட்ட மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு உற்சாகமளிக்கவேண்டும்; அத்துடன் இஸ்ரேல் தொடர்பான பகிரங்க நிலைப்பாட்டை மாற்றுவதற்கு ஹமாஸை இணங்கச் செய்யுமாறு துருக்கி போன்ற அந்த இயக்கத்தின் நட்பு நாடுகளைக் கேட்க வேண்டும்.

இதுதொடர்பில், அரபு சமாதான முன்முயற்சியை (Arab peace Initiative) ஏற்றுக்கொள்ள ஹமாஸை இணங்கச் செய்யலாம். பாலஸ்தீன அதிகார சபையும் ஹமாஸும் கோரி நிற்கின்ற அதே ஏற்பாடுகளையே பெரும்பாலும் அடிப்படையாகக் கொண்ட விரிவான அரபு-இஸ்ரேல் சமாதானத்தை அந்த அரபு சமாதான முன்முயற்சித்திட்டம் இஸ்ரேலுக்கு முன்வைக்கிறது.

இது மதிப்புக் குறையாமல் ஹமாஸ் அரபு அரசுகளின் வட்டத்திற்குள் திரும்பிவருவதற்கு அனுமதிக்கும். அத்துடன் அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் ஹமாஸை பயங்கர



**நெதான்யாஹூவும் அவரது கூட்டரசாங்கப் பங்காளிகளும் ஹமாஸ் இயக்கம் அதன் தீவிரவாதப்போக்கைத் தணித்து மிதமான நிலைப்பாடுகளைக் கடைப்பிடிக்க முடியும் என்ற கருத்தை ஏற்றுக்கொள்ளக்கூட தயாராக இல்லை. தற்போதைய மாற்றத்தைக் கொண்டு வந்தவை காலமும் சூழ்நிலையுமே என்பதை கருத்தில் எடுக்கவும் அவர்கள் மறுக்கிறார்கள்**

வாத இயக்கங்களின் பட்டியலில் இருந்து நீக்குவதற்கும் வழிவகுக்கும். ஹமாஸுக்கும் பாலஸ்தீன அதிகார சபைக்கும் இடையிலான நல்லிணக்க உடன்பாடு, இஸ்ரேலை நிர்மூலஞ் செய்ய வேண்டுமென்று கோருவதைத் தவிர்க்கவேண்டுமென்றும் இஸ்ரேலுக்கு ஆத்திரமூட்டக்கூடிய நடவடிக்கைகளில் இறங்கக்கூடாது என்றும் ஹமாஸை வேண்டி நிற்கிறது.

*(26ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திராவிடக் கட்சிகளை மிரட்டும் ஊழல் வழக்குகள்





நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி, தோல்வி எப்படி அமைந்தாலும் தமிழகத்தில் இருக்கும் முக்கிய இரு திராவிடக் கட்சிகளையும் ஊழல் வழக்குகள் மிரட்டிக் கொண்டிருக்கின்றன. அகில இந்திய அளவில் உள்ள கட்சிகள் இந்தக் கட்சிகளுடன் கை குலுக்க தயங்குகின்றன. தேர்தலுக்காக கூட்டணி அமைப்பதிலும் எதிரொலித்தது. தேர்தல் முடிவுகளுக்குப் பிறகும் எதிரொலிக்கப் போகிறது

இந்தியாவில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன. உத்தரப்பிரதேச மாநிலத்தில் 'ஜாதி', மேற்கு வங்க மாநிலத்தில், 'வங்க தேசத்திலிருந்து சட்டவிரோதமாக இந்தியாவில் குடியேறியவர்கள் விவகாரம்' எழுப்பப்பட்டன. பீஹார் மாநிலத்தில், 'மதவாதமா, நிர்வாகமா' என்ற கோஷத்தை முன்வைத்தார்கள். ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில், 'சிறப்புச் சலுகை அளிக்கும் அரசியல் சட்டப் பிரிவு 370 வேண்டுமா, வேண்டாமா' என்ற முழக்கம் கேட்டது.

ஆனால், தமிழகத்தில்தான் இரு ஊழல் வழக்குகள் பற்றிய பிரசாரம் பலமாக எழுந்தது. 2-ஜி ஊழல் பிரச்சினையை இந்திய அளவில் எழுப்பியது பாரதீய ஜனதாக் கட்சி. ஆனால் தமிழகத்தில் பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான கூட்டணியில் பா.ஜ.க.வினர் இந்தப் பிரச்சினை குறித்து அமைதி காத்தார்கள். ஆனால், அக் கூட்டணியில் உள்ள விஜயகாந்த், அவரது மனைவி பிரேமலதா விஜயகாந்த் போன்றோர் இப்பிரச்சினையை தேர்தல் களத்தில் முன் வைத்தார்கள். இவர்களை எல்லாம் மிஞ்சும் அளவிற்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் ஜெயலலிதா தன் பிரசாரத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்றாக 2-ஜி ஊழல் வழக்கை கையிலெடுத்தார். ராஜா போட்டியிடும் நீலகிரித் தொகுதி பிரசாரக் கூட்டத்தில் 2-ஜியைப் பற்றி விளக்கவே அரைமணி நேரத்திற்கு மேல் தன் பேச்சைப் பயன்படுத்தினார் ஜெயலலிதா. தி.மு.க.வின் மீதும், அதன் முன்னாள் அமைச்சர் ராஜா மீதும், கனிமொழி மீதும் கடும் குற்றச்சாட்டுகளை மக்கள் மன்றத்தில் வைத்தார். இதுவரை நடைபெற்ற மூன்று தேர்தல்களில் 2-ஜி வழக்கை பிரதானமாக வைத்து தேர்தல் களத்தில் பிரசாரத்தை நிறைவு செய்திருக்கிறார் ஜெயலலிதா என்றே சொல்ல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி.மு.க. சும்மா இருக்குமா? இப்பிரசாரத்திற்கு பதிலடி கொடுக்க தி.மு.க. தரப்பு கையிலெடுத்தது முதல்வர் ஜெயலலிதா மீது பெங்களூர் நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் சொத்துக் குவிப்பு வழக்கு. முதல் முறையாக முதலமைச்சரான போது 2.1 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துகளை மட்டும் வைத்திருந்த ஜெயலலிதா ஐந்தாண்டுகள் கழித்து பதவியை விட்டு விலகும் போது எப்படி 66.65 கோடி ரூபாய் சொத்துகளைச் சேர்த்தார்? இதுதான் தி.மு.க. வின் பிரதான தேர்தல் பிரசாரம். தி.மு.க. தலைவர் கருணாநிதி, அக்கட்சியின் பொருளாளர் மு.க. ஸ்டாலின் உள்ளிட்ட இருவருமே பொதுக்கூட்டங்களில் மட்டுமன்றி, பிரசாரக் கூட்டங்களிலும் பெங்களூர் ஊழல் வழக்கை முன் வைத்து ஆவேசமாகப் பேசினார்கள். குறிப்பாக 1998 நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு ஜெயலலிதாவின் சொத்துக்குவிப்பு வழக்குப் பற்றி அதிக அளவில் பேசப்பட்டது இந்த நாடாளுமன்றத் தேர்தலில்தான். முதல் ரவுண்டில், 'பிரதமர் பதவிக்கு அம்மா' என்ற கோஷத்தை முன் வைத்தது அ.தி.மு.க. அப்போதே, 'ஊழல் வழக்கினை சந்தித்துக் கொண்டிருப்பவர் எப்படிப் பிரதமராக முடியும்' என்ற கேள்வியை தி.மு.க. அதற்குப் போட்டியாக விதைத்தது. அந்த ஏட்டிக்குப் போட்டியான வாதங்களும், வார்த்தைப் பிரயோகங்களும் தேர்தலில் வாக்குப் பதிவு முடியும் வரை உள்ளூர் தினத்தந்தி செய்தித்தாளில் வரும் 'கன்னித்தீவு' போல் இன்னும் முடிவுக்கு வரவில்லை. தேர்தல் காற்று அடங்கிய பிறகு கூட, தி.மு.க. தலைவர் கருணாநிதி பெங்களூரில் நடக்கும் சொத்துக் குவிப்பு வழக்குக் குறித்து தொடர் கடிதங்களை தி.மு.க.வின் அதிகாரபூர்வ பத்திரிகையான முரசொலியில் எழுதி வருகிறார். இக்கட்டுரை எழுதப்படும் தினத்தில் சொத்துக் குவிப்பு வழக்கு குறித்து அவர் ஆறாவது தொடர் கடிதத்தை எழுதி விட்டார்.





நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி, தோல்வி எப்படி அமைந்தாலும், முதல் முறையாக தமிழகத்தில் இருக்கும் இரு முக்கியக் கட்சிகளையும் ஊழல் வழக்குகள் மிரட்டிக் கொண்டிருக்கின்றன. அகில இந்திய அளவில் உள்ள கட்சிகள் இந்தக் கட்சிகளுடன் கைகுலுக்கத் தயங்குகின்றன. அது கூட்டணி அமைப்பதிலும் எதிரொலித்தது. இப்போது தேர்தல் முடிவுகளுக்குப் பிறகும் எதிரொலிக்கப் போகிறது.

தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய இரு கட்சிகளில் யாருக்கு அதிக எம்.பி.க்கள் கிடைத்தாலும் டில்லியில் ஆட்சிக் கட்டிலில் அமரப்போகும் கட்சி இந்த இரு திராவிடக் கட்சிகளில் யாரின் ஆதரவைக் கேட்டுப் பெறும்? இது இன்றைய ஆங்கிலப் பத்திரிகைகளில் வரும் 'கிராஸ் வேர்டு' பந்தயம் போல்தான் இருக்கிறது. ஏனென்றால், இரு கட்சிகள் மீதும் அல்ல, அக்கட்சிகளின் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள் அல்லது தலைமைப் பொறுப்பில் இருப்போரின் உறவினர்கள் ஊழல் வழக்கில் சிக்கிக் கொண்டு விசாரணையை சந்தித்து வருகிறார்கள். தி.மு.க. தலைவரின் மகள் கனிமொழி, முன்னாள் அமைச்சர் ராஜா ஆகியோர் 2-ஜி வழக்கு விசாரணையின் இறுதிக் கட்டத்தில் நிற்கிறார்கள். வாக்குப் பதிவு முடிந்த கையோடு டில்லி நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டத்தில் உள்ள 313ஆவது பிரிவின் படி நீதிபதி கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள். குற்ற வழக்கு விசாரணையில், 'நீதிபதிக்கும் குற்றவாளிகளுக்கும்' இடையில் நடைபெறும் இந்த நடைமுறை தீர்ப்பளிக்கும் முன்பு வரும் முக்கியமான நடைமுறை. இப்போது புதிதாக தி.மு.க. தலைவர் மனைவி தயாளு அம்மாள் மீதும் அமுலாக்கப்பிரிவினர் கலைஞர் டி.வி.க்கு வாங்கிய 200 கோடி ரூபாய் கடன் குறித்து வழக்குத் தாக்கல் செய்துள்ளார்கள்.

மே மாதம் 26 ஆம் திகதி அனைவரும் டில்லி சி.பி.ஐ. நீதிமன்றத்தில் இந்த வழக்கில் ஆஜராக வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இன்னொரு பக்கம் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா. அவர் மீது இரு வழக்குகள் விசாரணையில் இருக்கின்றன. ஒன்று வருமானத்திற்கு மீறிய சொத்துக் குவித்த வழக்கு. இன்னொன்று வருமான வரி கணக்குத்

## சென்னை மெயில்





முத்தையா
காசிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கல் செய்யாத வழக்கு. முதல் வழக்கை மாநில அரசின் லஞ்ச ஒழிப்புத்துறை தாக்கல் செய்துள்ளது. இரண்டாவது வழக்கை மத்திய அரசின் வருமான வரித்துறை தாக்கல் செய்துள்ளது. இதில் முதல் வழக்கு என்ன? 1991 முதல் 1996 வரை முதலமைச்சராக பொறுப்பேற்ற ஜெயலலிதா அப்பதவிக்குரிய முழுச் சம்பளத்தை வாங்கப் போவதில்லை என்று அறிவித்து வெறும் ஒரு ரூபாய் மட்டும் மாதச் சம்பளமாக வாங்கினார். ஐந்து வருடங்கள் அவர் அரசு கஜானாவில் இருந்து பெற்ற சம்பளம் வெறும் 60 ரூபாய் மட்டுமே. இந்நிலையில் அன்று பிரதான எதிர்க்கட்சியாக இருந்த தி.மு.க., முதல்வராக இருந்த ஜெயலலிதா மீது அப்போது கவர்னராக இருந்த சென்னாரெட்டியிடம் 539 பக்கங்கள் கொண்ட ஊழல் புகார் ஒன்றைக் கொடுத்தது. அதில் 28 ஊழல் குற்றச்சாட்டுகளை ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. அரசு மீது சுமத்தினார்கள். அவற்றில் ஒன்றுதான் இந்த வருமானத்திற்கு அதிகமாகச் சொத்து சேர்த்த வழக்கு. இதே மாதிரி ஜெயலலிதாவிற்கு எதிராக கவர்னரிடம் புகார் கொடுத்த இன்னொரு தலைவர் டாக்டர் சுப்ரமண்யம் சுவாமி. தி.மு.க.வும், சுப்ரமண்யம் சுவாமியும் ஊழல் வழக்குத் தொடுக்க அனுமதி கேட்டிருந்தாலும், ஜெயலலிதா மீது வழக்குத் தொடுக்கும் அனுமதியை சுப்ரமண்யம் சுவாமிக்கு வழங்கி உத்தரவிட்டார் கவர்னர் சென்னாரெட்டி. ஏனென்றால் மாநில முதலமைச்சர் பதவியில் இருப்பவர் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வேண்டுமென்றால் மாநில கவர்னரிடம் முன் அனுமதி பெற வேண்டும். அதன் அடிப்படையில் சுப்ரமண்யம் சுவாமி 14.6.1996 அன்று நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.





தி.மு.க. ஆட்சிக்கு வந்துவிட்ட நேரம். இதன் அடிப்படையிலும், நீதிமன்ற உத்தரவுகளின் அடிப்படையிலும் ஜெயலலிதா மீது வருமானத்திற்கு மீறிய சொத்துக் குவிப்பு வழக்கு 18.9.1996 அன்று பதிவு செய்யப்பட்டது. லத்திகா சரன், வி.சி. பெருமாள், நல்லம்மா நாயுடு என்று ஒரு பெரிய பொலிஸ் பட்டாளமே வழக்கு விசாரணையை மேற்கொண்டது. சட்டப்படி உள்ள பல்வேறு கட்ட விசாரணைகள் துரிதமாக நடத்தப்பட்டு 9 மாதத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி உள்ளிட்ட நால்வர் மீதும் இந்தக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கினை நிரூபிக்க மொத்தம் 259 சாட்சிகள் லஞ்ச - ஊழல் தடுப்புத் துறையின் சார்பில் முன்னிறுத்தப்பட்டார்கள். அது மட்டுமல்ல, அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்டோரின் ஊழல் வழக்குகளை விசாரிக்க சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன. இந்த வழக்கு விசாரணை தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் மத்தியில் பா.ஜ.க. தலைமையிலான ஆட்சி 1998இல் பொறுப்பேற்றது. வாஜ்பாய் பிரதமரானார். டில்லி அதிகாரத்தில் இருந்த போது இந்த சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டது செல்லாது என்று உச்சநீதிமன்றம் வரை சென்று போராடினார்கள். ஆனால் உச்சநீதிமன்றம் ஊழல் வழக்குகளை விசாரிக்க அமைக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றம் சரியே என்று தீர்ப்பளித்தது. இந்நிலையில் வழக்கு விசாரணை நகர்ந்து கொண்டிருந்த நேரத்தில் தி.மு.க. ஆட்சியின் பதவிக்காலம் முடிந்தது.

2001இல் மீண்டும் இரண்டாவது முறையாக முதலமைச்சரானார் ஜெயலலிதா. டான்சி வழக்கில் தண்டிக்கப்பட்டதால் அந்தத் தேர்தலில் அவர் போட்டியிடவில்லை. நான்கு தொகுதிகளில் அவர் வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டு அத்தனையும் தேர்தல் கமிஷனால் நிராகரிக்கப்பட்டது. இந்நிலையில் அ.தி.மு.க.விற்கு அதிக எம்.எல்.ஏ.க்கள் கிடைத்ததால், ஜெயலலிதாவை முதலமைச்சராக நியமிப்பதற்கு வழிவிடும் வகையில் அ.தி.மு.க. சட்டமன்ற எம்.எல்.ஏ.க்கள் அவரை முதல்வர் பதவிக்கு முன்மொழிந்தார்கள். இந்திய அரசியல் சட்டப்படி எம்.பி.யாகவோ அல்லது எம்.எல்.ஏ.வாகவோ இல்லாதவர் கூட முதல்வராகவோ, பிரதமராகவோ நியமிக்கப்படலாம். ஆனால் ஆறு மாத காலத்திற்குள் தேர்தலில் நின்று வெற்றி பெற்று விட வேண்டும். அதனால், கவர்னராக இருந்த பாத்திமா பீவி முதலமைச்சராக ஜெயலலிதாவிற்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டவரை முதல்வராக பதவியேற்க வைத்தது தவறு என்று உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. அந்த வழக்கில், 'மக்கள் தீர்ப்பு அரசியல் சட்டத்திற்கு உட்பட்டது. மக்கள் தீர்ப்பளித்துள்ளார்கள் என்பதற்காக ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டு தேர்தலில் போட்டியிடமுடியாதவரை முதலமைச்சர் பதவிக்கு நியமித்தது தவறு' என்று தீர்ப்பளித்தது. அதனால் 2001 செப்டம்பர் மாதம் முதல்வர் பதவியிலிருந்து ஜெயலலிதா விலக நேர்ந்தது. பிறகு மீண்டும் டான்சி வழக்கு அப்பீலில் சென்னை உயர்நீதிமன்றம் ஜெயலலிதா உள்ளிட்டோரை விடுவித்தது. பிறகு ஆண்டிப்பட்டி இடைத்தேர்தலில் போட்டியிட்டு முதலமைச்சராக பதவியேற்றார் ஜெயலலிதா. அப்போது ஏற்கனவே விசாரித்த சாட்சிகளை மீண்டும் சிறப்பு நீதிமன்றத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்து விசாரித்தார்கள் என்ற குற்றச்சாட்டு கிளம்பியது. குற்றவியல் நடைமுறைச் சட்டம் 313ஆவது பிரிவின் படி சென்னையில் இருந்த நீதிமன்றத்திற்கு ஜெயலலிதா நேரில் சென்று வாக்குமூலம் அளிக்க விதிவிலக்கு அளிக்கப்பட்டது. அதற்குப் பதில் அவருக்கு கேள்விகள் அனுப்பப்பட்டு பதில் பெறப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டுகள் பூகம்பமாக மாறியது. தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன், 'சென்னையில் இந்த வழக்கு விசாரணை முறையாக நடக்காது. ஆகவே ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணையை வேறு மாநிலத்திற்கு மாற்ற வேண்டும்' என்று உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார். அந்த மனுவில்தான் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கை கர்நாடக மாநிலத்திற்கு மாற்றிய நீதிபதிகள், ஊழல் வழக்கில் தினசரி விசாரணை நடத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டார்கள். அரசு வழக்கறிஞரையும், விசாரணை நீதிபதியையும் கர்நாடக உயர்நீதிமன்றத்துடன் கலந்தாலோசித்து கர்நாடக மாநில அரசு நியமிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டனர். இது நடைபெற்றது 2003 ஆம் வருடம் நவம்பர் 18ஆம் திகதி. அன்றிலிருந்து பத்தாவது மாதம் இந்த சொத்துக் குவிப்பு வழக்கை கர்நாடக மாநிலத்திற்கு மாற்றி தமிழக அரசு உத்தரவிட்டது.



அன்றிலிருந்து பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது. முதன் முதலில் பெங்களூரில் விசாரணையைத் துவக்கிய நீதிபதி பச்சப்புரே. பலகட்டமான விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் தமிழகத்தில் மீண்டும் ஆட்சி மாற்றம். தி.மு.க. பொறுப்பேற்றது. இந்த வழக்கில் குற்றப்பத்திரிகை நகல்கள் தமிழில் வேண்டும், இந்த வழக்குடன் சேர்க்கப்பட்டிருந்த லண்டன் ஹோட்டல் வழக்கை விசாரிக்கத் தடை போட வேண்டும், மொழி பெயர்ப்பு சரியாக இல்லை, சில சாட்சிகளை மறு விசாரணைக்கு அழைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு காரணங்களின் அடிப்படையில் பல மனுக்கள் விசாரணை நீதிமன்றம் முதல் உச்சநீதிமன்றம் வரை தாக்கல் செய்யப்பட்டது. இதற்கிடையில் நீதிபதி பச்சப்புரே ஓய்வு பெற்று அடுத்த நீதிபதி யாக மல்லிகார்ஜுனையா பொறுப்பேற்றார். பிறகு அவரும் ஓய்வு பெற்றார். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அந்த வழக்கு விசார்ணை பல தாமதங்களுக்கு இடையிலும் நடைபெற்று ஏறக்குறைய க்ளைமாக்ஸ் காட்சியை எட்டும் நிலைக்கு வந்தது. இது போன்ற நேரத்தில் தி.மு.க. ஆட்சியின் பதவிக்காலம் முடிந்து 2011இல் அ.தி.மு.க. மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்தது.

பெங்களூரில் நடைபெற்ற விசாரணையில் 'மேலும் விசாரணை நடத்த வேண்டியிருக்கிறது' என்று ஒரு வித்தியாசமான மனுவை விசாரணை அதிகாரி நேரடியாக கோர்ட்டில் தாக்கல் செய்தார். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. 80 சதவீத வழக்கு விசாரணை முடிவடைந்த நிலையில், அதுவும் 15 வருடம் கழித்து புது விசாரணையா? என்ற கேள்வி எழுந்தது. ஆனால் அதற்கும் கர்நாடக உயர்நீதிமன்றம் சென்று தடை பெற்றது தி.மு.க. தரப்பு. பிறகு விசாரணை தொடங்கியது. இப்படியொரு நெருக்கடியான கட்டத்தில் ஆரம்பத்திலிருந்து அரசு வழக்கறிஞராக இந்த வழக்கில் பணியாற்றிய ஆச்சார்யா தனக்கு பெரும் நெருக்கடிகள் இருப்பதாகக் கூறி தன் பதவியை ராஜினாமா செய்தார். இந்த ராஜினாமா பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

ஆனாலும், அவருக்குப் பதில் அரசு வழக்கறிஞராக பவானி சிங் நியமிக்கப்பட்டார். இந்தச் சூழ்நிலையில் நீதிபதியாக இருந்த பாலகிருஷ்ணா வழக்கை விசாரித்து வந்தார். தீர்ப்பை நோக்கி நெருங்கி வந்து கொண்டிருந்தது வழக்கு. நீதிபதிகள் பச்சப்புரே, மல்லிகார்ஜூனையா ஆகியோர் முன்பு பல மனுக்களைத் தாக்கல் செய்த குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பினர், நீதிபதி பாலகிருஷ்ணாவின் பணிக்காலத்தில் பெரும்பாலும் ஒத்துழைப்புக் கொடுத்தார்கள். ஆனால் இந்த முறை அரசு வழக்கறிஞர் பவானி சிங் மீது தி.மு.க. தரப்பு குற்றம் சாட்டியது. 'குற்றவாளிகளுக்கு ஆதரவாக வாதிடுகிறார்' என்ற வாதத்தை எடுத்து வைத்தது. கர்நாடக உயர்நீதிமன்றத்திலும் வழக்குத் தொடுத்தது. இந்நிலையில் பவானி சிங் அரசு வழக்கறிஞர் பதவியிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டார்.

இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்திற்குப் போனார் முதல்வர் ஜெயலலிதா. அதே நேரத்தில் பாலகிருஷ்ணாவும் ஓய்வு பெற வேண்டிய காலகட்டம் நெருங்கியது. இந்த நேரத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பு வினோதமான மனுவை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. அதில், 'அரசு வழக்கறிஞராக பவானி சிங்கே நீடிக்க வேண்டும். ஓய்வு பெறும் பாலகிருஷ்ணாவிற்கு பதவி நீட்டிப்புக் கொடுத்து இந்த வழக்கை அவரே விசாரித்து தீர்ப்புச் சொல்ல வேண்டும்' என்பது அந்தக் கோரிக்கை. இதை எதிர்த்து கர்நாடக அரசும் வாதிட்டது. தி.மு.க. சார்பில் ஆஜரான வழக்கறிஞரும் வாதிட்டார்.

ஆனால் ஜெயலலிதா தரப்பு வழக்கறிஞர் வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிபதி சவுகான் தலைமையிலான உச்சநீதிமன்ற பெஞ்ச், 'பவானி சிங்கே அரசு வழக்கறிஞராக தொடர வேண்டும். பாலகிருஷ்ணாவிற்கு பதவி நீட்டிப்புக் கொடுப்பது பற்றி கர்நாடக மாநில அரசும், கர்நாடக உயர்நீதிமன்றமும் முடிவு எடுக்க வேண்டும்' என்று உத்தரவிட்டது. பவானி சிங் மீண்டும் அரசு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டார். ஆனால் பாலகிருஷ்ணா, 'எனக்கு பதவி நீட்டிப்பு வேண்டாம்' என்று உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியிடமே எழுத்து பூர்வமாகக் கூறிவிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வு பெற்றுச் சென்று விட்டார். அவர் விட்ட இடத்திலிருந்துதான் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நீதிபதி மைக்கேல் குன்ஹா விசாரித்து வருகிறார்.

குன்ஹா விசாரணைக்குப் பிறகு வாய்தா வாங்கும் மனுக்களுக்கு கிடுக்கிப்பிடி போட்டார். நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்ததற்கு அரசு வழக்கறிஞர் பவானி சிங்கிற்கு தினமும் 60000 ரூபாய் அபராதம் என்று விதித்தார். அதே போல் சொத்துக் குவிப்பு வழக்குகளில் இருந்து தங்கள் நிறுவனங்களை விடுவிக்க வேண்டும் என்று சில நிறுவனங்கள் வழக்குப் போட்டன. அந்த வழக்குகள் சிலவற்றிலும் பத்தாயிரம் ரூபாய் அபராதம் போட்டு தள்ளுபடி செய்தார். இதுவரை இவ்வழக்கை விசாரித்த நான்கு நீதிபதிகளில் குன்ஹா மட்டும்தான் இப்படி அதிரடி நடவடிக்கைகளை எடுத்தார்.

தண்டனை விதிக்கப்பட்ட ஒரு நிறுவனம் அதை எதிர்த்து உயர்நீதிமன்றத்திற்கு அப்பீல் போன போது அங்கு வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி சத்ய நாராயணா, 'உங்களுக்கு விதிக்கப்பட்ட அபராதம் போதாது. அதனால் ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கிறேன்' என்று உத்தரவிட்டார். இப்படி பரபரப்புக் காட்சிகளுக்கு பஞ்சமில்லாமல் பெங்களூர் வழக்கு விசாரணை விறுவிறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதுபோன்ற பரபரப்பான நேரத்தில்தான் தமிழக நாடாளுமன்றத் தேர்தல் வந்தது. அந்த நேரம் பார்த்து பவானி சிங் போட்ட மனுக்கள் எல்லாம் தள்ளுபடி செய்யப்பட்டதால், தனது இறுதி வாதத்தைத் தொடங்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டார் பவானி சிங். அதனால் அவர் தினமும் ஜெ. வழக்கின் சொத்துகள் பட்டியலை நீதிமன்றத்தில் படிக்கத் தொடங்கினார். சாட்சிகளின் வாக்குமூலங்களை வாசித்தார். அதுதான் தமிழகத்தில் தேர்தல் பிரசாரமாக மாறியது. பவானி சிங் நீதிமன்றத்தில் பட்டியலிடும் சொத்து விபரங்கள் அடுத்த நாள் தமிழக பிரசார மேடையில் தி.மு.க. தலைவர் கருணாநிதியும், ஸ்டாலினும் பட்டியலிட்டுக் காட்டினார்கள். அது தேர்தல் சூழ்நிலையை மாற்றிவிடுமோ என்று பயந்த ஜெயலலிதா தரப்பு உச்சநீதிமன்றத்தில் முறையிட்டு, 'பெங்களூர் சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணைக்கு' மூன்று வாரம் தடையுத்தரவு பெற்றது. இந்தத் தடை உத்தரவு முடிவுக்கு வந்த போது தமிழகத் தேர்தல் களப் பிரசாரமும் முடிந்துவிட்டது.

இப்போது மீண்டும் பெங்களூர் சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணை சூடுபிடித்துள்ளது. பவானி சிங் ஏறக்குறைய தனது இறுதி வாதத்தை முடித்து விட்டார் என்றே சொல்ல வேண்டும். '2500 பக்க ஆதாரங்கள். 250க்கும் மேற்பட்ட சாட்சிகள்.குற்றச்சாட்டை நிரூபித்துள்ளோம்' என்று தன் இறுதி வாதத்தை முடித்துள்ளார். தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன் தரப்பு வழக்கறிஞர் மே 15 ஆம் திகதி தங்களின் எழுத்துபூர்வமான வாதத்தை தாக்கல் செய்ய வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டுள்ளார். ஜெயலலிதா தரப்பு வழக்கறிஞர்கள் மே 19ஆம் திகதி தங்கள் இறுதி வாதத்தை தொடங்க வேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறார் நீதிபதி குன்ஹா. இதற்கிடையில், வழக்கில் உள்ள தனியார் நிறுவனங்கள் சில தங்களை விடுவிக்க வேண்டும் (வருமானத்திற்கு மீறிய சொத்துகளாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள சொத்துகளில் இந்த நிறுவனங்களின் சொத்துக்களும் உண்டு) என்று கோரி தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்து விட்டது சிறப்பு நீதிமன்றம். அதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார்கள்.


தமிழகத்தின் சார்பில் தலைமை நீதிபதியாக இருந்த சதாசிவம் ஓய்வு பெற்று இந்திய உச்சநீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக லோதா பதவியேற்ற நேரம். 'ஊழல் வழக்குகளை ஒரு வருடத்திற்குள் விசாரித்து தீர்ப்பளிக்க வேண்டும்' என்று தலைமை நீதிபதியாகும் முன்பே தீர்ப்பளித்தவர் நீதிபதி லோதா. இந்த சூழ்நிலையில், ஊழல் வழக்கு விசாரணையை தடை செய்ய முடியாது என்று உச்சநீதிமன்றமே அறிவித்தது. அதிலும் குறிப்பாக எந்த நீதிபதி தலைமையிலான பெஞ்ச் தேர்தலின் போது இந்த வழக்கு விசாரணைக்கு மூன்று வாரம் தடை விதித்ததோ அதே பெஞ்ச் இப்போது ஊழல் வழக்கு விசாரணைக்கு தடை கொடுக்க முடியாது என்று மறுத்துவிட்டது.

தமிழக அரசியலை இரு வழக்குகள் இப்போது இரு கட்சிகளையும் மிரட்டிக் கொண்டிருக்கின்றன. ஒன்று பெங்களூரில் நடக்கும் சொத்துக் குவிப்பு வழக்கு. இன்னொன்று டில்லியில் நடக்கும் 2-ஜி வழக்கு. இதைவிட மற்ற இரு வழக்குகள் இரு கட்சிகளையும் மிரட்டும் வழக்குகள். ஆனால் அவை இரண்டும் ஆரம்ப கட்டத்தில் இருக்கின்றன. அதில் முதல் வழக்கு கனிமொழி, தயாளு அம்மாள், ராஜா உள்ளிட்டோர் மீது போடப்பட்டுள்ள அமுலாக்கப்பிரிவு வழக்கு. இதில் புகார் கொடுக்கப்பட்டு, அது விசாரணைக்கு ஏற்கப்பட்டு, அனைவரும் மே 26ஆம் திகதி ஆஜராக வேண்டும் என்று டில்லி கோர்ட் உத்தரவிட்டுள்ளது. மற்றொன்று ஜெயலலிதா மீது போடப்பட்டுள்ள வருமானவரிக் கணக்கு தாக்கல் செய்யவில்லை என்ற வழக்கு. அதிலும் வருமானவரித்துறை அதிகாரிகள் புகார் கொடு த்து, அது விசாரணைக்கு ஏற்கப்பட்டு அவ்வழக்கில் முதல்வர் ஜெயலலிதா ஆஜராக வேண்டிய நிலை இருக்கிறது. அந்த வழக்கில் எப்போது ஜெயலலிதா ஆஜராக வேண்டும் என்பதை மே 19ஆம் திகதி அறிவிக்கிறேன் என்று நீதிபதி கூறியிருக்கிறார். இந்த வழக்கு சென்னையில் தான் நடக்கிறது.

1998 முதல் 1999 வரை ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. டில்லியின் ஆட்சி அதிகாரத்தில் பங்கேற்றது. அதற்கு முன்பு 1991 முதல் 1996 வரை பிரதமராக இருந்த நரசிம்மராவுக்கு ஆதரவு கொடுத்தது. அதேபோல் தி.மு.க. 1999லிருந்து 2013 வரை மத்திய அரசில் அதிகாரம் செலுத்தும் கட்சியாக இருந்தது. இந்த இரு கட்சிகளின் ஆதரவைப்

(41ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் சி.சிவசேகரம்

# சர்வதேச சமூகமும் அதன் நோக்கங்களும்

**சர்வதேச சமூகம் எனப்படுவது ஒரு மாயை என்பதை நாம் உணர வேண்டும். அது யாரைக் குறிக்கிறது என்பதைப்பற்றி நாம் தெளிவுடன் இருக்க வேண்டும். அப்போதுதான் அதன் அக்கறைகள் என்னவென்றும் அது ஏன் குறிப்பிட்ட சில விடயங்களில் அக்கறைகாட்டுகிறது என்றும் நமக்கு விளங்கும்.**

சர்வதேச சமூகம் பற்றிய எதிர்பார்ப்புகள் நம்மிடையே இன்னமும் வலுவாக உள்ளன. எனினும், சர்வதேச சமூகம் என்பது எவரது, எவ்வகையான நலன்களைக் குறிக்கிறது என்பதை வரலாற்று நோக்கில் விசாரித்த பின்பு தான் நம் எதிர்பார்ப்புகளின் பெறுமதியைச் சரிவர மதிப்பிட இயலும். இக்கட்டுரையின் நோக்கம் அதுவே. சர்வதேச சமூகம் எனும் போது நாம் அனைத்துலகத்தையோ உலகின் அனைத்து நாடுகளையோ பற்றி எண்ணத்தலைப்படுகிறோம். அதற்குரிய ஆங்கிலச் சொல்லான 'இன்ரர்நஷனல்' தேசங்கள் அல்லது நாடுகட்கிடையிலான என்பதையே குறிப்பினும், மொழிவழக்கில் அது அனைத்து நாடுகளையும் குறிக்கும். எனினும் உண்மையில் சர்வதேசம் எதைக் குறிக்கிறது என்பதை அப்பதத்தைப் பயன்படுத்துவோர் யார் அல்லது அவர்களின் எசமான் யார் என்பதே தீர்மானிக்கிறது. புரட்சிகர இடதுசாரி இயக்க மரபில் அது எப்போதும் முழு மானுடத்தையுமே குறித்து வந்துள்ளது. ஆனால், இன்று சர்வதேச சமூகமென அழைக்கப்படுவது, வெறுமனே வலிய சில நாடுகளை மட்டுமே. நடைமுறையில் அது அமெரிக்காவையும் அதற்கு நட்பான வலிய முதலாளிய நாடுகளையுமே குறிக்கிறது. இந்த நாடுகளில் பெருவாரியானவை கடந்த சில நூற்றாண்டுகளாகக் கொலனி ஆதிக்க நாடுகளாகவும் பின்பு நவகொலனி முறையில் மூன்றாமுலக நாடுகள் எனப்படும் பின்தங்கிய ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளையும் தம் ஆதிக்கத்துட் கொண்ட நாடுகளாம். கனடா போன்ற ஒருசில இவ்வாறான வலிய மேலாதிக்க நாடுகளின் கூட்டாளிகளாம். அவையும் கடந்த அரை நூற்றாண்டில் நவகொலனியக் கொள்ளையடிப்பிலும் ஆதிக்கத்திலும் முக்கிய பங்காளிகளாகியுள்ளன.

ஆதிக்கத்திலுள்ள ஒரு சில நாடுகளை, அனைத்துலகையும் குறிப்பனவாகக் கொள்ளும் போக்கு, கொலனியாதிக்க சிந்தனைக்குரியது. மேற்குலகின் தேசியவாதத்தை உள்வாங்கிய 'சோஷலிசவாதிகளும்' இவ்வாறான பாதிப்புக்கு உட்பட்டே இருந்து வந்துள்ளனர். முதலாம் உலகப் போரின் பின்பு மீண்டும் ஒரு போர் மூளாமற் தடுக்க உருவான 'லீக் ஒவ் நேஷன்ஸ்' எனப்படும் தேசங்களின் அணி வலிய மேற்கு நாடுகளைக் கொண்டதாயும் கொலனிகளையும் பிற பின்தங்கிய நாடுகளையும் விலக்கியதாயும் அமைந்தது. இரண்டாம் உலகப் போரின் பின்பு உருவான ஐக்கிய நாடுகள் நிறுவனம் அப்போரின் பின்பு சோஷலிச சோவியத் ஒன்றியத்தைப் புறக்கணிக்க இயலாத நிலையில், அதை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் வீற்றோ அதிகாரமுடைய நாடுகளில் ஒன்றாக ஏற்றது. சீன மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தாததும் அமெரிக்கத் துணையுடன் தாய்வான் தீவில் நிறுவப்பட்டதுமான ஒரு ஆட்சியை சட்டபூர்வமான சீன அரசு என்று கூறி அதற்கு வீற்றோ அதிகாரம் வழங்கியதும் ஐ.நா நிறுவனத்தை முற்றாக மேற்குலக குறிப்பாக, அமெரிக்க ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்கும் நோக்கையே குறித்தது.

கொலனி ஆட்சிமுறை தகர்ந்து மூன்றாமுலக நாடுகள் அடுத்தடுத்து அரசியல் சுதந்திரம் பெற்று வந்த 1960களிலும் 70களிலும் ஐ.நா.வினுள் மூன்றாமுலகின் குரல் சற்று வலுத்தது. அதற்கு சோவியத் ஒன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யமும் கிழக்கு ஐரோப்பாவும் 'சோஷலிச அணியாக' இயங்கியமை ஒரு முக்கிய பங்களித்தது. எனினும், 1970களில் முன்னாட் கொலனிகட்கும் அரைக் கொலனிகட்கும் அரசியற் சுதந்திரம் இருந்தும் பொருளாதாரச் சுதந்திரம் இல்லாமையால், அவை முன்னைவிட மோசமான அளவுக்கு அந்நிய முதலாளிய வல்லரசுகளின் ஆதிக்கத்திற்குட்பட்டன. அதன் பயனாக, 1980களில், உலகம் மீண்டும் முதலாளியப் பெருவல்லரசுகளின் கீழ்ப்படலாயிற்று. அத்தசாப்தத்தில் சோவியத் ஒன்றியத்தின் துரிதமான நலிவும் பின்பு அதன் உடைவும் ஏறத்தாழ முழு உலகையும் மேற்குலகின் அரசியல், பொருளாதார ஆதிக்கத்திற்குட்படுத்தின. அமெரிக்கா உலகின் ஒரே பெருவல்லரசாகத் தன்னை நிலை நிறுத்தியதுடன், அதை ஆணவமாக அறிவித்தது.

சோவியத் ஒன்றியத்தின் உடைவையும் சீனாவில் முதலாளியத்தின் எழுச்சியையும் அந்நாடுகளின் உள்நாட்டு அலுவல்களை வைத்து மட்டும் மதிப்பிட இயலாது. சர்வதேச அளவில் 1970களில் ஏகாதிபத்திய நாடுகள் எனப்படும் வலிய முதலாளிய நாடுகள் தம்மை நவகொலனிய அடிப்படையில் மீளக்கட்டியெழுப்பியமையின் பங்கும் முக்கியமானது. எவ்வாறாயினும் சோவியத் ஒன்றியத்தின் உடைவையடுத்து அமெரிக்காவின் தலைமையிலான 'புதிய உலக ஒழுங்கு' ஒன்று அறிவிக்கப்பட்டது. அதன் கீழ், முதலாளிய உலகமயமாதல் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது.

1990 களில் அமெரிக்கத் தலைமையின் கீழ் மேற்குலகும் ஜப்பானும் ஒரு ஏகாதிபத்திய வலைப்பின்னலாக உலகைத் தமது ஆதிக்கத்திற்குட்கொண்டு வந்துவிட்டதாக எண்ணியிருந்த ஒரு சூழலில், எதிர்பாராத சில சர்வதேசத் திருப்பங்கள் ஏற்பட்டன. அவற்றைக் கையாளவும் அமெரிக்கத் தலைமையிலான மேற்குலக ஆதிக்கத்திற்குச் சவாலாக எழக்கூடிய சக்திகளை அடக்குவதற்கும் வாய்ப்பான ஒரு கருவியாகவே 'சர்வதேசச் சமூகம்' என்ற கோட்பாடு உருப்பெற்றுள்ளதை நாம் தெளிவாக விளங்க வேண்டும்.

## சர்வதேச சமூகத்தின் செயற்பாடுகள்

ஐ.நா. என்பது உலகின் தலையாய சர்வதேச நிறுவனமாயிருந்து வந்தாலும் அதன் செயற்பாட்டை மட்டுப்படுத்தி மேற்குலக நலன்கட்கு எதிரான எந்தத் தீர்மானமும் நடைமுறைப்படாமல் தடுக்கவல்ல ஒரு அமைப்பாகவே அதன் பாதுகாப்புச் சபை இருந்துள்ளது. எப்போதாயினும் ஐ.நா. சபையின் பெயரில் ஒரு நாட்டின் உள்நாட்டுப் போரிலோ இரு நாடுகட்கிடையிலான மோதலிலோ குறுக்கீடு நடந்திருப்பின், அது யாருடைய நலன்களைச் சார்ந்திருந்தன என்பதை நாம் விசாரிப்பது தகும்.

வடகொரியா மீது போர்தொடுக்க ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானம் நிறைவேற்றிய காலம், சோவியத் ஒன்றியம் ஐ.நா.வைப் பகிஷ்கரித்த காலமாகும். மற்றப்படி, 1990 வரை அமெரிக்காவின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு சோவியத் ஒன்றியம் எப்போதும் ஒரு தடையாகவே இருந்து வந்தது. அதனால் அமெரிக்கா தனது தேசிய நலன்களைக் காக்கும் நோக்கில் பல நாடுகளில் ஆட்சிக் கவிழ்ப்புகளை மேற்கொண்டுள்ளது. நேரடியாகத் தன் படைகளை அனுப்பியுள்ளது. எனினும் ஐ.நா. போன்ற ஒரு சர்வதேச அமைப்பின் அங்கீகாரம் அதன் இராணுவக் குறுக்கீடுகளுக்கு ஒரு சர்வதேச 'மரியாதையையும்' தேசிய மட்டத்தில் மக்கள் ஆதரவையும் பெற உதவுகிறது என்பது உண்மை. அதைவிட 1975 இல் வியட்நாம் போர் முடிந்த பின்பு, அமெரிக்கா இன்னொரு போரில் இறங்கிப் பெருமளவிலான ஆள் இழப்பையும் முடிவில் அவமானமான தோல்வியையும் பெறுவது பற்றிய தயக்கங்களும் இருந்தன.

நேரடியான இராணுவக் குறுக்கீடுகளைவிட உள்நாட்டிலேயே உள்ள சக்திகளைப் பயன்படுத்தி ஆட்சிக் கவிழ்ப்பை மேற்கொள்வதே 1970 கட்குப் பின்பு விரும்பப்பட்டதாயினும் கரிபியன் தீவான கிரெனாடாவிற் போன்று வெற்றிகரமான இராணுவக் குறுக்கீடும் ஈராக்கிலும் ஆஃப்கானிஸ்தானிலும் போன்று எதிர்பார்த்த விளைவைத் தரத்தவறிய குறுக்கீடுகளும் நிகழ்ந்துள்ளன. மற்றப்படி, ஹெயிற்றியில் போன்று இயற்கை அனர்த்தத்தைச் சாட்டாக்கி அதன் பெயரிற் படையினரை அனுப்பும் நடைமுறையும் சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளுடன் முரண்பாடுகள் உள்ள நாடுகளில் தமது இராணுவ இருப்பை உருவாக்குவதும் வலுப்படுத்துவதும் தொடர்ந்தும் நடக்கின்றன.

எவ்வாறாயினும் அமெரிக்க, நேட்டோப் படைகளை நேரடியான மோதலில் இறக்குவதைத் தவிர்ப்பதையும், இராணுவக் குறுக்கீட்டை ஆயுத உதவியும் குறிப்பிட்ட இலக்குகள் மீதான குண்டு வீச்சும் போன்ற

**அடையாள அடிப்படையிலான ஒடுக்கலும் பாரபட்சமும் சில சமயங்களில் திட்டமிட்ட இன ஒழிப்பும் பல நாடுகளிலும் நடக்கின்றன. ஆயினும் 'சர்வதேச சமூகம்' எல்லாவிடத்தும் ஒரே விதமான அக்கறையுடன் செயற்படுவதில்லை. மனித உரிமை என்பது மேற்குலகின் மேலாதிக்கத்தை வசதிப்படுத்தும் ஒரு கருவியாகிறதேயொழிய மேற்குலக அரசுகளைப் பொறுத்தவரை அதற்கு தன்னளவில் ஒரு பெறுமதியும் இல்லை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றின் மூலம் நடத்துவதையும் காணலாம். பிரெஞ்சுப் படைகள் அண்மையில் ஆபிரிக்க நாடுகளிற் குறுக்கிட்டமையை நாம் புறக்கணிக்க இயலாவிடினும், அது பொதுவானதொரு எதிர்கால நடைமுறையாக இருக்கும் வாய்ப்புக் குறைவு. ஒரு அரசாங்கத்தின் அழைப்பின் பெயரில் அல்லது அண்டை நாடுகளின் வேண்டுதலின் பேரில் உள்நாட்டுப் போர்களில் குறுக்கிடுவதற்கப்பால் நேரடியான இராணுவ ஆக்கிரமிப்பு தவிர்க்கப்படுகிறது.

நாடுகளின் உள்முரண்பாடுகளைப் பாவித்து அரசாங்கங்களை அகற்றுவதற்கும் பயமுறுத்திப் பணிய வைப்பதற்கும் (இயலுமான போது) மேற்குலகின் நவகொலனிய அரசாங்கங்கள் நேரடியாகக் குறுக்கிட ஒரு தேவையும் இல்லை. அவ்வாறான ஆட்சி மாற்றமோ அடிமைப்படுத்தலோ இயலாதபோது, முடிந்தால் ஐ.நா. பாதுகாப்புச் சபைகளின் தீர்மானங்களின் மூலமும் முடியாத போது ஐ.நா. அங்கீகாரம் இல்லாமலும் பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை போன்ற நெருக்குவாரங்களில் மேற்குலகு இறங்குகிறது.

## சர்வதேச சமூகத்தின் மனிதாபிமான அக்கறைகள்

அடையாள அடிப்படையிலான ஒடுக்கலும் பாரபட்சமும் சில சமயங்களிற் திட்டமிட்ட இன ஒழிப்பும் பல நாடுகளிலும் நடக்கின்றன. ஆயினும் 'சர்வதேச சமூகம்' எல்லாவிடத்தும் ஒரேவிதமான அக்கறையுடன் செயற்படுவதில்லை. மனித உரிமை என்பது மேற்குலகின் மேலாதிக்கத்தை வசதிப்படுத்தும் ஒரு கருவியாகிறதே ஒழிய, மேற்குலக அரசுகளைப் பொறுத்தவரை, அதற்குத் தன்னளவில் ஒரு பெறுமதியும் இல்லை.

அவ்வாறே நாடுகளின் சுயநிர்ணயமும் உலகப் பெருவல்லரசுகளின் மேலாதிக்க நோக்கங்களைச் சார்ந்தே கருதப்படுகிறது. காஷ்மீர் விடயத்தில் மேற்குலகின் நிலைப்பாடு இப்போது தலைகீழாகியுள்ளது. குர்திய மக்கள் மிகமோசமான ஒடுக்குமுறைக்கும் அடையாள மறுப்புக்கும் உட்படும் துருக்கியில் அவர்களுடைய சுயநிர்ணயத்தை மேற்குலகு முற்றாக மறுக்கிறது. ஆனால், வட ஈராக்கில் ஒரு குர்திய சுயாட்சியை நிறுவ மேற்குலகு வழிசெய்தது. அவ்வாறே, இப்போது சிரியாவிலும் நடந்துள்ளது. இவை நிரந்தரமான நிலைப்பாடுகள் என்று கூற இயலாது. சிரியாவிலும் ஈராக்கிலும் பூரணமான அமெரிக்க ஆதிக்கம் உறுதிப்படுமானால் குர்தியர்கள் தமது இப்போதைய அதிகாரத்திற் கணிசமான பங்கை இழக்க நேரிடும்.

தேசங்களினதும் தேசிய இனங்களினதும் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகிற பல நாடுகளில் சர்வதேச சமூகம் கண்டுங்காணாத போக்கைக் கடைப்பிடிப்பதையும் சில இடங்களில் பேரினவாத அரசுகளை வெளிப்படையாக ஆதரிப்பதையும் வேறிடங்களில் அரசாங்கங்கள் மீது அழுத்தங்களைச் செலுத்துவதையும் காணுகிறோம். அண்மைக் காலங்களில் மேற்குலகு பிரிவினையை இயலுமாக்கிய பொஸ்னியா, கொசோவோ, தென்சூடான் போன்ற நாடுகளில் மேற்குலகு தனது ஆதிக்கத்தை வலுப்படுத்துகிற காரியங்களைச் செய்து வந்துள்ளதேயொழிய அந்த நாடுகளின் தேசிய ஒற்றுமையையோ சுயாதீனத்தையோ காக்க எதையும் செய்யவில்லை.

இன்னும் சொல்லப்போனால், சர்வதேச சமூகம் என்பதிற் சர்வதேசப் பண்பும் இல்லை; அது எந்தச் சமூகத்தையும் அடையாளப்படுத்தவும் இல்லை. சர்வதேச சமூகம் எனப்படுவது உலக ஏகபோக முதலாளியத்தின் அதிகாரத்தை வலுவுறுத்தும் ஒரு அமைப்பு மட்டுமே. அது வலிய முதலாளிய வல்லரசுகள் எனக்கூடிய நாடுகளின் அரசுகளின் கூட்டணி. முதலாளிய வல்லரசுகளான ரஷ்யாவும் சீனாவும் இந்தியாவும் அதில் அடங்கா. வளரும் பொருளாதார வல்லரசுகளான தென்னாபிரிக்காவோ பிரேசிலோ அதில் அடங்கா. எந்த மேற்கு ஐரோப்பிய நாட்டையும் விடப் பெரிய மக்கள் தொகையுடைய இந்தோனேசியாவோ பாகிஸ்தானோ அரபு நாடுகளோ அதில் அடங்கா. 'சர்வதேச சமூகம்' அவற்றை ஒதுக்கிவைத்து அல்லது தனக்கு உடன்பாடாக்கி எதையும் செய்யுமேயொழியத் தன் சம பங்காளிகளாக அவற்றை ஏற்காது.

எனவே 'சர்வதேச சமூகம்' எனப்படுவது ஒரு மாயை என்பதை நாம் உணர வேண்டும். அது யாரைக் குறிக்கிறது என்பதைப் பற்றி நாம் தெளிவுடன் இருக்க வேண்டும். அப்போது தான் அதன் அக்கறைகள் என்னவென்றும் அது ஏன் குறித்த சில விடயங்களில் அக்கறை காட்டுகிறது என்றும் நமக்கு விளங்கும். அந்த விளக்கத்தின் அடிப்படையிலேயே சர்வதேச நாடுகளின் குறுக்கீடு பற்றிய தெளிவான முடிவுகட்கு வரவும் அதைச் சரியாகக் கையாளவும் நமக்கு இயலும்.■

---


*(38ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

பெறுவதற்கும் மத்தியில் ஆட்சி அமைக்க விரும்பும் கட்சிகள் போட்டி போட்டுக் கொண்டு தூதுவர்களை அனுப்பும். இரகசிய பேச்சு வார்த்தைகளில் இறங்கும்.

ஆனால் இந்த முறை இரு கட்சிகளையும், அதுவும் குறிப்பாக அக்கட்சி தலைமைப் பதவியில் இருப்பவர்கள் அல்லது தலைமைப் பதவியில் இருப்பவர்களின் உறவினர்கள் மீதே ஊழல் வழக்குகள் இருப்பதால் தேசியக் கட்சிகள் படுதயக்கத்தில் இருக்கின்றன என்பதே தற்போதைய அரசியல் நிலைவரம். இந்த இரு கட்சிகளின் ஆதரவு பெற வேண்டிய அவசியமில்லாமல் ஆட்சி அமைந்து விட்டால் போதும் என்ற நிம்மதியில் தேசிய கட்சிகள் இருப்பு தாகவே டில்லி அரசியலை நன்கு உணர்ந்த அரசியல் பார்வையாளர்கள் கிசுகிசுக்கிறார்கள்! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








எம்.பி.வித்தியாதரன்

# இந்தியாவின் புதிய அரசாங்கத்தின் முன்னாலுள்ள சவால்கள்

தெளிவான வெற்றியை யார் பெறுவார்கள் என்பது குறித்து அரசியல் அவதானிகள் நிச்சயமாக எதனையும் கூற முடியாதவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இரு விடயங்கள் நிச்சயமானவை ஒன்று கூடுதலான ஆசனங்களைப் பெறும் தனிக்கட்சியாக பாரதீய ஜனதாவே வரும். மற்றையது காங்கிரஸ் மோசமான தோல்வியைத் தழுவும்.

இந்தியாவில் பதவிக்கு வரக் கூடிய புதிய அரசாங்கம் உள்நாட்டு சமூக- பொருளாதார - அரசியல் மட்டத்திலும் வெளியுறவு விவகாரத்திலும் பெருவாரியான கொள்கைச் சவால்களை எதிர்நோக்குகிறது. வெளியுறவுக் கொள்கைச் சவால்களைப் பொறுத்தவரை அவை, உலகளாவிய மட்டத்திலும் அயல் நாடுகளுடனான உறவுகள் மட்டத்திலுமானவையாக இருக்கின்றன.

உலகளாவிய விவகாரங்களைப் பொறுத்தவரை இந்தியா கடும் துணிச்சலானதும் வலிமையானதுமான சில தீர்மானங்களை எடுக்க வேண்டியிருக்கிறது. அமெரிக்காவுடனான இந்தியாவின் தோழமை இப்போது ஆபத்தில் உள்ளது. இந்திய ராஜதந்திரி தேவயானி கொப்ரகடே மீது போடப்பட்ட மோசடி வழக்கு, அவரின் உடைகளைக் கழற்றி செய்யப்பட்ட சோதனை மற்றும் இறுதியில் அவர் நாடு கடத்தப்பட்டமை எல்லாம் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவுகள் எந்தளவுக்கு அண்மைக்காலத்தில் தாழ்ந்து போயிருக்கின்றன என்பதை வெளிக்காட்டுகின்றன. இந்தியா வழமைக்கு மாறாக கடுமையான ஆத்திரத்துடன் அதன் பிரதி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலிப்பைக் காட்டியது. முன்னரெல்லாம் பெரியண்ணர்கள் போன்று நடந்து கொள்ளப் பழக்கப்பட்ட அமெரிக்க இராஜதந்திரிகளுக்கான அனுகூலங்களையும் புதுடில்லியில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கான மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகளையும் விலக்கிக் கொண்டதுடன் இந்திய அரசாங்கம் அமெரிக்க இராஜதந்திரிகளுக்கும் அதன் நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்ட வசதிகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாகக் கூறி பல்வேறு விசாரணைகளையும் முடுக்கிவிட்டது. இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளைச் சீர்செய்வதற்கு விசேட முயற்சிகள் அவசியம் என்பதை இச்சம்பவங்கள் உணர்த்துகின்றன.

மன்மோகன் சிங் பதவியில் இருந்து வெளியேறுகின்றமை இந்திய- அமெரிக்க உறவுகளைப் பாதிக்கும் இன்னொரு அம்சமாகும். பல்வேறு முனைகளில் பல குறைபாடுகளுக்காக மன்மோகன்சிங் கடுமையாக விமர்சிக்கப்பட்ட போதிலும் அமெரிக்காவுடன் உறுதியான உறவைக் கொண்டிருக்கக்கூடியதாக நாட்டை அவரால் வழிநடத்தக்கூடியதாக இருந்தது. குறிப்பாக ஜோர்ஜ் டபிள் யூ.புஷ் காலத்தில் இதை அவரால் செய்யக்கூடியதாக இருந்தது. புஷ்ஷுக்கும் சிங்கிற்கும் இடையில் நிலவிய விசேட உறவுமுறை இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான அணுசக்தி உடன்படிக்கைக்கு வழிவகுத்தது. அந்த உடன்படிக்கையைச் செய்து கொள்வதற்கு முட்டுக்கட்டைகள் .தனது கட்சியிடமிருந்து வருமென்றாலும் கூட பதவியைத் துறப்பதற்கு மன்மோகன்சிங் தயாராயிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

புஷ்ஷுடனான சிங்கின் பிரத்தியேகமான நெருக்கம் ரஷ்யாவுடனாக இந்தியாவின் பாரம்பரியமான நல்லுறவுகளை ஆபத்துக்குள்ளாக்கியது. இரு நாடுகளுமே இதை வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும் கூட, அமெரிக்காவை நோக்கிய இந்தியாவின் நெருக்கத்தினால் ரஷ்யர்கள் அதிருப்தியடைந்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியம்.

இப்போது உக்ரெயின் நெருக்கடியையடுத்து உலகம் மீண்டும் அதிகரித்த வகையில் துருவமயப்பட்டுக் கொண்டுபோவதையும் பொருளாதார மற்றும் உலகளாவிய அதிகாரம் கிழக்கு நோக்கி நகர்வதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

தெற்காசியாவில் உள்ள அயல் நாடுகளில் இந்தியாவின் செல்வாக்கு மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கிறது என்றுதான் கூறவேண்டும். இலங்கை, நேபாளம் மற்றும் மாலைதீவு உட்பட பல தெற்காசிய நாடுகளில் இந்தியா அதன் செல்வாக்கு வெளியை சீனாவிடம் பறிகொடுத்து விடக்கூடிய அபாயம் தோன்றியிருக்கிறது. இவ்வருட இறுதியில் ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கா படைகளை வாபஸ்பெற்றுக்கொள்ளவிருக்கும் நிலையில், அயலகத்தில் நிச்சயமற்ற நிலை தோன்றக்கூடிய சாத்தியம் இருக்கிறது. சீனாவுடனான இந்தியாவின் வர்த்தகம் அதிகரித்திருக்கின்ற அதேவேளை, பாரிய வர்த்தகப் பற்றாக்குறை, எல்லைத் தகராறுகள் தொடர்பில் இணக்கப்பாடொன்றுக்கு வருவதில் உள்ள இயலாமை மற்றும் விசா வழங்கல் சர்ச்சை ஆகியவை உறவுகளைத்தொடர்ந்து இருள்மயமாக்கிக் கொண்டிருக்கின்றன.

இவையெல்லாம் புதிய அரசாங்கத்துக்கு இருக்கின்ற முக்கியமான சவால்கள். இச் சவால்களை எவ்வாறு புதிய அரசாங்கம் கையாளப்போகிறது? அதன் வெளியுறவுக் கொள்கை மன்மோகன் சிங் அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையை விட கணிசமான அளவுக்கு வேறுபட்டதாக இருக்குமா?

எந்தக் கட்சியுமே வெளியுறவுக் கொள்கை சம்பந்தப்பட்ட விடயங்களைப் பற்றி முன் கூட்டியே பெரிதாக எதையும் சொல்லத் தயாராயில்லை. பாரதீய ஜனதாவின் 42 பக்க தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஆக ஒரேயொரு பக்கமே வெளியுறவுக் கொள்கைக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. வெளிப்பாதுகாப்புத்துறையுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் இருபக்கங்களில் மாத்திரமே காணப்படுகின்றன. அயல் நாடுகளுடன் சிறப்பான உறவுகளைக் கட்டியெழுப்புவது தொடர்பிலேயே கூடுதல் அழுத்தம் கொடுக்கப்பட்டிருந்தது. நல்லெண்ண வெளிப்பாடுகள் மூலமாக நாடுகளுடனான விவகாரங்களைக் கையாளும் அணுகுமுறைக்கு (Soft Power) கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது. இந்தியாவின் இராஜதந்திரிகள்

பாராளுமன்றத்தில் அரசியல் கட்சிகள் மத்தியில் ஒத்துழைப்பு உணர்வை மீண்டும் ஏற்படுத்தி நம்பிக்கை மிகுந்த சூழ்நிலை ஒன்றைத் தோற்றுவிக்க வேண்டியுள்ளது. புதிய அரசாங்கம் எதிர்நோக்கும் உள்நாட்டுச் சவால்களில் இது மிகவும் பாரதூரமானதாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழாத்தை பாரதீய ஜனதா அதிகரிக்கும் என்று விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இராஜதந்திரிகள் குழாத்தின் போதாமை நிறுவன ரீதியாக இருக்கக்கூடிய பெரியதொரு பலவீனம் என்று பலரால் ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

எவ்வாறெனினும், வெளியுறவுக் கொள்கை தொடர்பில் நரேந்திரமோடி தெரிவித்த மூன்று கருத்துகள் சில சாடைகளைக் காட்டியிருக்கின்றன. சீனாவின் விஸ்தரிப்பு வாத போக்கைப் பொறுத்துக்கொள்ளப்போவதில்லை என்று அவர் கூறியிருந்தார். ஒசாமா பின்லேடனை அமெரிக்கா வேட்டையாடிய முறையை அவர் பெரிதும் பாராட்டியிருந்தார். ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கம் பாகிஸ்தானில் இருந்து வருகின்ற அகதிகளுக்கு பாரபட்சத்தைக் காட்டுகின்ற அதேவேளை, பங்களாதேஷில் இருந்து வருகின்ற அகதிகளுக்கு அனுசரணையாகச் செயற்படுவதாக மோடி குற்றஞ் சாட்டியிருந்தார். கொடுமைக்குள்ளாக்கப்படுகின்ற இந்துக்களுக்கு இயற்கையான ஒரு புகலிடமாக இந்தியா விளங்கும் என்றும் அத்தகைய இந்துக்கள் இந்தியாவில் தஞ்சம் கோருவது அனுமதிக்கப்படும் என்றும் பாரதீய ஜனதாவின் தேர்தல் விஞ்ஞாபனம் கூறியது.

ஆனால், இந்த விவகாரங்கள் ஒவ்வொன்றையும் புதிய அரசாங்கம் எவ்வாறு கையாளும்? சீனாவின் 'விஸ்தரிப்புவாதத்தைத்' தடுத்து நிறுத்த அரசாங்கம் எத்தகைய நடவடிக்கைகளை எடுக்கும் என்பது தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. ஒசாமா பின்லேடன் பாகிஸ்தானில் மறைந்திருந்த இடத்தை முற்றுகையிட்டு அவரை அமெரிக்கப் படைகள் சுட்டுக் கொன்றதைப் போன்ற நடவடிக்கைகளில் இறங்கக்கூடிய ஆற்றல் இந்தியாவுக்கு இருக்கிறதா? பங்களாதேஷ் அகதிகள் சம்பந்தப்பட்ட விவகாரம் நீண்டகாலமாகவே எளிதான தீர்வு எதுவும் காணமுடியாத ஒரு பிரச்சினையாக இருந்துவருகிறது.

புதிய அரசாங்கம் பாகிஸ்தான் தொடர்பிலான அதன் கொள்கையில் பெருமளவுக்கு மாற்றங்களைச் செய்வது சாத்தியமில்லை. முன்னேற்றம் ஏற்பட்டிருக்காவிட்டாலும் கூட, எந்த அரசாங்கமும் பேச்சுவார்த்தையை அலட்சியம் செய்துவிடமுடியாது. விளைவுகள் எத்தகையவையாக இருந்தாலும் கூட, பேச்சுவார்த்தைகள் தொடரும். அடல் பிஹாரி வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கம் பாகிஸ்தானுடனும் சீனாவுடனும் நெருக்கமான பேச்சுவார்த்தைகளை நடத்தியது. கார்கில் போர் இடம்பெற்றதையும் பொருட்படுத்தாமல் (மறைமுக மார்க்கங்களின் ஊடாக என்றாலும்) பேச்சுகள் தொடர்ந்தன. வாஜ்பாய் இன்னொரு 5 வருடங்களுக்கு பதவியில் இருந்திருக்க வாய்ப்புக் கிடைத்திருக்குமேயானால் பாகிஸ்தானுடன் முக்கியத்துவம் வாய்ந்த உடன்படிக்கைகளை (காஷ்மீர் விவகாரத்திலும் கூட) செய்துகொண்டிருப்பார் என்று ஆய்வாளர்களும் அவதானிகளும் கூறுகிறார்கள்.

ஆனால், ஒரு விடயம் மாத்திரம் தெளிவானது. அரசாங்கம் பாகிஸ்தான் மற்றும் சீனா தொடர்பில் கூடுதலான அளவுக்கு இறுக்கமான கொள்கையைக் கடைப்பிடிக்கும்.

**ஒட்டுமொத்த தேசிய நலனைப்பாதிக்காத வகையில் மாநிலங்களின் நலன்களையும் பாதுகாக்கக்கூடியதாக முரண்பாடு இல்லாத – ஒத்திசைவான கட்டமைப்பொன்றைத் தோற்றுவிப்பது என்பது புதிய அரசாங்கத்திற்கு பெரிய பிரச்சினையாக இருக்கப்போகிறது.**

### உள்நாட்டுச் சவால்கள்

பாராளுமன்றத்தில் அரசியல் கட்சிகள் மத்தியில் ஒத்துழைப்பு உணர்வை மீண்டும் ஏற்படுத்தி நம்பிக்கை மிகுந்த சூழ்நிலையொன்றை ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. புதிய அரசாங்கம் எதிர்நோக்கும் உள்நாட்டுச் சவால்களில் இது மிகவும் பாரதூரமான சவாலாகும். வேறுபட்ட அரசியல் கட்சிகள் மத்தியில், குறிப்பாக காங்கிரஸுக்கும் பாரதீய ஜனதாவுக்கும் இடையேயான பரஸ்பர நம்பிக்கை மிகவும் தாழ்ந்த நிலையில் இன்று இருக்கிறது.

ஒத்துழைப்புச் சூழ்நிலையை உருவாக்கும் பிரதான பொறுப்பு ஆளும் கட்சியின் கைகளிலேயே இருக்கின்றது என்கின்ற அதேவேளை, முக்கியத்துவம் வாய்ந்த தேசிய மற்றும் சர்வதேச விவகாரங்கள் தொடர்பில் ஒத்துழைப்பை வழங்குவதற்கு எதிர்க்கட்சிகள் மறுக்கக்கூடாது. அத்தகைய அணுகுமுறையொன்று இல்லாதபட்சத்தில் முக்கியமான சகல சட்டவாக்க அலுவல்களும் தடைப்பட்டுப் போகும். 15 ஆவது லோக்சபாவில் இதுதான் நடந்தது. மன்மோகன் சிங் அரசாங்கத்தின் கடைசி சில வருடங்களில் காணப்படக்கூடியதாக இருந்த கொள்கை ஸ்தம்பித நிலையினால் பாதிக்கப்பட்டிருக்கின்ற நாட்டினால் சட்டவாக்க அலுவல்கள் தடைப்பட்டுக் கிடப்பதை தாங்கிக்கொள்ள முடியாது.

மாநிலங்களையும் யூனியன் பிரதேசங்களையும் வேறுபட்ட கட்சிகள் ஆட்சிசெய்கின்றன. அவை தேசிய நோக்கு மற்றும் முன்னுரிமைக்குரிய விவகாரங்களுடன் அடிக்கடி முரண்படுகின்ற வேறுபட்ட முன்னுரிமைகளைக் கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக, அரசியலமைப்பின் சமஷ்டிக் கோட்பாடு நெருக்குவாரத்திற்குள்ளாகிறது. சமஷ்டி மற்றும் மாநில சுயாட்சிக் கோட்பாடுக்குப் பின்னால் மறைந்து நின்று கொண்டு சில மாநில அரசாங்கங்கள் மத்திய அரசாங்கத்தின் கொள்கைகளையும் தீர்மானங்களையும் சீர்குலைப்பதில் வெற்றி கண்டிருக்கின்றன. ஒட்டுமொத்த தேசிய நலனைப் பாதிக்காத வகையில் மாநிலங்களின் நலன்களையும் பாதுகாக்கக்கூடியதாக முரண்பாடில்லாத ஒத்திசைவான கட்டமைப்பொன்றைத் தோற்றுவிப்பது என்பது புதிய அரசாங்கத்துக்குப் பெரிய பிரச்சினையாக இருக்கப்போகிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுப்பரவல்



# காபிரியேல் கார்ஸியா மார்க்வெஸ்

## (1927 -2014)



மூர்.ஜீவானந்தம்

இருபதாம் நூற்றாண்டு இலக்கியத்தில் மகத்தான ஆளுமையாக வலம்வந்தவர் காபிரியேல் கார்ஸியா மார்க்வெஸ். இவரது 'நூற்றாண்டுகால தனிமை' (One Hundred years of Solitude) என்னும் நாவல் இவருக்கான உலக அங்கீகாரத்தையும் பெற்றுக்கொடுத்தது. 1982இல் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற இவரது எழுத்துக்கள் இவரது கற்பனையில் உருவாகிய லத்தீன் .அமெரிக்க நிலப்பரப்பை விவரித்தாலும் அவை உலகளாவிய ஈர்ப்பைக் கொண்டவை. மார்க்வெஸ்ஸின் படைப்புகள் முப்பதிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இங்கு தமிழ் மொழியும் அடங்கும். டிக்கன்ஸ், டால்ஸ்டாய் போன்ற காலத்தை வென்று நிற்கும் எழுத்தாளர்கள் வரிசையைச் சேர்ந்தவர் மார்க்வெஸ். இன்றுவரை இவரது புனைவியலைப் புரிந்துகொள்ளும் நோக்கில் பல்வேறு விமர்சன எழுத்துக்கள், கோட்பாடுகள் உருவாக்கம் பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்வெஸின் பாதிப்பு 1990களுக்குப் பிறகு தமிழ்ச் சூழலில் அதிகம் தாக்கம் பெற்று வந்தது. மொழியின் நிலையை விரிவுபடுத்தி உள்மனக் கனவையும் யதார்த்தத்தையும் ஏதோவொரு புள்ளியில் ஒன்றிணைத்து யதார்த்த கட்டமைப்பின் வரையறைகளை உடைத்து எழுத்தை அடுத்த கட்டத்திற்குக் கொண்டுபோனது இவரது பாணி. இதுவே Magical Realism அல்லது மாய யதார்த்த மாகும். தமிழகத்து புனை உலகில் இந்த சிந்தனையின் தாக்கம் பரிசோதனை முயற்சியாக பல்வேறு படைப்புகளைத் தந்துள்ளது. ஆனால், இலங்கைச் சூழலில் மார்க்வெஸின் படைப்புகள் அதிகம் அறிமுகம் செய்யப்படவில்லை. தீவிர படைப்பாளராலும் கவனிப்புப் பெறவில்லை. இதனால் தான் மார்க்வெஸின் ஆளுமை இன்னும் தெளிவாக புரிந்துகொள்ளப் படாமல் உள்ளது. இந்தப் பின்புலத்தில் தான் இவரது மறைவு ஈழத்து தமிழ்ச்சூழலில் அதிகம் தாக்கம் செலுத்தவில்லை.

சமகால நவீன வாழ்க்கையின் மனச்சாட்சியாக மார்க்வெஸ் இயங்கி வந்துள்ளார். இவரது படைப்புகள் உலக இலக்கியத்துக்கு வித்தியாசமான, தனித்துவமான வளங்களை வழங்கியுள்ளது. இத்தகைய இலக்கிய ஆளுமை மெக்சிக்கோ சிற்றியில் உள்ள தனது இல்லத்தில் கடந்த மாதம் தனது 87 ஆவது வயதில் (17.04.2014) காலமானார். இன்று பல்வேறு உலக இலக்கிய இதழ்களில் மார்க்வெஸ் எனும் இலக்கிய கர்த்தாவின் படைப்பாளுமை குறித்து தீவிர விசாரணைகள், பதிவுகள் வெளிப்பட்டு வருகின்றன.

சமகாலத்தில் இன்று பல பல்கலைக் கழகங்களில் பாடமாகவும் பல எழுத்தாளர்களின் தீரா காதலாகவும் உள்ள இவரது எழுத்துகளுக்கு அடிப்படை இவரது தாய்வழிப் பாட்டியும் தாத்தாவும் தான். இதனை பல்வேறு நேர் காணல்களிலும் இவரே குறிப்பிட்டுள்ளார். கொலம்பியாவில் உள்ள அரகதகா என்ற சிற்றூரில் மார்ச் 6, 1927இல் மார்க்வெஸ் பிறந்தார். சகோதர, சகோதரியர் 12பேரில் இவர் தான் மூத்தவர். சிதிலமடைந்த தன்னுடைய அம்மா வழி தாத்தா பாட்டியின் வீட்டில் இளமைப்பருவத்தைக் கழித்தார். இந்த வீடு தான் இவருடைய எழுத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பாட்டியின் கதைகளில் வந்த பேய்கள் எல்லாம் இந்த வீடுகளில் வசித்தவை என்கிறார் மார்க்வெஸ். இவரது தாத்தா நிகோலஸ் மார்க்வெஸ் மேசியாவும் மார்க்வெஸ் வாழ்க்கையில் மிகவும் முக்கியமானவர். தனது பேரன் ஓவியம் வரைந்து விளையாடட்டும் என்பதற்காக தன்னுடைய பட்டறையின் சுவர்களுக்கு வண்ணம் பூசி வைத்தார். தாத்தா, பாட்டி இருவரும் மார்க்வெஸின் ஆளுமை உருவாக்கத்தின் முக்கிய பங்கு வகிப்பவர்கள். இந்த இருவரது மொழி சார்ந்த அனுபவவெளி காட்டிய உலகத்தை தன்வயப்படுத்தினார் மார்க்வெஸ். இவருடைய ஊர் அரகதகாவும் இவரது படைப்புகளில் பெருமளவு தாக்கம் செலுத்தியுள்ளது. 2002 இல் இவர் வெளியிட்ட 'கதைசொல்வதற்காக வாழ்தல்' என்ற தன் வரலாற்றுப் புத்தகத்தில் 1950 இல் குழந்தைப் பருவத்திற்குப் பிறகு தனது ஊரான அரகதகாவுக்கு தான் மேற்கொண்ட முதல் பயணத்தைப் பற்றி மார்க்வெஸ் இப்படி எழுதுகிறார். 'என்னை உடனடியாக ஆட்கொண்ட விடயம் அந்த அமைதி தான். என் கண்ணைக்கட்டி விட்டு கேட்டால் கூட இந்த உலகத்து அமைதிகளுக்கிடையே நான் அடையாளம் கண்டுவிடுவேன் அந்த பௌதீக அமைதியை'.

மொழியின் நிலையை விரிவுபடுத்தி உள்மனக்கனவையும் யதார்த்தத்தையும் ஏதோவொரு புள்ளியின் ஒன்றிணைத்து யதார்த்தக் கட்டமைப்பின் வரையறைகளை உடைத்து எழுத்தை அடுத்த கட்டத்திற்குக்கொண்டு போனது காபிரியேல் கார்ஸியா மார்க்வெஸ்ஸின் பாணி. இதுவே மாய யதார்த்தம் (Magical Realism) ஆகும்.

மார்க்வெஸ் பிழைப்புக்காக செய்தித்தாள்களில் எழுதத் தொடங்கினார். எழுத்து, இதழியல், பெண்கள், மது என்று கழிந்த நாட்கள் அவை.




பிடல் காஸ்ட்ரோவுடன்

அந்தக் காலகட்டத்தில் பல்வேறு எழுத்தாளர்களின் நூல்களை விரும்பிப்படித்தார். அந்தப் புனைவுலகத்தின் பல்வேறு வளமான கூறுகளையும் உள்வாங்கிக் கொண்டார். ஹெமிங்வே, டிக்கன்ஸ், டால்ஸ்டாய், காப்கா முதலான எண்ணற்றபடைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்வெஸை அவரது பின் புலத்திலிருந்து புரிந்துகொள்ளா மல் அவலமான, வேடிக்கையான விநோதங்கள் தமிழ்ச் சூழலில் இடம்பெற்றுள்ளன. வெறுமனே கதை சொல்லும் முறையை மாற்றுவதை அல்லது அவ்வாறு மாற்றுவதான பாவனையை மாய யதார்த்தம் என்று தவறாகப் புரிந்துக்கொண்டு கதை விடும் அப்பாவித்தனமான சூழல் உருவாகியுள்ளது.



கொலம்பிய தேசிய விடுதலை இராணுவத்தின் 2ஆம் நிலைத்தலைவர் அன்டோனியோ கார்சியாவுடன் மார்க்வெஸ் (2005 டிசம்பர் 16)

பாளிகளுடன் வாழத் தொடங்கினார். நமக்கு முன்னால் இருக்கும் பத்தாயிரம் ஆண்டுகால இலக்கியங்களைப் பற்றிய பிரக்ஞை சிறு அளவில் கூட இல்லாமல் ஒரு நாவல் எழுத யாராவது உத்தேசிக்க முடியுமா என்று என்னால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை என்று ஒரு முறை குறிப்பிட்டார். நான் வியந்து போற்றிய படைப்பாளிகளைப் போலவே எழுத நான் ஒருபோதும் முயன்றதில்லை. மாறாக அவர்களை என் எழுத்தில் பிரதிபலிக்காமல் இருக்க என்னால் முடிந்ததை எல்லாம் செய்திருக்கிறேன் என்றார்.

அதைவிட அந்தவீட்டைப் பற்றியுள்ள பேய்க்கதைகளும் பாட்டியின் அதீத மூட நம்பிக்கைகளுமே மார்க்வெஸின் . இளமைப்பருவத்தைப் பாதித்தன. தன் எழுத்துக்கான மொழியை தனது பாட்டியிடம் இருந்து தான் மார்க்வெஸ் எடுத்துக் கொண்டிருந்தார். நூற்றாண்டுகால தனிமை எழுதியதைப் பற்றி பின்னர் மார்க்வெஸ் கூறும்போது, 'இறுதியாக நூற்றாண்டுகால தனிமை எனது பாட்டி கதை சொல்லும் தொனியை எடுத்துக்கொண்டது. அவர் சொல்வதெல்லாம் அதீத மாயங்களாகவும் அற்புதமாகவும் இருக்கும். ஆனால், மிக இயல்பாக இருக்கும். அதைவிட முக்கியம் என்னவெனில் அக்கதைகளைக் கூறும் போது இருக்கும் அவரின் முகபாவம். தன் முகபாவத்தை அவர் மாற்றிக்கொள்ளவே மாட்டார். அனைவரும் அதைக்கண்டு ஆச்சரியப்படுவார்கள். இந்த பாவத்தை நம்பாமல் நான் முன்னர் எழுதிக்கொண்டிருந்தேன். அந்த பாவத்தை - உறுதியான முகத்துடன் - நானே நம்பி, அதை என் பாட்டி கூறிய படியே எழுத்தில் கொண்டுவர வேண்டுமென்பதை நான் பின்னர் உணர்ந்துகொண்டேன்'.

தொன்மக்கூறுகளை தன் எழுத்தில் வடிக்க இவருக்கு பாட்டியின் கதைகள் உதவியாக இருந்து. அதேநேரம், இவரது அரசியல் ஈடுபாடுகளைப் புரிந்துகொள்ள வேண்டுமானால், கொலம்பியாவின் பின்புலம் தெளிவாக உணர்ந்துகொள்ளப்படவேண்டும். ஏனெனில், இந்த ஈடுபாடுகள் தான் மார்க்வெஸின் எழுத்தில் ஆழமாக வெளிப்பட்டது. இவரது அனுபவங்களைச் சார்ந்தே தனக்கான மொழிசார் புனைவுலகத்தைக் கட்டமைத்தார். அப்போது உலகளவில் புகழ்பெற்ற எழுத்தாளர்களின் எழுத்து மரபில் இருந்து இவரது கதை சொல்லும் பாணி வித்தியாசமாக வெளிப்பட்டது. இதுவே இவரது பலமாகவும் அமைந்தது.

இன்று கொலம்பியா பல விசித்திரங்களை உள்ளடக்கிய நாடு. உள்நாட்டுப் போர்களும் படுகொலைகளும் சர்வாதிகார ஆட்சியும் அதன் முகங்களில் ஒன்று. 1819 ஆம் ஆண்டு கொலம்பியாவிற்கு ஸ்பெயினிடம் இருந்து சுதந்திரம் கிடைத்தது. அதுதான் லத்தீன் அமெரிக்காவின் குடியரசு நாடுகளில் பழமையானது. ஆனால், இந்தக் குடியரசு அதிக ஆண்டுகள் தாக்குப்பிடிக்கவில்லை. இதற்கு முன்னர் ஆரம்பத்தில் ஸ்பெயின் நாட்டுக்காரர்களும் இந்தியர்களும் ஒருவரோடு ஒருவர் சண்டை போட்டுக்கொண்டுதான் இருந்தனர். லத்தீன் அமெரிக்காவை தங்கம் தேடுதல், மதமாற்றம் மற்றும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் ஸ்பெயின் துண்டாடிக் கொண்டிருந்தது. கூடவே ஆங்கிலேயரும் சேர்ந்துகொள்ள அடுத்த சில நூற்றாண்டுகள் உள்நாட்டுச் சண்டைகள் நடைபெற்றவாறே இருந்தன.

1819 இல் நெப்போலியன் ஸ்பெயின் அரசனாக இருந்தபோது கொலம்பியா தன்னைக் குடியரசாக அறிவித்துக்கொண்டது. அந்த மகிழ்ச்சி அதிக ஆண்டுகள் நீடிக்கவில்லை. 1815 ஆம் ஆண்டுகளில் ஜெனரல் முறில்லோ தன் வாளால் இந்த நாட்டைக் கைப்பற்றினார். அப்போது மிக மோசமான உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டன. இரண்டாம் கட்டமாக கொலம்பியாவின் சைமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிவர் போரிட்டு 1820 ஆம் ஆண்டு நாட்டை சுதந்திரமாக்கினார். இவரே நாட்டின் முதல் அதிபராகவும் பொறுப்பேற்றார். 1849இற்குள் கொலம்பியாவில் மோதும் அணிகள் இரண்டு கட்சிகளாக உருவெடுத்தன. ஒன்று மிதவாதிகள் மற்றொன்று பழமைவாதிகள். இன்று வரைதொடரும் இக்கட்சிகள் தான் மார்க்வெஸின் எழுத்துப் பின்னணியில் இருப்பவை. இவைகளைப் புரிந்துகொண்டால் தான் மார்க்வெஸின் எழுத்தை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியும்.

மிதவாதிகளும் பழமைவாதிகளும் கருத்து ரீதியாகத்தான் அணிதிரண்டார்கள். ஆனால் பல்லாண்டுகளாக நடைபெற்ற போரின் விளைவாக இவர்கள் இருவரும் எப்போதும் மோதிக்கொள்ளும் சண்டைக்குழுக்களாக இருந்தார்கள். யார் ஆட்சிக்கு வந்தாலும் அடுத்தவர் மீண்டும் ஆட்சிக்கு வந்துவிடாத வண்ணம் அவர்களை ஒடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதோடு, ஊழல் தாண்டவமாடும் மோசமான ஆட்சியென்று ஒருவருக்கு மற்றவர் சளைக்காது இருந்தார்கள்.

கொலம்பியாவின் 19 ஆம் நூற்றாண்டு முழுவதும் உள்நாட்டுக் கலகம், போர், ஆட்சிக்கவிழ்ப்பு என்று தொடர்ந்தது. 1899 ஆம் ஆண்டு கொலம்பியாவின் வரலாற்றிலேயே மோசமான உள்நாட்டுப் போர் ஆரம்பமானது. 1902 ஆம் ஆண்டின் இறுதியில் மிதவாதிகளின் தோல்வியில் முடிந்த இப்போருக்குப் பெயர் தான் ஆயிரம் நாள் போர். இந்தப் போரில் ஒரு இலட்சம் விவசாயிகளும் அவர்தம் வாரிசுகளும் மடிந்துபோயினர். மார்க்வெஸின் பாட்டனார் இப்போரில் ஈடுபட்டார். அவரும் அவரோடு போரில் ஈடுபட்டவர்களும் பின்னாளில் மார்க்வெஸின் புத்தகங்களில் முக்கியமான கதாப்பாத்திரங்கள் ஆயினர்.

1928 இல் நடைபெற்ற மிகப்பெருமளவிலான படுகொலைகள் கொலம்பிய மக்களின் மனங்களில் ஆறாத வடுக்களை உருவாக்கின. கொலம்பியா வின் முக்கிய பயிர் கோப்பி தான். என்றாலும் இந்தக் காலகட்டங்களில் வாழை உற்பத்தியும் செழுமையாகச் செய்யப்பட்டு வந்தது. இதுவும் இந்த மக்களின் பொருளாதாரத்தை நிர்ணயிக்கக்கூடிய ஓர் ஏற்றுமதிப் பொருளாகவும் அமைந்திருந்தது. இதைவிட இங்கு கால்பதித்த அமெரிக்க நிறுவனங்கள் மக்களை மிக மோசமாகச் சுரண்டியும் ஒடுக்கியும் வந்தனர். ஊழலும் அரசியல் அதிகாரத் துஷ்பிரயோகமும் எங்கும் நிலைபெற்றிருந்தன. 1928 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 32ஆயிரம் தொழிலாளர்கள் கழிவறை வசதி மற்றும் சம்பளத்தைப் பணமாகக் கொடுக்கவும் கேட்டு போராட்டத்தில் குதித்தார்கள். திட்டமிட்ட ஆர்ப்பாட்ட நடவடிக்கையிலும் ஈடுபட்டார்கள். அப்போது இந்தக் கூட்டத்தை கலைக்க அரசு பெரும்படையை அனுப்பியது. நிராயுதபாணிகளாக இருந்த விவசாயிகளைப் படையினர் சரமாரியாகச் சுட்டுத்தள்ளினர். நூற்றுக்கணக்கில் மரணங்கள் நிகழ்ந்தன. அடுத்து வந்த சில தினங்களில் பலர் காணாமல் போயினர். கடைசியில் அப்படியொரு சம்பவம் நடைபெறவில்லை என்று அரசு சாதித்தது. பின்னர் வரலாற்று நூல்களில் அந்தச் சம்பவம் இடம்பெறவில்லை. இந்தச் சம்பவத்தைத்தான் மார்க்வெஸ் தனது நூற்றாண்டுகால தனிமையில் பின்னர் சேர்த்தார். இந்தப் புரிதல் முக்கியம்.

இதற்குப் பின்னர் நடைபெற்ற வன்முறை வெறியாட்டங்களின் பொழுது மார்க்வெஸ் சாட்சியாக இருந்தார். இந்தச் சமயத்தில் ஊழல் அரசியலை எதிர்த்து குரல் கொடுத்த ஒரு தைரியவான் இருந்தார். அவர் பெயர் ஜோர்ஜ் எலீசர் கெய்டன். மிதவாதக்கட்சியின் உறுப்பினரான இவர் அப்படுகொலைகள் பற்றி விசாரணை செய்ய ஒரு கூட்டத்தையே கூட்டினார். நாளடைவில் இவர் மக்கள் மத்தியிலும் விவசாயிகள் மத்தியிலும் செல்வாக்குப் பெற்றார். இவருக்கு பரவலான ஆதரவு பெருகிவந்தது. அரசியல் கட்சிகள் இவரை அபாயமாகவே கருதத் தொடங்கினர்.

கெய்டன் வானொலியை தன் பிரதான ஆயுதமாகக் கொண்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தத் தொடங்கினார். 1946ஆம் ஆண்டுக்குள் இவரது செல்வாக்கு கூடிப்போக மிதவாதக்கட்சியிலேயே பிளவை ஏற்படுத்தும் அளவுக்கு


மனைவி மேசிடஸுடன்

சமகால நவீன வாழ்க்கையின் மனச்சாட்சியாக மார்க்வெஸ் இயங்கி வந்துள்ளார். இவரது படைப்புகள் உலக இலக்கியத்திற்கு வித்தியாசமான தனித்துவமான வளங்களைக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்தார். இந்தப் பிளவினால் மீண்டும் பழமைவாதிகள் ஆட்சிக்கு வந்தனர். இவர்கள் உடனடியாக துணை இராணுவப்படைகளை தயார்செய்தனர். இவர்களின் முக்கிய வேலையே மிதவாத வாக்காளர்களைப் பயமுறுத்த வேண்டியதுதான். அந்த ஆண்டுக்குள் ஆயிரக்கணக்கானவர்களைக் கொன்று குவித்தனர். 1947 தேர்தலில் மீண்டும் மிதவாதிகள் ஆட்சிக்கு வந்தனர். இத்தனைக்கும் பழமைவாதிகளின் அச்சுறுத்தல்களையும் மீறி வாக்காளர்கள் பெரும் திரளாக வந்து வாக்களித்தனர். இதனால் மிதவாதிகள் பெரும் வெற்றி பெற்றனர். கெய்டன் கட்சித் தலைவரானார். உடனே அங்கே பதற்றம் அதிகரித்தது. 1948ஆம் ஆண்டு ஏப்ரல் 9ஆம் நாள் கெய்டன் படுகொலை செய்யப்பட்டார். தொடர்ந்து வரலாறு காணாத வன்முறைகள் எங்கும் தலை




விரித்தாடின. 3நாட்களில் 2500 பேர் வன்முறைக்குப் பலியானார்கள்.

வன்முறைகளை அடுத்து மோசமான கட்டம் உருவானது. இரண்டு கட்சிகளும் கெரில்லா படைகளைத் தயார் செய்ய நாடெங்கும் பீதி உருவானது. நகரங்களும் கிராமங்களும் கொளுத்தப்பட்டன. பெண்கள், குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கானோர் கண்மூடித்தனமாகக் கொல்லப்பட்டனர். பண்ணைகள் கைப்பற்றப்பட்டன. 10 இலட்சம் விவசாயிகள் வெனிசூலாவிற்கு அகதிகளாக இடம் பெயர்ந்தனர். 1949 இல் பாராளுமன்றத்தில் பேசிக்கொண்டிருந்த ஒரு மிதவாதத் தலைவரை அங்கே சுட்டுக்கொன்றனர் பழமைவாதிகள். கடைசியாக பழமைவாதிகள் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு நாடு முற்றுகையிடப்பட்டுள்ளதாகக் கூறி அத்தனை மிதவாதிகளையும் தண்டித்து கொன்று குவித்தனர். கொலம்பியாவே துண்டாடப்பட்டது. 1953க்குள் 1,50,000 பேர் வன்முறைக்கு பலியானார்கள். அந்த வன்முறையே மார்க்வெஸின் பல குறுநாவல்களுக்கும் படைப்புகளுக்கும் பின்புலமானது. குறிப்பாக இன் ஈவில் ஹவர் கதைக்குப் பின்புலமானது.

நாம் இங்கு ஒரு முக்கிய விடயத்தைக் கவனிக்க வேண்டும். மார்க்வெஸின் கதைகள் யதார்த்தத்தை மீறியவை என்றும் புரியவில்லை என்றும் சொல்பவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். மார்க்வெஸ் வாழ்ந்த நாடு மேலே விபரிக்கப்பட்ட அதன் வரலாறு ஆகியவை இரத்தத்தால் தோய்ந்தவை. போரும் அமைதியின்மையும் பயமும் கொடுங்கோல் ஆட்சியும் சர்வாதிகாரமும் வாழ்வின் நிச்சயமின்மையும் தான் யதார்த்தமாக இருந்தது. இதைத்தான் மார்க்வெஸ் வாழ்வில் கண்டார், அனுபவித்தார். இதுதான் லத்தீன் அமெரிக்க கொலம்பியாவின் பின்னணி. இந்தப் பின்னணி தான் மார்க்வெஸ் என்ற உன்னதமான படைப்பாளியை உலகுக்குத் தந்தது.

இந்தப் பின்னணியில் இருந்து வரும் எழுத்தாளர்களுக்கு எதையும் நேரடியாக யதார்த்தமாகச் சொல்ல முடியாது. சர்வாதிகாரம் தலைக்கு மேலே தொங்கிக்கொண்டிருக்கும் கத்தி. ஆனாலும் மனித நேயமும் நடப்பவைகளை மாற்றவேண்டும் என்ற அவாவும் உள்ள ஓர் எழுத்தாளனுக்கு தன்னை வெளிப்படுத்திக் கொள்ள ஒரு வழி கண்டிப்பாகத் தேவை. அதைத்தான் மார்க்வெஸ் கண்டுபிடித்தார். கொலம்பியாவின் தொன்மங்கள், பழங்கதைகளாகியவை இவருக்கு கைகொடுத்தன. இதற்கேற்ப ஒரு வலுவான மொழி புனைவியலின் அற்புதங்கள் தோன்றத் தொடங்கின. ஸ்பானிய மொழியில் படித்தவர்களுக்கு இவர் கதைகளின் அர்த்தம் மிக இயல்பாகப் புரிந்தது. இவர்களின் வாழ்வை படம் பிடித்தவை தானே மார்க்வெஸின் கதைகள்.

மார்க்வெஸின் படைப்புகள் மற்ற மொழிகளுக்கு போகும் போது பல்வேறு சிக்கல்களுக்கு முகம்கொடுத்தன. கொலம்பியாவைப் பற்றி சரியான அறிமுகம் அற்றவர்களுக்கு இவரது கதைகளைப் புரிந்துகொள்வதில் பல்வேறு பிரச்சினைகள் இருந்தன. இவரது கனவு போன்ற மொழி, பிறமொழிமாற்றத்தின் போது அது சிதைந்து விடுகின்றது. அதன் உயிர்ப்பை இழந்துவிடுகின்றது. இதையும் மீறி இவரின் கதை விவரிக்கும் நேர்த்தி அத்தனை பேரையும் கட்டிப்போட்டு விட வித்தியாசமான கதையுலகம் திறந்துவிடப்பட்டது. இதனால் உலகம் இவரைக் கொண்டாடியது. மார்க்வெஸின் ஆளுமைக்குப் பின்னால் கொலம்பியாவின் சமூக, அரசியல் கொலைத்தாண்டவம் இரத்த சாட்சியாக இருந்து அவரது உள்ளுணர்வை இயக்கிவந்துள்ளது.

மார்க்வெஸை அவரது பின்புலத்தில் இருந்து புரிந்துகொள்ளாமல் அவலமான வேடிக்கையான வினோதங்கள் தமிழ்ச்சூழலில் இடம்பெற்றுள்ளன. வெறுமனே கதைசொல்லும் முறையை மாற்றுவதால் அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு மாற்றுவதான பாவ னையை மாய யதார்த்தம் என்று தவ றாகப் புரிந்துகொண்டு கதைவிடும் அப்பாவித்தனமான சூழல் உருவாகி யுள்ளது. மாய யதார்த்தம் அறிமுக மாகி கிட்டத்தட்ட 25 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. வழக்கம் போல் இதன் அழகால் மயங்கி எப்படியா வது தமிழில் இதனை அறிமுகப்படுத் திவிட வேண்டும் என்ற உற்சாகத்தில் பல முயற்சிகள் வெளியாகியுள்ளன. பலர் இன்றும் இந்த மாய யதார்த்தத் தைத் தொடத் தகுந்ததல்ல என்று வில கியே இருக்கவும் செய்கின்றனர். தீவிர ஆதரவும் எதிர்ப்பும் எந்த வொரு புதுப்பாணி வந்தாலும் எதிர் கொள்ளவேண்டும் என்பது இயற் கையே. இதெல்லாம் ஆரம்ப எதிர் வினை தான். இன்று மார்க்வெஸை ஊன்றி வாசிக்கும் ஒரு புதுத் தலை முறை தோன்றிவிட்டது. மார்க் வெஸை பற்றியும் மாய யதார்த்தம் பற்றியும் பேசுவதற்கான சொல்லா டல் களம் உருவாகியுள்ளது. உணர்ச்சி வேகம் அடங்கி நிதான மாக இந்த சிந்தனைப்பள்ளியை புரிந்துகொள்வதற்கான பக்குவம் தோன்றியிருக்கிறது.

மாய யதார்த்தம் என்பது வாழ்வை நடப்புகளை வேறொரு வகையில் பார்க்க முயற்சிப்பது. இது நமது பார் வையை மாற்றியமைக்கக்கூடியது. இந்த சிந்தனையை, பார்வையை உள் வாங்கியவர்கள் தான் பரிசோதனை முயற்சியாக புதிய பாணியில் ஆரம் பிக்கின்றனர். யதார்த்தத்தின் கட்டுக் கோப்பான காரணகாரிய எல்லை களை மீறி செயற்படுத்துவதும், அதன் மூலம் யதார்த்தம் வழங்கத் தவறிய ஒரு அனுபவத்தை சாத்தி யப்படுத்துவதும் தான் மாய யதார்த் தம். மேஜிக்கல் ரியலிசம் அல்லது மாய யதார்த்தவாதம் என்ற சொல் எப்படி உருவானது, யாரால் உரு வாக்கப்பட்டது என்பதை விட அது குறிக்கும் பொருள் முக்கியமானது. இந்தவகை எழுத்தாளர்களில் முக்கி யமானவர்களில் ஒருவரான இசபெல் ஆலன் டே குறிப்பிடுவது போல் மாய யதார்த்தம் என்பது வளமாக வும் சிக்கலானதாகவும் உள்ள நிஜத்தை சொல்ல வல்லது.

அற்புதங்களும் யதார்த்தமும் ஒன் றுக்கொன்று ஊடாடும் மேஜிக்கல் ரியலிசம் என்னும் வகையின் தளகர்த்தா மார்க்வெஸ். வருடக்கண க்கில் பெய்யும் மழை, வானில் இரு ந்து உதிரும் பூக்கள், பல நூற்றாண்டு கள் வாழும் கொடுங்கோலர்கள்,




தலையில் இருந்து மேலெழும் பாதிரி யார்கள், அழுகாத பிணங்கள் என்று பல்வேறு அதிசயங்களைக் கொண் டவை இவரது கதைகள். இவற்றோடு யதார்த்தமான அதிசயம் ஒன்றாக அரைநூற்றாண்டு இடைவெளியில் காதலை புதுப்பித்துக்கொள்ளும் காத லர்களையும் சேர்த்துக்கொள்ளலாம். மேஜிக்கல் ரியலிசம் என்பது லத்தீன் அமெரிக்க நாடுகளில் கொடுங்கோ லர்கள், புரட்சியாளர்கள், நீண்டகால பஞ்சம், நோய், வன்முறை ஆகிய வற்றில் இருந்து உருவாகிறது என்கி றார் மார்க்வெஸ். இந்த யதார்த்தத்தை மரபான சொல் முறையில் நம்பகத் தன்மையுடன் சொல்ல முடியாதென் றும் இதைச் சொல்வதற்கான மாற்று யதார்த்தம் தான் மாயை யதார்த்தம் என்றும் குறிப்பிடுகின்றார்.

ஒரு மழைநாளில் மார்க்வெஸின் பதிப்பாளர் நூற்றாண்டு காலத் தனிமை நாவலின் கைப்பிரதியை, படிக்க ஆரம்பிக்கிறார். முன்பின் தெரியாத அந்தக் கொலம்பிய எழுத் தாளரின் ஒவ்வொரு பக்கமும் படிக்க படிக்க அந்தப் படிப்பாளருக்கு உற் சாகம் எல்லை மீறுகிறது. உடனே ஆர் ஜன்டீனாவைச் சேர்ந்த நாவல் ஆசிரி யர் தொமாஸ் எலோய் மாத்தினெஸ் என்பவரை உடனடியாக வரச் சொல்லி அவரிடம் தன் உற்சாக த்தைப் பகிர்ந்துகொள்கிறார். இதைப் போன்ற உற்சாகத்தைத்தான் அந்த நாவல் வெளியானதும் உலகெங்கும் உள்ள வாசகர்கள் வெளிப்படுத்தி னார்கள். இதுவரை 3கோடி பிரதிகளு க்கு மேல் இந்த நாவல் விற்பனையா கியிருந்தது. மார்க்வெஸின் படைப்பு லகத்தையும் அவரது ஆளுமையை யும் அரசியல் சார்ந்த வாசிப்புக்குட் படுத்த வேண்டும்.அப்பொழுதுதான் மூன்றாம் உலகப் பின்புலத்தில் வைத்து இலக்கியத்தின் அரசியலுக் கான கோட்பாடுகளை உருவாக்க முடியும். அந்த வெளிச்சத்தில் நாம் புதிய படைப்புகளை ஆக்க முடியும். மார்க்வெஸின் மறைவு நமக்கு பல் வேறு புதிய செய்திகளை நோக்கு முறைக்கான புதியகளங்களை திறந்து விட்டுள்ளது. அதற்கான வாசிப்பும் தேடலும் முக்கியம். ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்பானிய இலக்கியத்தின் போக்கை மாற்றியமைத்த படைப்பாளி



க.சண்முகலிங்கம்

காபிரியேல் கார்ஸியா மார்க்வெஸ் தனது 87 ஆவது வயதில் 2014 ஏப்ரல் 17 ஆம் திகதி காலமானார். அவரின் மறைவையொட்டி இணையத்தளங்களிலும் பத்திரிகைகளிலும் பல கட்டுரைகள் வெளிவந்தன. ஹபோ (Gabo) என்று அன்போடு அழைக்கப்படும் மார்க்வெஸ் பற்றி 1982 ஆம் ஆண்டில் நோபல் பரிசு கிடைத்த பின்னர் தான் உலகம் அறிந்து கொண்டது. அவர் 1950 களின் தொடக்கம் முதல் எழுதிக் கொண்டிருந்த ஒருவராயினும் 1967 ஆம் ஆண்டில் அவரது 'நூற்றாண்டுக்காலத் தனிமை' நாவல் தான் அவரை உலகப்புகழ்பெற்ற நாவலாசிரியராக அறியச் செய்தது. இந்த நூல் சென்ற ஆண்டு மே மாதம் காலச்சுவடு பதிப்பகம் வெளியீடாகத் தமிழில் வெளிவந்துள்ளது. ஞாலன் சுப்பிரமணியன், சுகுமாரன் என்ற இருவர் இணைந்து இதனை மொழிபெயர்த்துள்ளனர். நோபல்பரிசு கிடைத்து முப்பது ஆண்டுகள் கழித்துத் தமிழில் வெளிவந்துள்ள இந்நூல் இலக்கிய விமர்சகர்கள் போற்றும் மஜிக்கல் ரியலிசம் அல்லது மாய யதார்த்தவாதம் என்பது பற்றிய முழுமையான புரிதலுக்கும், அது சார்ந்த விமர்சன உரையாடலுக்கும் வழிவகுக்கும் என்பது என் நம்பிக்கை. ரூ 325/= என விலை குறிப்பிடப்பட்டுள்ள இந்நூலில் இலங்கைத் தமிழ் வாசகன் இங்கு பெற்றுக் கொள்ள ரூ 1100/= விலை கொடுக்க வேண்டும். புத்தக இறக்குமதியாளர்கள், விநியோகஸ்தர்கள், நூலகர்கள் ஆகிய பலரும் அக்கறையோடு செயற்பட்டால் இது போன்ற உயர் படைப்புகள் பரவலாக வாசகர்களைச் சென்றடைவதோடு, அவை பற்றிய விவாதங்கள், விமர்சனங்கள் பெருகித் தமிழ் வளம் பெறும். இந்த நாவலின் வெளியீடு வெறும் நூல் வெளியீடல்ல. இலக்கிய வாசகனின் உற்சாகக் கொண்டாட்டம் என்று சென்ற ஆண்டு காலச்சுவடு இதழ்




**வாழ்க்கையில் முக்கியமானது உங்களுக்கு என்ன நிகழ்ந்தது என்பதல்ல. நீங்கள் எதை நினைவு கூர்கிறீர்கள், எப்படி நினைவு கூர்கிறீர்கள் என்பதுதான்**

- காபிரியேல் கார்ஸியா மார்க்வெஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று அறிவித்தது. இந்நினைவு அஞ்சலிக் குறிப்பின் நோக்கம் தமிழ் வாசகர்கள் மத்தியில் மார்க்வெஸ் பற்றிய தேடலை ஊக்கப்படுத்துவதே யாகும்.

மார்க்வெஸ் பற்றி இணையத் தளத்திலும் பத்திரிகைகளிலும் வெளி வந்த மூன்று கட்டுரைகளைத் தேர்ந்து அவற்றில் உள்ள கருத்துகளைத் தழுவி மார்க்வெஸ் பற்றி இங்கே எழுதுகிறேன். (இதனை எழுதுபவர் சாதாரண வாசகன் தான் என்று பணிவோடு சொல்லிக் கொள்கிறேன்.)

சிறிராம் செளலியா என்ற பேராசிரியர் The Magic of Marquez என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அக்கட்டுரையில் மூன்றாம் உலகின் இலக்கியம் பற்றிய ஒரு ஒப்பியல் இலக்கியப் பார்வையைத் தந்து மார்க்வெஸின் மேதைமையை அவர் அறிமுகம் செய்திருப்பது என்னைக் கவர்ந்தது. சிறிராம் செளலியா இந்திய துணைக்கண்டத்தின் இலக்கியம் பற்றி அமிதாவ்கோஷ் என்ற நாவலாசிரியரின் கூற்றை மேற்கோள் காட்டி மொழி வேலிகளையும், பிராந்திய எல்லைகளையும் கடக்கும் ஆற்றல் படைத்த இந்திய நாவலாசிரியர்கள் மூவர் பற்றிக் குறிப்பிடுகிறார். சரத்சந்திரர், ஆர்.கே.நாராயண், பிரேம்சந் என்ற மூவரும் நவீன காலத்தின் இலக்கிய கர்த்தாக்களாகத் துணைக்கண்டம் முழுமையிலும் அறியப்பட்டவர்கள். முழு இந்திய துணைக்கண்டத்து மக்களிடையிலும் ஆழ வேர் பதித்து அவர்கள் மனதைக் கவருதல் என்பது இலகுவான ஒரு விடயம் அன்று. இந்தியா ஏறக் குறைய 22 மொழிப் பிராந்தியங்களைக் கொண்ட பெரு நிலத்தொகுதி. தமிழ், மலையாளம், தெலுங்கு, இந்தி, வங்காளி போன்ற மொழி எல்லைகளைத் தாண்டி எல்லா மக்களாலும் (படித்தவர்களால்) அறியப்பட்டவராய் இவர்கள் உள்ளனர். இதுபோன்றே ஆபிரிக்காவில் சின்னுவா அச்சுபே, வொல் சொயிங்கா போன்றோர் ஆபிரிக்கக் கண்டத்து மக்களின் அபிலாசைகளையும் துக்கங்களையும் வெற்றி தோல்விகளையும் தம் படைப்புகள் மூலம் வெளிக் கொணர்ந்து ஆபிரிக்க மக்கள் இலக்கியம் என்று கருத்து உருவாக உதவினர். இவ்வாறே லத்தீன் அமெரிக்காவை 'ஆக்கத்திறனின் வற்றாத ஊற்று நிலமாக'வும் துயரமும் அழகும் மிகுந்த பூமியாகவும் இலக்கியத்தின் ஊடாக உலகறியச் செய்த பெருமை மார்க்வெஸ்ஸிற்கு உண்டு.

மார்க்வெஸ் நாவல்களில் வரும் கதை மாந்தர்கள் விஞ்ஞான நாவல்க





**தீவிர அடக்குமுறையும் வன்முறையும் நிலவும் சூழலிலும் அரசியல் பிரச்சினைகள் தொடர்பாக வெளிப்படையாகப் பேசும் பொதுக்கடமை எழுத்தாளனுக்கு உள்ளது என்பதே மார்க்வெஸ்ஸின் கொள்கையின் பிரதான அம்சம்**

ளில் வரும் அமானுஷத் தன்மையுடைய மனிதர்களுக்கு ஒப்பானவர்கள். லத்தீன் அமெரிக்காவின் சர்வாதிகார ஆட்சியாளர்களின் கீழ் வதைப்பட்ட மக்களின் வாழ்க்கையை யதார்த்தமாகக் கூறமுடியாது. அதனை விவரிப்பதற்கு வார்த்தைகள் துணைசெய்யமாட்டா. நோபல் பரிசு உரையின் போது 'எமது வாழ்க்கையை நம்பக்கூடியதாகச் சொல்லக் கூடிய' மரபு வழிப்பட்ட கலா உத்திகள் இல்லை என்று மார்க்வெஸ் குறிப்பிட்டார். மார்க்வெஸ் தன் கதை சொல்லும் உத்தியாகிய மாய யதார்த்த வாதத்தை தம்பாட்டியிடம் இருந்து கற்றுக்கொண்டாராம். பாட்டி சொன்ன பேய்பிசாசுக் கதைகள், நாட்டார் கதைகள், புராணக்கதைகள் என்பன அவருக்கு இந்த உத்தியைக் கண்டு பிடிக்க உதவினவாம். மார்க்வெஸ் நாவலில் மந்திரமோ மாயமோ இல்லை. லத்தீன் அமெரிக்காவின் யதார்த்த வாழ்க்கை உணர்வு பூர்வமாகவும் கலாபூர்வமாகவும் வெளிப்படுகிறது என்று விமர்சகர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

நிக்கயிஸ்ரர் மற்றும் கதரின் வைனர் (Nick caister and katharine viner) என்போர் எழுதியுள்ள கட்டுரையொன்றில் கொலம்பியாவின் நோபல் பரிசு எழுத்தாளர் காபிரியேல் கார்சியா மார்க்வெஸ் லத்தீன் அமெரிக்காவில் 'இலக்கியச் செழிப்பும் மலர்ச்சியும்' தோன்றுவதற்கு அவரது நூற்றாண்டுகாலத் தனிமை (One hundred years of solitude) மூலம் உதவினார் என்று கூறுகின்றனர். இக்கட்டுரையில் மார்க்வெஸ்ஸின் இலக்கியப் பயணத்தையும் அவரது முக்கியமான நாவல்களைப் பற்றியும் கூறியிருப்பவற்றை அடுத்துக் குறிப்பிடுவோம்.


## இலக்கியப் பயணம்

கொலம்பிய நாட்டின் கரிபியக் கடலோர நகரமான அரகாட்டகா என்னும் இடத்தில் மார்க்வெஸ் பிறந்தார். இப்பகுதி ஸ்பானியர்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுப்பர்கள், சுதேசிகள் என்ற மூன்று கலாசாரப் பாரம்பரியங்களை உடைய மக்களின் கலப்பான பிரதேசமாகும். மார்க் வெஸின் ஆளுமையில் இந்தக் கலாசாரக் கலப்பின் செழுமை வெளிப்பட்டது. அவர் பாரிஸ் நகரத்திலும் மெக்சிக்கோவிலும் வேறு பல இடங்களிலும் தொடர்ந்து நீண்ட காலம் வாழ்ந்தாராயினும் அவரது எழுத்துக்களில் இந்த கடற்கரைப் பிராந்தியமும் அதன் கடுமை நிறைந்த வாழ்க்கையும், இயற்கையின் வலிமையும், அம்மக்களின் புராணக் கற்பனை வழக்காறுகளும் எதிரொலித்தபடி இருந்தன. ஆயினும் மார்க்வெஸ் தனது எட்டு வயதிலேயே கரிபியன் கடற்கரையோரத்தை விட்டு அந்திஸ் மலைப்பகுதியில் உள்ள கொலம்பியத் தலைநகரான பொகொடாவுக்குச் சென்றார். அங்கு கல்வி கற்ற மார்க்வெஸ் சட்டத்துறையில் கல்வி கற்க ஆரம்பித்தார். கவிதை எழுதுவதிலும் வாசிப்பிலும் ஆர்வம் கொண்ட மார்க்வெஸ் சட்டப்படிப்பை இடையில் நிறுத்தி விட்டு பத்திரிகைத்துறையில் நிருபரா




கச் சேர்த்தார். 1950 களில் இவர் வாழ்க்கை கஷ்டம் நிறைந்ததாகவே கழிந்தது. 1955 இல் ஒரு குறுநாவலை எழுதினார். ஆயினும் எழுத்தாளர் என்ற புகழ் கிடைக்கவில்லை. ஊடகவியலாளராகப் பணிபுரியும் வாய்ப்பு அவருக்குக் கதை சொல்லும் கலையில் தேர்ச்சிபெற உதவியது. சினிமாவிலும் ஆர்வம் கொண்டிருந்த மார்க்வெஸ் இத்தாலிக்குச் சென்று அங்கு ரோம் நகரில் பரிசோதனைத் திரைப்படக் கல்லூரியொன்றில் சினிமா பற்றிய பயிற்சியைப் பெற்றார். மெக்சிக்கோவில் வாழ்ந்த காலத்தில் 1960களில் சில திரைப்ப




டங்களுக்கு வசனம் எழுதினார். 1980களில் சர்வதேசத் திரைப்படக் கல்லூரி ஒன்றை கியூபாவின் தலைநகர் ஹவானாவில் நிறுவுவதற்கு உதவினார். இவரது நூல்களால் கணிசமான அளவு வருவாய் கிடைக்கத் தொடங்கியபோது, அவர் கையில் பணம் சேர்ந்தது. 1994 இல் கொலம்பியாவில் கரிபியன் கடற்கரைப் பிராந்தியத்தின் கார்ட்டஜெனா நகரில் ஊடகவியல் கல்லூரி ஒன்றை அவர் நிறுவினார்.

பல்துறைகளிலும் ஈடுபட்ட ஆற்றல்மிக்க கலைஞராக இவர் விளங்கிய போதும், நாவல் இலக்கியம் தான் இவருக்குப் பெருமையைச் சேர்த்த துறை. சாதாரண அறிவுடைய வாசகர்களும் பல்கலைக்கழகப் புலமையாளர்களும் போற்றும் பல நாவல்களை இவர் படைத்தார். 1960 களில் இவரது மூன்று நாவல்கள் விமர்சகர்களின் பாராட்டைப் பெற்ற போதிலும் வர்த்தக ரீதியில் வியாபார வெற்றியைப் பெறவில்லை. அவரது நான்காவது நாவல் 1967இல் ஆர்ஜன்டீனாவில் பிரசுரமாயிற்று. நூற்றாண்டுகாலத் தனிமை என்ற அந்த நாவல் மார்க்வெஸ்ஸின் புகழை உலகறியச் செய்தது முதல் பதிப்பு 8000 பிரதிகள் முழுவதும் ஒருவாரத்துக்குள் விற்றுத் தீர்ந்தன. நூற்றாண்டு காலத் தனிமை நாவலை விட மிகுந்த நேர்த்தியான படைப்பாக ஓட்டம் ஒவ் த பேற்றியாக் (Autumn of the patriarch) என்ற நாவலை விமர்சகர்கள் குறிப்பிடுவர். இந்நாவலில் லத்தீன் அமெரிக்காவின் நாடொன்றில் (ஒரு புனைவுத்தேசம்-கரிபியன் பிராந்தியத்தைச் சேர்ந்தது) ஆட்சி செய்யும் கொடுங்கோன்மைமிக்க சர்வாதிகாரி ஒருவனைப் பிரதான கதாபாத்திரமாகக் கொண்டு புனையப்பட்டது. 1975இல் இந்நாவல் வெளியான போது லத்தீன் அமெரிக்கா இராணுவச் சதிப்புரட்சிகள் நடைபெறும் பிராந்தியமாக, இராணுவ ஆட்சியாளர்களின் மிருகத்தனமான அடக்குமுறையில் அழுந்திக்கொண்டிருந்தது. கொலம்பியா நாடு போதைப் பொருள் கடத்தல் மன்னர்களின் அட்டகாசம் மலிந்த நாடு. அங்கே ஒருசெல்வந்தர் போதைப் பொருள் கடத்தல்காரர்களால் கொல்லப்பட்டதன் மன அதிர்வுகளாக அமையும் படைப்பான Chronicle of a death foretold (குறொனிக்கிள் ஒவ் எடெத் போ (f) ர்ரோல்ட்) 1981இல் வெளியாயிற்று. இந்நாவல் வெளிவந்த அடுத்த வருடம் மார்க்வெஸ்ஸிற்கு நோபல் பரிசு கிடைத்தது. 1985 இல் வெளியாகிய 'லவ் இன் த டைம் ஒவ் கொலரா என்ற நாவலும், 1994 இல் வெளியான 'த ஜெனரல் இன் ஹிஸ் லேபிரிந்த், நாவலும் விமர்சகர்களின் பாராட்டைப் பெற்றவை. கார்சியா மார்க்வெஸின் இலக்கியக் கொள்கை யாது என்பதை சுருக்கமாகக் கூறிவிடலாம். தீவிர அடக்கு முறையும் வன்முறையும் நிலவும் சூழலிலும் அரசியல் பிரச்சினைகள் தொடர்பாக வெளிப்படையாகப் பேசும் பொதுக் கடமை (Public duty) எழுத்தாளனுக்கு உள்ளது என்பதே அவரது

*(63ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய வரலாறு


கே.ஆர்.டேவிட்

# தமிழ்த்தேசியத்தின் தளமாற்றங்களும் இலக்கியக் களமாற்றங்களும்

இப்பத்தி தமிழ்த்தேசியத்தின் தளமாற்றங்கள் பற்றியும் அதனால் ஏற்பட்ட இலக்கியக் களமாற்றங்கள் பற்றியுமே பேசுகின்றது. ஆனால், இலக்கியத்தைப் பற்றிப்பேசுகின்ற இப்பத்தியில் படைப்பாளிகளின் பெயர்களும், படைப்புகளின் பெயர்களும் முற்றாகவே தவிர்க்கப்பட்டுள்ளன. இது தவறுதலாக ஏற்பட்டதல்ல, திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட செயல் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

'இலக்கியத்தை வளர்த்தவன் மனிதன், இலக்கியத்தால் வளர்ந்தவன் மனிதன்' இலக்கியத்திற்கும் மனித சமூகத்திற்குமுள்ள உறவின் நெருக்கத்தை 'தொப்புள் கொடி உறவாக' இவ்வாக்கியத்தின் கருத்து உயர்த்தியுள்ளது. எந்தச் சமுதாயத்திற்கும் ஒரு இலக்கிய வரலாறுண்டு. அந்த இலக்கிய வரலாறுகள் அந்தச் சமூகத்தின் நகர்வுக் கூறுகளையும், சமூக விஞ்ஞான இயங்கியல்

தமிழ் மக்களின் சமூக, அரசியல் பிரச்சினைகள் பற்றிய இலக்கியங்கள் எழுந்திருக்கின்றனவே தவிர அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகளைக் கூறும் இலக்கியங்கள் எழுந்தனவா என்ற ஐயப்பாடு நிலவுகிறது

எழுச்சிகளை அந்தச் சமூகம் எவ்வாறு உள்வாங்கி மாற்றங்கண்டுள்ளது என்பன போன்ற முக்கிய சமூகக்கருத்துப் படிமங்களையும் உள்ளடக்கியவைகளாக அமைந்திருப்பதைக் காணலாம்.

தமிழ் இனத்துக்கென்று தனியானதும், தனித்துவமானதுமான இலக்கிய வரலாறுகள் உண்டு. இன்னும் கூறினால், ஏனைய இனங்களைவிட தமிழினத்துக்கென்று உயர்வான தமிழ் இலக்கிய வரலாறுகள் உண்டென தமிழர் வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன.

சர்வதேச இனப்பரம்பல் கணக்கெடுப்பின்படி பத்துக்கோடி தமிழ்மக்கள் வாழ்வதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இருபது நூற்றாண்டுகால இலக்கிய வரலாறு கொண்டது தமிழினம் என்றும் தமிழர் வரலாற்றுப்பதிவுகளும் கூறுகின்றன. இவ்வளவு பலமான வரலாற்றுப்பதிவுகள் கொண்ட தமிழர் வரலாற்று நீட்சியில் இறுதியாகக் கூறப்பட்டதொரு வாக்கியம் தமிழினம் தங்களைப் பற்றியும், தங்களின் தலைமைகள் பற்றியும் மீளாய்வு செய்யக் கோருவதாக அமைந்துள்ளது.

'தமிழன் வாழாத நாடுமில்லை. தமிழனுக்கென்றொரு நாடுமில்லை' என்பதுதான் அந்த வாக்கியம். சமகாலத்தில் வாழ்கின்ற தமிழ்த்தலைமுறையினரே இக்கூற்றின் தோற்றத்துக்கான காரணிகள் என்பதை மறுக்க முடியாது.

ஒரு இனத்தின் வரலாற்றை அந்த வரலாற்றுக்காலத்தில் எழுந்த இலக்கியங்களை விளங்கிக்கொள்வதன் மூலம் அக்காலத்து யதார்த்த உணர்வு நிலைகளைப் புரிந்துகொள்ள முடியும். அந்த அடிப்படையில் நமக்கு மூத்த தலைமுறையினரின் இலக்கியங்களை ஒப்பீடு செய்வதன் மூலம் இன்றைய தமிழ் இனத்தின் பலம் -பலவீனங்களைக் கண்டறிவதே இப்பத்தியின் நோக்கமாக அமைகின்றது.

ஒரு சமூகத்தின் கூட்டு நனைவிலி மனஉணர்வின் அடியாக எழுகின்ற கருத்துறைந்த மனவெழுச்சிகள் மொழிக்கூடாக இலக்கிய அழகியல் வடிவம் பெறும் போது அவைகள் இலக்கியப் பரிமாணம் பெறுகின்றனவென்று இலக்கியப்படிமத்தின் தோற்றம் பற்றி இலக்கிய ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். ஒரு சமூகத்தின் இயக்கநிலைப்படிமங்களே அச்சமூகத்தின் இலக்கியவடிவங்கள் என்பதை மேற்படி கூற்று தெளிவுபடுத்துகின்றது. ஒரு சமூகத்தின் இயக்கப் படிமங்கள் தான் அச்சமூகத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்கள் என்றால், அந்தச் சமூகத்தின் இயக்கத்திற்கு மையப்புள்ளியாக அமைகின்ற அரசியல், பொருளாதார அமைப்பின் இயக்க விசைகளே அக்காலத்து இலக்கியங்களின் நதிமூலம் என்பதைப் புரிந்துகொள்வதில் சிரமங்கள் இருக்காது. எனவே, இலக்கியங்கள் என்பன அரசியல், பொருளாதார விளைவுகளின் அழகியல் கலந்த இன்னொரு வடிவம் என்ற முடிவுக்கு நாம் வரலாம். எனவே ஒரு இனத்தின் குறிப்பிட்ட ஒரு காலத்தின் இலக்கிய ஆய்வு என்பது இன்னொருவகையில் அந்த இனத்தின் அக்காலப்பகுதிக்குரிய அரசியல் ஆய்வாகவும் அமைகிறதெனலாம்.

தமிழ் இலக்கிய வரலாற்றுப் பார்வையை மூன்று பிரிவுகளாகப் பிரித்து நோக்குவது பொருத்தமானதாக அமையுமெனக்கருதுகிறேன்.

1. 1960ஆம் ஆண்டு தொடக்கம் 1983ஆம் ஆண்டுவரையான காலப்பகுதி.
2. 1983ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி.
3. 2009ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையான காலப்பகுதி.

1. 1960ஆம் ஆண்டு தொடக்கம் 1983ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி

1960 களின் பிற்பட்ட காலத்திலிருந்து 1983 இல் தமிழீழப் போராட்டம் ஆரம்பமான காலம் வரை முற்போக்கு இலக்கிய காலமாக இலக்கிய வரலாற்றில் பதிவாகியுள்ளது. இக்காலப்பகுதியில் மாக்ஸிஸ இடதுசாரிகளின் இலக்கியங்கள் மேலோங்கியிருந்ததால் இக்காலப்பகுதி முற்போக்கு இலக்கிய காலம் என அழைக்கப்படுகின்றது. வடக்கு, கிழக்குப் பகுதிகள் இரண்டுமே தமிழ்ப்பிரதேசங்களாகக் கணிக்கப்பட்டாலும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் இலக்கியப்படைப்பாளிகளும், இலக்கிய அணிகளின் தலைமைப்பீடங்களும் காணப்பட்டதால் இலக்கிய அணிகளின் பெயர்களும், காலப்பகுதிகளும் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு எழுந்தவைகளாகவே காணப்படுகின்றன.

ஈழகேசரிக்காலம் (1930-1940), மறுமலர்ச்சிக்காலம் (1940-1950), தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக்காலம் (1950-1960 இன் பிற்பட்ட காலம் வரை), முற்போக்கு இலக்கிய காலம் (1960 இன் பிற்பட்ட காலம் தொடக்கம் 1983 ஆம் ஆண்டு வரை), தமிழீழ போராட்ட காலம் (1983-2009), தமிழீழ போராட்டத்துக்குப் பிற்பட்ட காலம் (2009- இன்று வரை) மேற்கூறப்பட்ட காலவரையறைகள் யாவும் யாழ்ப்பாணத்தை மையப்படுத்தி எழுந்த வரையறைகளாகவே தெரிகின்றன.

முற்போக்கு இலக்கிய காலமாகக் கருதப்படுகின்ற இக்காலப்பகுதியில், முற்போக்கு இலக்கியங்களோடு தமிழ்த்தேசிய உணர்வாளர்களின் படைப்புகளும், சமூகவிழுமியங்களை முன்நிலைப்படுத்திய படைப்புகளும் தோற்றம் பெற்றிருப்பதற்கான சான்றுகளும் காணப்படுகின்றன. அறுபதுகளின் முற்பகுதி தமிழ்த்தேசிய உணர்வாளர்களின் இலக்கிய காலம் என்றே இலக்கிய வரலாற்றில் அழைக்கப்பட்டுள்ளது. மாக்ஸிஸ இடதுசாரிகளின் இலக்கியங்கள் முன்னிலை பெற்றிருப்பினும், மாக்ஸிஸ இடதுசாரிகளுக்கு நேர் எதிரான கொள்கைகளை முன்னெடுத்த தமிழ்த்தேசிய உணர்வாளர்களும் தங்கள் கொள்கைகளை முன்னிலைப்படுத்தும் இலக்கியங்களைப் படைத்துக்கொண்டுதான் இருந்தார்கள். இவர்களைத்தவிர மறுமலர்ச்சிக்கால இலக்கியங்களை முன்னெடுத்தவர்களின் வாரிசுகள் தங்களின் சமூக சீர்திருத்த இலக்கியங்களை முன்னெடுத்துள்ளனர் என்பதும் வரலாற்றுக் கவனிப்புக்குரியதாகும்.

> வடக்கு, கிழக்கு பகுதிகள் இரண்டுமே தமிழ்ப்பிரதேசங்களாகக் கணிக்கப்பட்டாலும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் இலக்கியப்படைப்பாளிகளும் இலக்கிய அணிகளின் தலைமைப்பீடங்களும் காணப்பட்டதால் இலக்கிய அணிகளின் பெயர்களும் காலப்பகுதிகளும் யாழ்ப்பாணத்தை மையமாகக்கொண்டு எழுந்தவைகளாகவே காணப்படுகின்றன

சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களும், எழுச்சிகளுமே இலக்கியங்களின் தோற்றுவாய்களாக அமைகின்றனவென்ற சமூகவியல் கருத்து இக்காலப்பகுதியின் இலக்கியத் தோற்றங்களுக்கும் அடிநாதமாக அமைந்திருக்கின்றன என்பது அவதானத்துக்குரியதாகின்றது. அறுபதுகளில் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் தாய்மொழி போதனைமொழியாக அங்கீகரிக்கப்பட்டது. இத்திட்டம் சிங்கள இன மாணவர்களின் கற்றல் வசதி கருதி கொண்டுவரப்பட்டிருப்பினும், இத்திட்டத்தால் தமிழ் மாணவர்களும் பயனடைந்தனர். தாய்மொழியை போதனை மொழியாகக் கொண்டு வரும் வரையில் பல்கலைக்கழகக் கல்வி மேட்டுக்குடியினருக்குரியதொரு கல்வியாகவே இருந்தது. இத்திட்டத்தின் வருகைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப்பின் கிராமப்புறத்து விளிம்பு நிலை மாண வர்கள் உயர்கல்வி பெறும் வாய்ப்பினையும், அதன் மூலம் உயர்பதவிகளை வகிக்கும் வாய்ப் பினையும் பெற்றனர். இந்நிலை அடிமட்ட மக் கள் மத்தியில் பெரும் விழிப்புணர்வைத் தோற்று வித்தது. இவ்விழிப்புணர்வுத் தோற்றத்தின் முதலாவது அறுவடையாகவே முற்போக்கு இலக்கிய காலம் காணப்படுகிறது.

உயர்கல்விப்பீடமான பல்கலைக்கழகத்தில் முக்கிய சில பேராசிரியர்கள் மாக்ஸிஸக் கருத் துக்களை முன்னெடுத்ததோடு, தமிழ்மொழியில் புதிதாக சில இலக்கிய ஆய்வுப்பகுதிகளையும் ஆரம்பித்தனர். இதனால் மாக்ஸிஸ கருத்துகள் பல்கலைக்கழக அங்கீகாரம் பெற்றதொரு அரசி யல் கருத்தென்ற நிலைக்கு உயர்வுபெற்றது. அதன் காரணமாக மாக்ஸிஸ இலக்கியங்களும், மாக்ஸிஸ இலக்கிய கர்த்தாக்களும் சமூகத்தில் பெரும் மதிப்புக்குரியவர்களாயினர்.

இக்காலத்தில் தான் இலக்கியங்கள், போராட் டக் கருவிகள் என்றொரு புதிய பரிமாணத்தைப் பெற்றன. இக்காலத்தில் மலையகத்தில் நடை பெற்ற தொழிலாளர் போராட்டத்தில் பொலிஸா ரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு தொழி லாளர்கள் இறந்ததும், இதே காலப்பகுதியில் வடபகுதியில் முற்போக்காளர்களால் சாதி அமைப்புக்கெதிராக நடத்தப்பட்ட வெகுஜனப்

> பல்கலைக்கழகங்களில் முக்கியமான சில பேராசிரியர்கள் மார்க்ஸிஸ கருத்து களை முன்னெடுத்ததோடு தமிழில் புதிதாக சில இலக்கிய ஆய்வுப்பகு திகளையும் ஆரம்பித்தனர். இதனால் மார்க்ஸிய கருத்துகள் பல்கலைக்கழக அங்கீகாரம் பெற்றதொரு அரசியல் கருத் தென்ற நிலைக்கு உயர்வு பெற்றது

போராட்டங்களும் முற்போக்கு இலக்கியங்க ளின் வளர்ச்சிக்கு ஆதார சுருதிகளாக அமைந் தன. அதேவேளை ஊடகவியலாளர்கள் பலர் இடதுசாரிக்கொள்கையுடையவர்களாக இருந் தால் இடதுசாரிகளின் கருத்துகளும், அவர்களின் செயற்பாடுகளும் பத்திரிகைகள் மூலம் மக்க ளைச் சென்றடைகின்ற வாய்ப்புகளும் நிறைந் திருந்தன.

இலக்கியப்பரப்பில் இன்றும் பேசப்படுகின்ற பல எழுத்தாளர்கள் அப்போது முற்போக்கு அணியின் முக்கிய பங்காளிகளாக இருந்ததால் கிராமப்புறங்களிலிருந்து பல எழுத்தாளர்களை இவர்களால் தோற்றுவிக்க முடிந்தது. கிராமப்புற எழுத்தாளர்கள் அதே கிராமப்புற மக்களைக் கருப்பொருளாகக்கொண்டு படைக்கப்பட்ட இலக்கியங்கள் சமூகத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றன. இதில் கவனிக்கப்பட வேண்டிய செய்தி என்னவெனில் மூத்தபடைப்பாளிகள் இளையபடைப்பாளிகளை அரவணைத்தனர். இளையப்படைப்பாளிகள் மூத்தபடைப்பாளி களை மதித்தனர். இதனால் இலக்கிய வாண் மைப் பரிமாற்றச் செல்நெறிகள் ஆரோக்கியமா னவைகளாக இருந்தன.

சாதி அமைப்புக்கெதிராக முற்போக்கு அணி யினர் நடத்திய வெகுஜனப் போராட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களோடு உயர்சாதியைச் சேர்ந்தவர்களும், சிங்கள, முஸ்லிம் மக்களும் கலந்துகொண்டிருந்தமை பற்றிய பதிவுகளை முற்போக்கு இலக்கியங்களில் காணக்கூடியதாக வுள்ளது.

இக்காலப்பகுதியில் யாழ்ப்பாணம் முற்ற வெளி மைதானத்தில் நடந்தவொரு கவியரங் கில் பாடப்பட்டதொரு கவிதை இன்றும் கவனத் துக்குரியதாக இருக்கின்றது.

*மனமாற்றம் வருமென்ற*
*மடமையினைக் கைவிட்டு*
*ஆற்றல்மிகு கரத்தில்*
*ஆயுதங்கள் ஏந்துவதே*
*மாற்றத்துக்கான வழி*
*மாற்று வழி ஏதுமில்லை*

இக்கவிதை ஆயுதப்படையினரின் சூழலில் ஆயுதப்போராட்டம் பற்றி இடதுசாரிகளால் பாட முடிந்திருப்பது கவனத்துக்குரியதாகுகின்றது. இன்றைய சூழலோடு அன்றைய சூழலை ஒப்பி டும்போது ஆச்சரியத்துக்குரிய ஒன்றாகவே தென்படுகிறது. தேசிய மயப்பட்ட இந்த ஆயுதப் போராட்டக்கருத்தினை ஆயுதப்படையினர் வட பகுதிக்குள் நடக்கின்ற சாதிப்போராட்ட எல் லைக்குள் வைத்து விளங்கியிருக்கலாம்.

முற்போக்கு இலக்கியகாலத்தில், முற்போக்கு இலக்கியமளவிற்கு முதன்மைபெறாது விட டாலும் முற்போக்கு இலக்கிய அணியினருக்கு எதிராக இயங்கிய ஒரேயொரு அணியாக தமிழ்த்தேசிய உணர்வாளர்களான தமிழர் விடுத லைக்கூட்டணியினரின் இலக்கியங்கள் பற்றி யும் பார்ப்பதன் மூலம் இக்காலப்பகுதியின் இலக்கிய நிலை பற்றி பூரணமாக விளங்கிக் கொள்ள முடியும்.

முற்போக்கு அணியினருக்கு நடைமுறையிலி ருந்து பிறந்ததும், சர்வதேச அங்கீகாரம் பெற்றது மானதொரு அரசியல் தளம் அமைந்தது போல் தமிழ் உணர்வாளர்களுக்கு பலமானதொரு அர சியல்தளம் அமைவில்லை என்றே கூறவேண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியுள்ளது. இவர்களால் பின்பற்றப்பட்ட அகிம்சை வழியிலான அரசியல்தளத்திலும் இவர்களால் நிதானமாக நிற்கமுடியவில்லை. தமிழ் உணர்வாளர்களின் முக்கியமான தொடர்புகள் யாவும் கொழும்பை மையப்படுத்தியவைகளாகவும், தேர்தலை மையப்படுத்தியதாகவும் அமைந்திருந்தால் இவர்களால் எந்த அரசெதிர்ப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவும் முடியவில்லை.

1972 இல் இலங்கை அரசினால் கொண்டு வரப்பட்ட தரப்படுத்தல் முறை, 1974 இல் நடந்த தமிழாராய்ச்சி மகாநாட்டு இழப்புகள் என்பவற்றால் ஏற்பட்ட அரசியல் கொதிநிலைகளுக்குத் தகுந்த பதில் கூறத் தமிழ்த்தேசிய உணர்வாளர்களின் தலைமைப்பீடத்தால் முடியாமல் போய்விட்டது. குறிப்பாக தரப்படுத்தல் முறையால் இளந்தலைமுறையினர் கொதித்துப் போயிருந்தனர். அவர்களுக்கு இவர்களின் சாத்வீகப் போராட்டத்தத்துவம் திருப்திகரமானதாக அமையவில்லை. அதேவேளை முற்போக்கு அணியினரின் அரசியல் கருத்துகளோடும் இவர்களால் உடன்பட்டுச் செல்ல முடியவில்லை. இவைகளால் இவர்களிடம் ஒரு தளம்பல் அரசியல் தளமே காணப்பட்டது. இந்நிலை இவர்கள் சார்ந்த எழுத்தாளர்களிடம் தமிழ் உணர்வு சார்ந்த இலக்கியங்களுக்கப்பால் சென்று கருத்து வெளிப்பாட்டுப் படைப்புகளை இவர்களால் படைக்கமுடியாமல் போய்விட்டதெனலாம்.

மறுமலர்ச்சிக்காலத்தில் தோற்றம்பெற்று, தமிழ்த்தேசிய காலத்திலும் இலக்கியம் படைத்துக்கொண்டிருந்த எழுத்தாளர்களில் பலர் தமிழ் உணர்வாளர்களின் பக்கமே சாய்ந்திருந்தனர். இவர்களில் பலர் இலக்கியப்படைப்பு வாண்மை பெற்றிருந்தனர் என்பதை மறுப்பதற்கில்லை. இவர்கள் தொடர்ந்தும் சமூகவிழுமியங்கள் சார்ந்ததும், சமூகக் கட்டுப்படைபுணர்வுகளைத் தூண்டும் கருத்தியல் சார்ந்ததும், பெண்ணிலைவாதக் கருத்துநிலை சார்ந்ததுமான இலக்கியங்களையே படைத்தனர்.

சாதி அமைப்புக்கெதிராக முற்போக்குவாதிகள் வெகுஜனப்போராட்டம் நடத்திய அதே வேளை தமிழ்த்தேசிய உணர்வாளர்களுக்குத் தலைமை தாங்கிய தமிழர் விடுதலைக்கூட்டணியினரும் சாதி அமைப்புக்கெதிராக சாத்வீக அடிப்படையில் 'சமபந்திபோசன' போராட்டத்தை முன்னெடுத்தனர். உயர்ந்தசாதியைச் சேர்ந்த ஒரு தொகுதியினர் குறைந்தசாதியைச் சேர்ந்த ஒருவரின் வீட்டுக்குச் சென்று குறைந்த சாதியினரோடு சமமாக அமர்ந்து சாப்பிடுவதே இப்போராட்டத்தின் பிரதான அம்சமாகும். வெகுஜன இயக்கத்தின் போராட்டக்களத்தில் இலக்கியப் படைப்பாளிகள் வகித்த பங்களவிற்கு சமபந்தி போசன செயற்பாட்டுக்களத்தில் இலக்கியப் படைப்பாளிகளின் பங்களிப்பு போதுமானதாக அமையவில்லை என்பதே பொதுவான அபிப்பிராயமாகும். இதனால் சாதி அமைப்புக்கெதிரானதும், வெகுஜனப் போராட்டத்துக்கு ஆதரவானதுமான இலக்கியங்கள் தோன்றின. வெகுஜன இயக்கப்போராட்டத்தில் மேல்சாதி மக்கள் உட்பட, சிங்கள- முஸ்லிம் மக்களும் கலந்துகொண்டது போல் சமபந்திபோசன நடவடிக்கை அமையவில்லை. இதில் மேட்டுக்குடியைச் சேர்ந்தவர்களும் நடுத்தரவர்க்கத்தைச் சேர்ந்தவர்களுமே பங்குகொண்டனர்.

> முற்போக்கு அணியினருக்கு நடை ஸ்ரீமுறையிலிருந்து பிறந்ததும் சர்வ தேச அங்கீகாரம் பெற்றதுமான அரசியல் தளம் அமைந்தது போல் தமிழ் உணர்வாளர்களுக்கு பலமானதொரு அரசியல் தளம் அமையவில்லை என்றே கூற வேண்டும். இவர்களால் பின்பற்றப்பட்ட அகிம்சை வழியிலான அரசியல் தளத்திலும் நிதானமாக நிற்க முடியவில்லை

'வெகுஜனம்' என்ற சொல்லில் உள்ளுறைந்திருக்கும் கருத்துப் பரம்பலுக்கும், 'தமிழர் விடுதலை' என்ற வாக்கியத்தில் உள்ளுறைந்திருக்கும் கருத்துப்பரம்பலுக்குமிடையே நிறைய அரசியல் கருத்து வேறுபாடுகள் உண்டு. சமபந்தி போசன நடவடிக்கை மக்கள் மயப்படாமல் போனமையும் இலக்கியத் தேங்கல் நிலைக்கான காரணிகளில் ஒன்றாகக் கொள்ளலாம்.

ஒரு இலக்கியப்படைப்பாளனிடம் அமைந்திருக்கவேண்டிய சில பரிமாணங்கள் உண்டு. அவனது வாசிப்பு முயற்சி, அனுபவவாண்மை மிக்க மூத்த படைப்பாளிகளின் தொடர்பு, சமூக மேய்ச்சல், தெளிவான சமூக, அரசியல், பொருளாதாரத்தளத்தை இனங்காணல் என்பன போன்றவற்றை முக்கியமாகக் குறிப்பிடலாம்.

மேற்குறிப்பிட்ட இலக்கியப்பரிமாணங்கள் முற்போக்கு இலக்கிய கர்த்தாக்களிடமும் தமிழ்த்தேசிய உணர்வாளர்களின் பக்கம் சார்ந்திருந்த மறுமலர்ச்சிக்காலத்தின் உற்பத்திகளான எழுத்தாளர்களிடமும் திருப்திகரமாக அமைந்திருந்தது எனலாம்.

முற்போக்கு அணியினரின் கலை இலக்கியப் படைப்புகளுக்கும், தமிழ்த்தேசிய உணர்வாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் கலை இலக்கியப்படைப்புகளுக்குமிடையில் சமூக அங்கீகார ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டமைக்கு அடிப்படைகளாக அமைந்த சில காரணிகளைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

1. முற்போக்கு அணியினரின் அரசியல் தளம், சாதி, மத, இன பேதமற்றதும், தேர்தலை முதன்மைப்படுத்தாததும், விளம்பு நிலை மக்களின் சுபீட்சமான வாழ்வை வேண்டிநிற்கும் அரசியற் கோட்பாடுகளும், அதே விளிம்பு நிலை மக்களிடமிருந்து தோற்றம் பெற்ற எழுத்தாளர்களின் அதே விளிம்பு நிலை மக்களின் பிரச்சினை கருப்பொருட்களாகக் கொண்ட படைப்புகள் எந்தத் தடைகளுமின்றிச் சமூக அங்கீகாரம் பெற்றன.

2. தமிழ்த்தேசிய உணர்வாளர்களுக்குத் தலைமைதாங்கிய தமிழர் விடுதலைக்கூட்டணி அமைப்பின் அரசியற் கோட்பாடானது, ஏனைய இனங்களைத் தவிர்த்ததாகவும், தேர்தலை முதன்மைப்படுத்தியதாகவும், மேட்டுக்குடியினரின்

பல்கலைக்கழகங்களும் ஊடகவியலாளர்களும் கல்வியாளர்களும் விளிம்பு நிலை மக்கள் குழுமத்தினரும் முற்போக்கு அணியினரின் இலக்கியங்களுக்குக்காட்டிய ஆதரவு நிலையை தமிழ் உணர்வாளர்களின் இலக்கிய அணியினரால் பெறமுடியாமல் போனமையும் அவர்களின் இலக்கிய தேக்க நிலைக்கான காரணிகளில் முக்கியமானதாகும்

தலைமையைக் கொண்டதாகவும், அரசை அரவணைத்துப் போகும் அகிம்சை வழியிலானதும், அரசின் இன அடக்குமுறைக்கெதிராக எந்த நடவடிக்கைகளையும் முன்வைக்கக் கூடிய தெளிவான அரசியற் கோட்பாடற்றதாகவுமே காணப்பட்டது. இதனால் அவர்களின் இலக்கியங்கள் கருத்தை முன்னிலைப்படுத்தும் இலக்கியப் பண்பை இழந்திருந்தனவெனலாம்.

3. அறுபதுகளில் அரசினால் கொண்டுவரப்பட்ட பல்கலைக்கழக சுயமொழிப் போதனைத் திட்டத்தினால் புத்துணர்வு பெற்ற புதிய தலைமுறையினரிடம் முதலாளித்துவ அரசின் பலம் அரசியல் இயந்திரமான பாதுகாப்புப்படையினிடமே தங்கியுள்ளது என்பதையும், அதை வெகுஜனப் போராட்டத்தின் மூலமே வெல்ல முடியும் என்பதையும் புத்துணர்வு பெற்ற புதுத் தலைமுறையினரிடம் எடுத்துக்கூறும் கொள்கைப்பலமும், ரஷ்யா, சீனா, வியட்னாம் போன்ற நாடுகளில் நடந்த போராட்ட வரலாற்று விளக்கங்களும் முற்போக்கு அணியினரிடம் இருந்தது. அந்த நாடுகளின் போராட்ட இலக்கியங்களைப் பின்பற்றி இலக்கியங்கள் படைக்கும் இலக்கியவாண்மை விருத்திச் செயற்பாடுகளிலும் முற்போக்கு அணியினர் ஈடுபட்டிருந்தனர்.

4. முதலாளி வர்க்க சிந்தனைக்குட்பட்ட அரசையும் அந்த அரசின் பாதுகாப்பு இயந்திரமான பாதுகாப்புப் படைகளையும் கும்பிட்டு, மண்டியிட்டுக் கெஞ்சும் 'சாத்வீக' வழியிலான அரசியல் போராட்டத்தை புத்துணர்ச்சி பெற்ற இளந்தலைமுறையினரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதனால் காந்தீய அரசியல் தத்துவங்களை வெளிப்படுத்தக்கூடிய இலக்கியங்கள் முழுவீச்சில் எழுகின்ற சூழ்நிலைகள் மிக அரிதாகவே காணப்பட்டன.

5. பல்கலைக்கழகங்களும், ஊடகவியலாளர்களும், கல்வியியயாளர்களும், விளிம்பு நிலை மக்கள் குழுமத்தினரும் முற்போக்கு அணியினரின் இலக்கியங்களுக்குக் காட்டிய ஆதரவு நிலையை தமிழ் உணர்வாளர்களின் இலக்கிய அணியினரால் பெறமுடியாமல் போனதும் அவர்களின் இலக்கியத் தேக்க நிலைக்கான காரணிகளில் முக்கியமானதாகும்.

சமூக, பொருளாதார, அரசியல் பின்னணித் தளங்களே இலக்கியங்களைத் தீர்மானிக்கின்றன என்ற கருத்து நிலையை ஏற்றுக்கொண்ட எண்பதுகளில் வாழ்ந்த இலக்கிய ஆய்வாளர்கள் அக்காலத்து இலக்கியங்கள் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர். தமிழ் மக்களின் சமூக, அரசியல் பிரச்சினைகள் பற்றிய இலக்கியங்கள் எழுந்திருக்கின்றனவே தவிர, தமிழ் மக்களின் சமூக அரசியல் பிரச்சினையின் தீர்வுக்கான வழிகளைக் கூறும் இலக்கியங்கள் எழுந்தனவா என்ற ஐயப்பாடே நிலவுகின்றது. 1976இல் எந்தவித அரசியல் தீர்க்க தரிசனமுமின்றி தமிழர் விடுதலைக்கூட்டணியினர் வட்டுக்கோட்டை மகாநாட்டில் ஏற்படுத்திக்கொண்ட விரிக்கவோ, விபரிக்கவோ முடியாத கொள்கைப் பிரகடனம் படைப்பாளிகளுக்குத் திசைகாட்டுவதாக அமையவில்லை. அதேவேளை, முற்போக்கு அணியினரின் அரசியல் கோட்பாடானது இலங்கை அரசியல் செல்நெறிகளுக்கு உடன்பாடானதோ இல்லையோ, நடைமுறையிலிருந்தே பிறந்தகோட்பாடுகள் என்ற அடிப்படையில் படைப்பாளர்களுக்கு ஒரு நம்பிக்கைத் தளத்தை திறந்துவிட்டிருந்தது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள இலக்கிய ஆய்வாளரின் கருத்தானது அக்காலத்து இலக்கிய எழுச்சிகளின் மொத்த வடிவத்தினைப் பிரதிபலித்துள்ளதெனலாம். ■ 


(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வைத்தியக் கலாநிதி
எம்.கே. முருகானந்தன்

# கனவுலகின் மர்மக் கோட்டைகளில் புது வெளிச்சம்



**கனவுலகில் ஆழ்ந்திருக்கும் ஒருவருடன் தொடர்பு கொள்ளும் முற்றிலும் புதுமையான செயன்முறை கண்டறியப்பட்டுள்ளது. இது விஞ்ஞானிகளுக்கு ஆர்வமூட்டுவதாக உள்ளது**

அன்று ஒரு காலை நான் ஒரு கனவு கண்டேன். தொடர்கதை போல நடந்து கொண்டிருந்தது. அது மிகவும் வியப்பூட்டும் கனவாக இருந்தது. நான் கனவுதான் காண்கிறேன் என்பதை உணரக் கூடியதாக இருந்தது. அதைப் பதிவு செய்து வைக்க வேண்டும் என அக்கணத்தில் நினைத்தேன். இப்பொழுது இந்தக் கட்டுரையை சமகாலத்திற்காக எழுத ஆரம்பித்தபோது அது பற்றி எழுதவும் எண்ணினேன். ஆனால் எத்தனை முயன்றும் அது என்ன கனவு என்பது ஞாபகத்தில் வரவேயில்லை.

கனவுகள் அற்புதமானவை. அதில்தான் எத்தனை வகைகள்.

விழித்திருக்கும் போது கனவுகளில் மிதப்போம். பகற்கனவு என்று அதனை எள்ளலும் செய்வோம். ஆழ் தூக்கத்தில் கனவுகள் காண்போம். அவற்றைக் கண்டது பற்றிய நினைவு கூட நித்திரைவிட்டு எழும்பியதும் இருக்காது. ஆனால் பல கனவுகள் எங்கள் தூக்கத்திற்கும் விழிப்பிற்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருக்கும்.

உண்மையில் நாங்கள் ஆழ் தூக்கத்தில் மூழ்கியிருக்கும்போது நினைவுடன் இருப்பதில்லை. நடப்பது எதுவும் தெரியாது. மயக்கத்திற்கு அண்மிய நிலை அது. ஆனால், அதிலிருந்து மீண்டு நினைவுலகிற்கு வந்ததும் வாழ்வின் நாளாந்த சவால்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவியல் களரி

ளுக்கு முகம்கொடுக்க வேண்டியிருக்கும். இரண்டிற்கும் இடைப்பட்ட நிலை ஒன்று இருக்கிறது. நினைவு திரும்பிக் கொண்டிருக்கும் வேளையில், ஆழ்ந்த தூக்கமுமற்ற முழு நினைவுமற்ற நிலை இருக்கிறது. அவ்வேளையில்தான் கனவுகள் காண்கிறோம். அவ்வாறு காணும் கனவுகளின் போதுதான் கனவு காண்பதாக உணர்கிறோம். அதுதான் எனக்கும் நடந்தது.

உண்மையில் இதுதான் எமது நினைவுலகின் மிகவும் மர்மமானதும் வியப்பிற்குரியதும், தெளிவற்றதுமான தருணமாக இருக்கிறது.

உளவியலாளர்களுக்கு இத்தகைய நேரம் ஆய்விற்குரிய முக்கிய கணமாக இருக்கிறது. எமது வாழ்வின் சாயல் அதில் படுவது எவ்வாறு என ஆராய விரும்புகிறார்கள். ஆனால் நினைவிலிருந்து மறைந்துவிட்ட அவற்றை கனவு கண்டவர்களிடம் கேட்டு அறிவதும் முடியாதிருக்கிறது. மூளையின் அந்நேர செயற்பாடுகளை கருவிகளின் மூலம் அறிவதன் மூலம் விடைகாண முயல்வது மட்டுமே இற்றைவரை சாத்தியமாக இருந்தது.

ஆனால், கனவுலகில் ஆழ்ந்திருக்கும் அவ்வேளையிலேயே அவருடன் தொடர்பு கொள்ளும் ஒரு முற்றிலும் புதுமையான செயன்முறை கண்டறியப்பட்டுள்ளது. இது விஞ்ஞானிகளுக்கு ஆர்வம் ஊட்டுவதாக இருக்கிறது.

ஆனால் கனவில் இருப்பவருடன் தொடர்பு கொள்வது எவ்வாறு? தட்டி எழுப்பிக் கேள்விகள் கேட்டால் அவரது கனவு கலைந்துவிடும் அல்லவா?

இந்த நிலையில் தெளிவான கனவுகள் (lucid dream) ஆய்வுகளுக்கு உதவும் என்கிறார்கள் விஞ்ஞானிகள். அது என்ன தெளிவான கனவு என்கிறீர்களா? இத்தகைய கனவின் போது ஒருவர் கனவு காண்கிறார். தான் கனவு காண்பதாகவும் உணர்கிறார். அது மாத்திரமல்ல தாங்கள் ஆழ்ந்திருக்கும் அந்த உலகில் தாம் அடுத்து செய்ய வேண்டியது எது என்பதையும் தீர்மானிக்கக் கூடியதாக இருக்கிறது.

பெரும்பாலானவர்கள் தமது வாழ்வில் ஓரிரு தடவைகளாவது அத்தகைய தெளிவான கனவுகளைக் கண்டிருப்பார்கள். ஆனால் அத்தகைய அனுபவங்கள் பரவலானவை அல்ல என்பதையும் சொல்ல வேண்டும்.

இருந்தபோதும் ஒரு சிலரால் அத்தகைய தெளிவான கனவுகளைத் தாமாகவே வரவழைக்க முடிகிறது என்று சொல்கிறார்கள். அத்தகைய ஆற்றல் உள்ள நபர்களே கனவுகளின் உள்ளே புகுந்து விளையாடும் ஆய்வுகளுக்குக் கை கொடுக்கிறார்கள்.

ஒருவரது நடத்தை அல்லது அனுபவம் பற்றி ஆராய முற்படும் அறிவாற்றல் சார்பான விஞ்ஞானிகள் ஒருவர் ஏற்கனவே விபரித்த அனுபவங்களைச் சொல்லளவில் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். செயற்பாட்டுப் பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்தி விளங்க முற்படுவர். குறிப்பிட்ட விடயத்தில் அவர்களது செயற்பாடு எவ்வாறானது, எதை எதை நினைவில் கொள்கிறார்கள், எவ்வாறு காரணப்படுத்துகிறார்கள் என்பதை இதன்மூலம் புரிந்து கொள்ள முடியும்.

ஆனால் கனவுகள் பற்றிய ஆய்வுகளில் இது மிகவும் கடினமானதாகும். ஏனெனில் கண் விழித்து நினைவு திரும்பும் வரை அவர்களால் பெரிதளவில் எதையும் சொல்ல முடியாது. கனவுலகில் அவர்கள் செயற்படும் விதத்தை அவர்களது பங்களிப்புடன் பரிசோதனையாகச் செய்து பார்க்கவும் முடியாது. பக்கவாதத்தின் போது அங்கங்கள் செயலற்றுப் போவது போல தூக்கத்தில் உறுப்புகள் தற்காலிகமாக இயங்க முடியாதிருப்பதே (sleep-induced paralysis) இதற்குக்காரணமாகும். அங்கங்களை இயங்க வைப்பதற்கான தகவல்கள் மூளையிலிருந்து வரவேண்டும். மூளையின் கலங்களிலிருந்து முன்னாண் வழியாக தசைத் தொகுதிகளுக்கு தகவல்கள் அனுப்பப்படுகிறது. ஆனால் தூக்கத்தின் போது அவ்வாறு அனுப்பப்படும் சமிக்ஞைகள் மூளையின் குறிப்பிட்ட பகுதி நரம்புக் கலங்களால் தடுக்கப்படுகின்றன. இதனால் தான் கனவுகளின் போது எமது அங்கங்களை அசைத்து நாம் செயற்பட முடியாது போகிறது.

இவ்வாறு தடுக்கப்படுவது தூக்கத்தின் துரித கண் இயக்க நிலையின் போது ஆகும்.

இந்த இடத்தில் தூக்கம் பற்றி சற்று அறிந்து கொள்வது நல்லது. தூக்கத்தில் பல நிலைகள் உண்டு. அதில் துரித கண் இயக்க நிலை (Rapid Eye Movement or REM) என்பதும் ஒன்று. இந்த நிலையில் மூளையின் செயற்பாடானது உச்ச நிலையில் இருக்கும். அதாவது நினைவு நிலையின்போது மூளையின் செயற்பாடு எவ்வாறு இருக்குமோ அதை ஒத்ததாக இயங்கிக்கொண்டு இருக்கும். அந்நேரம் தூக்கம் காரணமாக அவர் செயற்படாது கிடப்பார். ஆனால் அவரது கண்கள் மட்டும் தொடர்ச்சியாக அப்பொழுதும் இயங்கிக் கொண்டே இருக்கும்.

ஆனால், மேலே குறிப்பிட்டது போல அங்கங்கள் இயக்கமின்றிக் கிடக்கும். அந்த நேரத்தில் தோன்றும் தெளிவான கனவானது ஓடுவது, துள்ளுவது, அடிப்பது போன்ற கடுமையான உடல் அசைவுகளுடன் கூடியதாக இருந்தாலும் நிஜத்தில் உடலால் அசைய முடியாது. ஆக மிஞ்சியது சிறு நடுக்கம் போல இருக்கலாம். இது ஏன் என்பது பற்றிய காரணம் பின்னர் தெளிவாகும்.

அது அவ்வாறிருக்க, இப்பொழுது கனவின் காரிருள் குகைகளுக்குள் வெளிச்சம் பாய்ச்சும் ஆய்வுகள் பற்றிச் சற்றுப் பார்ப்போம்.

முன்னரே பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளப்பட்ட கண்அசைவுகளை சமிக்ஞைகளாகத் தெரிவிப்பதன் மூலம் தாங்கள் தெளிவான கனவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணத் தொடங்குவதை கனவு காண்பவர்கள் ஆய்வாளர்களுக்குத் தெரிவிக்க முடியும். அதாவது தனது கண்களை இயல்பான ஒரு குறிப்பிட்ட விதத்தில் கனவு காண்பவர் அசைப்பார். அதனைக் கொண்டு அவர் கனவுலகில் இறங்குவதை ஆய்வாளர் புரிந்துகொள்வர். மூளையின் செயற்பாடுகளை கனவின் போது பதிவு செய்யும் கருவிகளை உடனடியாகவே ஆய்வாளர் இயக்குவார்.

கண் குழியைச் சுற்றி வைக்கப்பட்ட மின்வாய்கள் (electrodes) மூலம் அவற்றைப் பதிவு செய்யவும் உறுதி செய்ய அக்கருவிகளால் முடியும். இந்தச் செயன்முறையானது Stephen LaBerge என்ற தூக்கம் பற்றிய ஆய்வுகளைச் செய்பவரால் முதன் முதலில் கண்டறிந்து பயன்படுத்திச் சரியானது என உறுதிப்படுத்தப்பட்டதாகும்.

கனவுலகின் இயல்புகளையும் அவை எவ்வாறு மூளையின் செயற்பாடாக பிரதிபலிக்கிறது என்பதையும் எளிமையானதும் தனித்துவம் வாய்ந்ததுமான இந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திப் பரிசோதிக்க முடிந்தது.

ஆனால், தெளிவான கனவுகள் காண்பவர்களாகச் சொல்லப்பட்டு இத்தகைய ஆய்வுகளில் உட்படுத்தப் பட்டவர்கள் உண்மையில் தூங்கவில்லை, கனவு காணவில்லை, வெறுமனே தளர்ந்திருந்தார்கள் என அல்லது அவர்கள் கனவு காண்பதாக ஏமாற்றினார்கள் என ஆரம்ப கட்டங்களில் வேறு அறிஞர்கள் குற்றம் சாட்டினார்கள். மின்வாய்கள் மூலம் மூளையின் செயற்பாட்டை துல்லியமாகக் கண்டறிய முடிந்ததில் இதன் உண்மைத் தன்மை நிரூபணமானது.

### அது எத்தகைய உண்மை

தெளிவான கனவு காணும் தருணத்தில் மூளையின் செயற்பாடானது துரித கண் இயக்க நிலையின் அம்சங்களையே கொண்டிருந்தது என்பது நரம்பியல் உளவியல் நிபுணர்களான Ursula Voss, Martin Dresler செய்த ஆய்வுகளின் மூலம் அறியப்பட்டது.

அது மாத்திரமல்ல தெளிவான கனவுகளின் போதான மூளையின் செயற்பாடானது தனித்துவமானது. அது சாதாரண தூக்கம், ஏனைய கனவுகள் மற்றும் நனவு நிலை ஆகியவற்றின் போதான மூளையின் செயற்பாட்டிலிருந்து முற்றிலும் மாறுபட்டது என்பதைக் கண்டறிய முடிந்தது. தமது விருப்பங்களுக்கு ஏற்றவாறு முடிவுகளை விளங்கிக்கொள்ளும் wishful thinking அல்ல இது.

கனவுகள் பற்றிய வேறு சில ஆய்வுகள் சுவாரஸ்யமானவை. முன் ஏற்பாடு செய்யப்பட்ட சில செயல்களை துரித கனவுகள் காணும் வேளையில் செய்வித்து, அதே செயற்பாட்டை விழிப்பு நிலையில் செய்ய வைத்து ஒப்பீடு செய்து பார்த்தனர். உதாரணமாக, ஒன்று, இரண்டு, மூன்று என எண்களை எண்ணும் செயற்பாடானது கனவு நிலையிலும் நினைவு நிலையிலும் ஒரே வேகத்தில் நடைபெறுவதை அறிய முடிந்தது. எண்ணுவது என்பது மனத்தின் செயற்பாடு மட்டுமே. அதில் உடலின் செயற்பாடு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் படி ஏறுவது, நடப்பது, எளிமையான உடற் பயிற்சிகளைச் செய்வது போன்ற உடலின் செயற்பாடுகள் கனவு நிலையின் போது நீண்ட நேரம் எடுத்தன.

இதற்குக் காரணம் என்ன? உணர்திறன் சார்ந்த பின்னூட்டு (sensory feedback) வழமைபோல் இல்லாததே என ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

உணர்திறன் சார்ந்த பின்னூட்டு என்றால் என்ன? உதாரணம் சொல்லலாம். நாம் நடக்கும்போது அது பற்றி சிந்திப்பதில்லை. ஆனால் நாம் கால் வைக்கும் தரையானது வழமையானதா வழுவழுப்பானதா, ஏற்ற இறக்கங்கள் நிறைந்ததா, பாதங்களைக் குத்தக் கூடிய கல், முள் போன்றவை உள்ளதா போன்ற பல விடயங்களை எமது பாதங்களின் சருமம் பகுத்துணர்ந்து அதை மூளைக்குச் செய்தியாக அனுப்புகிறது. நடக்கும் தரை ஆபத்தானது அல்ல என்ற செய்தி கிடைத்ததும் கால்கள் வேகமாக நடக்கும். நினைவு நிலையில் உணர்திறன் சீர்மையுடன் செயற்படுகிறது. ஆனால் கனவு நிலையில் இத்தகைய உணர்திறன் வழமைபோல இல்லாததாலேயே கனவு நிலையில் உடற் செயற்பாடுகள் வேகங் குறைகின்றன. இதனால்தான் தெளிவான கனவு நிலையின் போதும் மனிதர்களால் நினைவு நிலை போல இயங்க முடிவதில்லை.

அது சரி, கனவுகள் பற்றிய ஆய்வுகளால் பயன் என்ன? நினைவுலகின் ஏனைய தளங்களில் சஞ்சரிப்பதற்கு கனவுகள் பற்றிய ஆய்வின் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதில் New Age movement போன்ற இயக்கத்தினர் ஆர்வம் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஆன்மீக உலகில் நவீன விஞ்ஞான அறிவின் தாக்கம் எவ்வாறு அமையும் என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டியதே.

தெளிவான கனவுலகில் நீந்துவதை ஊக்குவிப்பதற்கு மருந்துகளை உபயோகிக்கும் ஆபத்தான செயலில் இறங்குபவர்களும் இருக்கிறார்கள். பார்க்கின்சன் நோய்க்குப் பயன்படுத்தும் சில மருந்துகள் பகற் கனவுகளில் ஆழ்த்தும் பக்கவிளைவு கொண்டதால் அதனைப் பயன்படுத்த முனைகிறார்கள்.

தூக்கத்தில் உளறுபவர்கள் விடயத்தில் என்ன நடக்கிறது? அதுவும் பெரும்பாலும் கனவுலகின் செயற்பாடுதான். மேற்கூறிய தெளிவான கனவுகளின் போது வரலாம். ஆனால் மன அழுத்தம், மனச்சோர்வு, நித்திரைக் குறைபாடு போன்ற பிரச்சினைகளிலும் ஏற்படலாம். கடுமையான காய்ச்சல் மதுப் பாவனையின் பின்னரும் தூக்கத்தில் சிலர் உளறுவார்கள்.

காலைக் கனவு பலிக்கும் என்று நம்புவோர் இன்னமும் பலர் எம்மிடையே இருக்கிறார்கள். காலைக் கனவுகள் முற்கூறிய தெளிவான தூக்கத்தில் தோன்றுவதாலேயே நினைவில் நிற்கிறது. ஆனால் அது பலிக்கும் என நம்புவது அர்த்தமற்ற நம்பிக்கையே. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனுவல் பார்வை

# ஆய்வின் பரவசம்

இராகவன்





ஆய்வெழுத்தின் வரையறை மற்றும் வடிவு ஒழுங்கினைக் குலைத்து தேடலைத் தூண்டும் முனைப்புடன் வெளிவந்திருப்பதுதான் 'உள்ளும் வெளியும்' கொண்டிருக்கும் தனித்துவமாகிறது. புலம்பெயர் இலக்கியம் குறித்தான உரையாடலில் தவிர்த்துவிடமுடியாமல் நமக்குமுன் தோன்றுவது குணேஸ்வரனின் விம்பம்தான். அந்தளவிற்கு தாடனம் வந்துவிட்டது அவருக்கு. எந்த வகைப்பாட்டிலும் அவரால் தேய்ந்தெழுத முடிகிறது. எனது வாசிப்பனுபவத்தில் குறிப்பிடுவதானால் அவர் தன்னையோர் ஆய்வாளனாக முன்னிலைப்படுத்தாமல் வாசகனாகவே தொடர்ந்தும் முன்னிலைப்படுத்தி வருகிறார். உள்ளும் வெளியும் பிரதியில் நேர்ந்திருப்பதுமிதுதான். உள்ளடக்க ரீதியில் வகைப்படுத்தினால் நான்கு உள்ளும் ஐந்து வெளியுமாக ஒன்பது கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இதிலும் இரு கட்டுரைகள் ஆய்வு நோக்கற்றவை. எவ்வாறாயினும் எல்லாக் கட்டுரைகளுமே பொதுநிலைப்பட்ட வாசிப்புக் கேற்றதாகவே எழுதப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பக்கத்திலும் குணேஸ்வரனின் மெய்யான ஈடுபாட்டையும் அர்ப்பணிப்பையும் உணர முடிகிறது. ஒவ்வொரு கட்டுரையையும் ஓர் ஆய்வாக மட்டும் அணுகாமல் தனது வாசிப்பனுபவத்தில் கிளர்ந்த பரவசத்தையும் திளைப்பையும் வாசகனிடத்தில் தொற்றவைத்துவிடும் முனைப்புடனும் அணுகுகிறார். ஓர் எளிமையானதும் நுட்பமானதுமான புனைவுத் தன்மை கொண்ட மொழியைக் கையாள்கிறார். இம்மொழியானது வாசகனை முழு ஈடுபாட்டுடன் அணுகச் செய்வதில் பெரும்பங்காற்றுகிறது என்பதுடன் புதிய தளங்களுக்கும் இட்டுச் செல்கிறது.

இங்கே முக்கியமாகக் குறிப்பிடவேண்டியது ஆதவனின் 'மண்மணம்' நாவல் ஒரு பார்வை - இதுவரை வெறும் மேலோட்டமான தகவலாகத் தெரிந்திருந்த மண்மணம் என்ற நாவல் பற்றிய இக்கட்டுரையும் உள்ளடக்கமாக வரும் நாவலின் பக்க எடுத்துக்காட்டுகளும் முக்கியமானவை. இன்றைக்கு நவீன புலம்பெயர் இலக்கிய வெளியில் அ.முத்துலிங்கம், ஷோபாசக்தி, கலாமோகன், பார்த்தீபன், சக்கரவர்த்தி போன்றோர் தவிர்க்கவியலாத முக்கியத்துவமுடையோராகிவிட்டனர். இவர்களையெல்லாம் ஈழத்தில் முறையாக அறிமுகம் செய்து வைத்து வாசிக்கத் தூண்டியவர்களுள் குணேஸ்வரனுக்கு முக்கிய பங்கிருப்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். இதேபோல் அம்மா, எக்ஸில், உயிர்நிழல், தூண்டில், கூர் எனப் பெரும்பாலான புலம்பெயர் சிற்றிதழ்களை எமக்குப் பரிச்சயப்படுத்தியவரும் இவர் என்பது கவனிப்புக்குரியது.

பொதுவாக வாசகனை இருவகைப்படுத்தலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று தூண்டல் அவசியமற்ற வாசகன். இரண்டாவது தூண்டல் அவசியமான வாசகன். தூண்டல் அவசியமற்ற வாசகன் இயல்பாகவே எவரது தூண்டுதலுமின்றித் தேடலில் ஈடுபட்டு வாசிப்பவன். தூண்டல் அவசியமான வாசகன் எவராவது தூண்டிக் கொண்டிருந்தால் மட்டுமே தேடலில் ஈடுபட்டு வாசிப்பவன். இந்தவகை வாசகனைத் தூண்டுவதற்கு ஏதுவாயமைவதுதான் புனைவுசாராத ஆய்வு நிலைப்பட்ட பிரதியாகும். இந்த வகையில் குணேஸ்வரனின் உள்ளும் வெளியும் முக்கியத்து வம் பெறுமொன்றாகும்.

'ஈழத்து இலக்கியமும் இரசனையும் - நாவல்', 'அண்மைக்கால இலங்கைப் படைப்புகளில் எஸ். ஏ உதயனின் நாவல்கள்' எனுமிரு கட்டுரைகளும் நன்கு பகுப்பாய்வு செய்யப்பட்டு ஆரம்பநிலை வாசகனுக்கு ஏற்றவிதத்தில் மிக எளிமையாக வரையப்பட்டுள்ளன. புனைவியல் பாங்கான மொழிப்பிரயோகத்திற்கான சாத்தியம் குறைவாக உள்ள போதிலும் அதை இயன்றளவுக்குச் சாத்தியமாக்கியெழுதியுள்ளமை குணேஸ்வரனைப் பிற ஆய்வாளர்களின் அணுகுமுறைகளிலிருந்து வேறுபடுத்தித் தனித்துவமுடையவராக எடுத்துக்காட்டப் போதுமானது.

'கூடாரநிழல்' கவிதைத் தொகுதி குறித்தும் 'உயிரின் வாசம் - பெயரிடப்படாத நட்சத்திரங்கள்' கவிதைத் தொகுதி குறித்தும் எழுதப்பட்டுள்ள இரு கட்டுரைகளும் ஆய்வெழுத்து களல்லவென்றபோதிலும் துயரம், வலி, வேதனையைக் கவியச்செய்யும் விதத்தில் உணர்வு தோய்ந்து எழுதப்பட்டுள்ளன.

அ. முத்துலிங்கம், ஷோபாசக்தி, ஆதவன் முதலானோரின் நாவல்களிலிருந்து உயிர்த்துடிப்பான பக்கங்களைத் தேர்வுசெய்து இணைத்துள்ள விதம் வெகு நேர்த்தியானதென்பதும் குறிப்பிடத்தக்கது.

'ஈழத்தமிழர் புலம்பெயர்ந்துள்ள நாடுகளில் தமிழ்க்கல்வி' செம்மையான எதிர்வுகூறலோடும் முறையான வகைப்பாட்டுடனும் நோக்கப்பட்டிருப்பது அதன் இயங்குதிசைக்கு வலுச்சேர்த்துள்ளது.

பொதுவில் ஆய்வெழுத்துக்கும் ஆரம்பநிலை வாசகனுக்குமிடையில் ஓர் இடைவெளியிருக்கும். உள்ளும் வெளியும் அந்த இடைவெளியை நீக்கியுள்ளது. இந்த நீக்கம் ஓர் ஆய்வாளனாக மட்டுமன்றி ஒரு படைப்பாளியாகவும் குணேஸ்வரன் அடைந்துள்ள வெற்றி என்றே சொல்லவேண்டும். இந்நூலின் உள்ளடக்கத்திற்கு ஒத்திசைவாக அமையும் கைலாசநாதனின் முகப்போவியமும் குறிப்பிடத்தக்கதொன்று. ■

---

*(53ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

கொள்கையின் பிரதான அம்சம். இக்கொள்கை அவரை லத்தீன் அமெரிக்க நாடுகளின் சர்வாதிகாரிகளது வெறுப்புக்குரிய மனிதராக ஆக்கியது.

1950களில் ஒரு தடவை மார்க்வெஸ் வெளிநாட்டில் தஞ்சம் புகுந்தார். 1970களில் கொலம்பியாவில் வன்முறைகள் அதிகரித்த போது நீண்ட காலம் அவர் நாட்டுக்கு வெளியே தங்கியிருந்தார். Alternativa என்ற சோஷலிச சஞ்சிகையை ஆரம்பிப்பதற்கு மார்க்வெஸ் உதவினார்.

இச்சஞ்சிகை சோஷலிச கருத்துகளைப் பரப்பும் ஆக்கங்களை வெளியிட்டது. கொலம்பிய மக்களால் நேசிக்கப்பட்ட தலைவர்கள், சிந்தனையாளர்களுள் மார்க்வெஸ் ஒருவராக இருந்தபடியால் 1990களில் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக போட்டியிடும்படி அவருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.அரசியலில் நேரடியாக இறங்குவதை விரும்பாத அவர் அவ் வேண்டுகோளை ஏற்கவில்லை. சோஷலிச கொள்கைகளையுடையவரான மார்க்வெஸ் தொடர்ந்து பிடல்கஸ்றோவின் ஆதரவாளராகவும், அவரது நண்பராகவும் இருந்தார். 1986 ஆம் ஆண்டில் இவர் எழுதி வெளியிட்ட நூல் ஒன்று சிலி நாட்டின் சர்வாதிகார ஆட்சி பற்றியும், அங்கே இடம்பெறும் தலைமறைவு எதிர்ப்பு இயக்கம் பற்றியும் விபரிப்பதாக இருந்தது.

இந்நூல் சிலி நாட்டின் சர்வாதிகார அரசால் தடை செய்யப்பட்டது. இந்நூலின் 15,000 பிரதிகளைக் கைப்பற்றிய சிலியின் சுங்க அதிகாரிகள் அவற்றை பொதுஇடம் ஒன்றில் வைத்துத் தீயிட்டுக் கொளுத்தினர். அமெரிக்காவும் மார்க் வெஸ்ஸை தன் பகைவனாகக் கருதியது. அவருக்கு அமெரிக்காவிற்குள் நுழைவதற்குத் தடைவிதிக்கப்பட்டது. இத்தடை கெடுபிடியுத்தம் முடிவுற்ற பின்னர் 1995ஆம் ஆண்டில் நீக்கப்பட்டது.

தனது வாழ்வின் பிற்பகுதியில் மெக்சிக்கோ நாட்டை வாழிடமாகக் கொண்டிருந்த மார்க்வெஸ் மெக்சிக்கோ நகரில் காலமானார். லத்தீன் அமெரிக்கா நாடுகள் யாவற்றையும் இணைக்கும் பாலமாக ஸ்பானிய மொழியும் லத்தீன் நாடுகளின் (ஸ்பானியா, போத்துக்கல்) கலாசாரக்கலப்பும் அமைந்துள்ளன. ஸ்பானிய மொழி வழக்கில் உள்ள அந்நாடுகளின் வாசகர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்ற மார்க்வெஸ்,

1980களில் உலகளவில் புகழ் பெற்ற ஒருவரானார். இவ்வாறு தம் மொழிபேசுவோர், தம்நாட்டினர் என்ற எல்லையைக் கடந்து புகழைப் பெறும் எழுத்தாளர்கள் மிகச் சிலரே ஆவர். அவர்களுக்குள்ளும் தம் மொழியின் இலக்கியப் போக்கைத் திசை திருப்பியவர் என்று போற்றப்படுவோர் ஓரிருவர் மட்டுமே ஆவர். உலகம் போற்றும் இலக்கிய கர்த்தா; தன் மொழியாகிய ஸ்பானிஷ் இலக்கியத்தின் போக்கை மாற்றியமைத்தவர் என்ற இரு விடயங்கள் அவருக்குப் பெருமை சேர்ப்பன. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரை விமர்சனம்



# குக்கூ

மயூரா

தற்போதைய தமிழ் சினிமாவில் வித்தியாசமான கதைக் களங்களைக் கொண்ட யதார்த்தவாத திரைப் படங்களின் வருகை புதிய அலையை உருவாக்கி வருகின்றது. இந்த மரபில் தற்போது வெளிவந்திருக்கும் படம்தான் குக்கூ. கண்களில் இருக்கும் மனிதர்களின் காதல்களுக்கு ஆயிரம் தடைகள், பிரச்சினைகள். அதை பல படங்களில் நாம் பார்த்து விட்டோம். பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் இருவரின் காதலுக்கு வரும் சோதனைகள், அவற்றில் இருந்து அவர்கள் எப்படி மீண்டு வருகிறார்கள் என்பதை மனம் வலிக்க வலிக்க காட்சிப்படுத்தியிருக்கிறார் புது இயக்குநர் ராஜிமுருகன். வெறும் பொழுது போக்கு, குத்துப் பாட்டு, கேவலமான நகைச்சுவை ஏதும் இல்லாத அழகான படமாக காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது. இன்றைய அவசர உலகிலும் அன்பின் வலிமை அன்பானவர்களை ஒன்று சேர்க்கும் என்பதற்கு இந்தப் படம் சாட்சியாக அமைகிறது.

பார்வையில்லாத ஒரு காதலியும் ஒரு காதலனும் எந்தத் தொடர்புகளும் இல்லாமல் இருவேறு திக்கில் பிரிந்துபோன பிறகு மீண்டும் இணைவதில் உள்ள சிக்கலை யோசித்துப் பார்த்தால் அது எவ்வளவு பெரிய கொடுமையாக இருக்கும். புகையிரத வண்டியில் பொருட்கள் விற்கும், அவ்வப்போது இளையராஜா குரலில் கச்சேரிகளில் பாடும் பார்வையற்ற இளைஞர் தமிழ்(தினேஷ்). ஆசிரியப் பயிற்சிக்குப் படிக்கும் பார்வையற்றவள் சுதந்திரக்கொடி (மாளவிகா நாயர்). இருவரின் சந்திப்பும் மோதலில் தொடங்கி அடுத்தடுத்த சந்திப்புகளில் அது காதலாகிறது. ஆனால், கொடியின் அண்ணன் தங்கையை வேலையில் சேர்ப்பதற்காக தேவைப்படும் பணத்தை ஏற்பாடு செய்த தன் நண்பருக்கே அவளைத் திருமணம் செய்து வைக்க முயல்கிறான். கொடி கடுமையாக அதனை எதிர்த்துப் போராடுகிறாள். காதல் விடயம் தெரிந்ததும் தமிழை அடித்துப் போடுகிறான் கொடியின் அண்ணன்.

வேலைக்காக கடன் வாங்கிய பணத்தைக் கொடுத்து விட்டு தன்னை அண்ணன் பிடியில் இருந்து அழைத்துப் போகுமாறு தமிழிடம் சொல்கிறாள் கொடி. அங்கே, இங்கே என ஒருவாறு பணத்தைப் புரட்டி கொடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைச் சந்திக்க தமிழ் கிளம்புகிறான். ஆனால், இரவில் இரகசியமாக கொடிக்கு திருமண ஏற்பாடு செய்கிறான் அண்ணன். அவர்களின் பிடியில் இருந்து தப்புகிறாள் கொடி. பணத்தோடு வந்த தமிழ் பொலிஸில் சிக்கி பின்னர் அங்கிருந்து தப்பி விபத்தில் அடிபட்டு பணத்தையும் இழந்து மரணத்தோடு போராடுகிறான். இருவரும் மீண்டும் சந்தித்தார்களா? அந்தக் காதல் கைகூடியதா என்பது மீதிக்கதை. இந்தப் படத்தின் பலமே கதை தான். கதையை நம்பி இயக்குநர் உறுதியாக இருந்து படத்தை எடுத்துள்ளார். சுதந்திரக் கொடிக்கும் தமிழுக்குமிடையேயான காதல் என்ன ஆனது என்ற இயக்குநரின் தேடல் தான் படமாக விரிகிறது. பார்வையாளரும் அந்த விரிவில், அந்த இருவரின் உறவுகளின் இணைப்புக்காகத் துடிக்கின்றனர்.

இதற்கு முன் பார்வையற்ற நாயகர் வேடத்தில் நடித்த கமல், விக்ரம் முதலான நடிகர்களை எல்லாம் ஓரம்கட்டி வித்தியாசமான, இயல்பான உடல் மொழியுடன் தனது நடிப்பை சிறப்பாக தினேஷ் வெளிப்படுத்தியுள்ளார். பல்வேறு காட்சிகளில் தினேஷின் நடிப்பு பாராட்டுக்குரியது. தன் காதலி எதிரில் இருந்து கொண்டே இல்லையென்று பொய் சொல்லும் போது அந்தக் கோபம் காதலி சமாதானமானதும் மகிழ்ச்சியைக் காட்டும் விதம் என பல்வேறு காட்சிகளிலும் ஒரு உண்மையான மாற்றுத்திறனாளியை நகலெடுத்திருக்கிறார் தினேஷ். இவருக்கு இணையாக காதலியாக வரும் மாளவிகாவும் பிரம்மிக்க வைக்கிறார். பல இடங்களில் இவரது முகபாவனை, நடிப்பு கச்சிதமாக பொருந்துகிறது. இவரா புதுமுகம் எனக் கேட்கத் தோன்றுகின்றது.

இப்படத்தின் வசனங்கள் தனிச் சிறப்பாக சொல்லப்பட வேண்டும். இதுபோல் பி.கே.வர்மாவின் ஒளிப்பதிவும் சந்தோஷ் நாராயணன் இசையும் படத்திற்கு பெரிய பலமாக விளங்குகின்றது. கதைக்களத்திற்கு பின்னணி இசையாகவே உணர முடிகிறது. பாத்திரக்களமும் காட்சி வெளியும் யதார்த்தமாகவும் இயல்பாகவும் கோர்க்கப்பட்டுள்ளது. பார்வையற்றவர்கள் மீது வலிந்து கட்டி அனுதாபத்தை உருவாக்கும் இயந்திரப் பாங்கான காட்சிப்படுத்தல்கள் சேர்க்கையாக இணைக்கப்படுகின்றது. வாழ்க்கையின் போக்கில் ஒவ்வொரு தரப்பு மனிதர்களும் அவரவர் வெளிசாந்து இயங்கும் பக்குவத்தையும் முதிர்ச்சியையும் அனுபவம் கடந்து பார்ப்பதற்கான தருணங்களை அடையாளப்படுத்துவது குக்கூ சிறப்பாகவே உருவாக்கப்பட்டுள்ளது.

படத்தில் அனைத்துப் பாத்திரங்களும் அவரவர் பாத்திர வரையறைகளைப் புரிந்துகொண்டு நடித்துள்ளார்கள். படத்தொகுப்பும் சிறப்பாகவே உள்ளது. சில இடங்களில் இழுபடும் உணர்வை தொற்றவைத்து அதையும் கடந்து திரையனுபவத்தைக் கடத்துவதில் வெற்றிபெற்றுள்ளார் இயக்குநர். இன்னும் பல்வேறு குறைகளைச் சொல்லலாம். ஆனால், பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான திணைக்களம் உருவாக்கப்பட்டிருப்பதை நாம் சாதகமாக பரிசீலிக்க வேண்டும். சூத்திர வகைப்பட்ட படங்களின் உற்பத்தி நிலைவரத்துடன் ஒப்பிடும்பொழுது இந்தப் படம் எவ்வளவோ சிறப்புகளைக் கொண்டுள்ளது.

எளிய மனிதர்களின் வாழ்க்கை, அதன் இயல்பான மனிதர்களின் இணைப்பும் கூட்டும் வாழ்க்கையின் தேடலை எதுவரை கொண்டுசெல்லும் என்பதற்கான ஒரு முயற்சியாகவே குக்கூ அமைந்துள்ளது. புதுமுக இயக்குநர் ராஜிமுருகன் கவனிப்புக்குரிய இயக்குநராக அறிமுகமாகின்றார். எந்த மனிதருக்கும் காதல் வரும். அதில் சோதனைகள் வரும். அதனைச் சொல்லும் விதத்தில் சொன்னால் மனதில் பதியும் என்ற அழுத்தமான நம்பிக்கையுடன் குக்கூ குரல் நாலாபுறமும் கேட்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசிப் பக்கம்



சி.சிறிகிருஷ்ணன்

## உளவளத்துணை நலம்

உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்ததிலிருந்து இன்றுவரை அதாவது கடந்த ஐந்து வருடங்களாக வரலாறு காணாத மனிதப் பேரவலம், போர்க்குற்ற விசாரணை, மீள்குடியேற்றம், நாட்டை மீளக்கட்டியெழுப்புதல் எனப் பல்வேறு விடயங்கள் குறித்தும் பரபரப்பாகப் பேசப்பட்டு வரும் நிலையில் இக்கால கட்டத்தில் முக்கியமாகப் பேசப்பட வேண்டிய உளவளத்துணை நலம் குறித்துப் பெரிதாக எவரும் அலட்டிக் கொள்வதில்லை. விபரிக்க முடியாத பேரிழப்புகளையும் அசம்பாவிதங்களையும் நேரடியாகச் சந்தித்த மக்களுக்கு உடனடியாகத் தேவைப்படுவது அவர்களை உளரீதியான நெருக்கடிகள் மற்றும் மன அழுத்தங்களிலிருந்து விடுவிக்கும் உளவளத்துணை நலச் செயற்பாடுகள்தான். உளநல மருத்துவர் சிவதாஸ் இதுகுறித்து அவ்வப்போது பேசியும் செயற்பட்டும் வருகின்றபோதிலும் இச்செயன்முறையானது பரவலாக்கப்பட்டு உரிய வகையில் முன்னெடுக்கப்படவில்லையென்பதைக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

யுத்தம் முனைப்படைந்திருந்த நாட்களில் இரத்த உறவுகள் எறிகணை வீச்சிலும், விமானக் குண்டு வீச்சிலும் கண்முன்னே உடல் சிதறிப் பலியானதைக் கண்டவர்களும், குண்டடிபட்ட நிலையில் இரத்தம் பீறிட விழுந்து துடித்த உறவுகளை சிகிச்சையளித்துக் காப்பாற்றும் அவகாசமின்றிக் கைவிட்டு ஓடிவந்தவர்களும், தொடர்ச்சியான இடப்பெயர்வுகளின் போது நோயுற்று இறந்தவர்களின் சடலங்களை இறுதிக்கிரியை செய்யும் அவகாசங்கிடைக்காமல் அவ்விடத்திலேயே கைவிட்டு வந்தவர்களும், யுத்த அனர்த்தத்தில் குடும்ப அங்கத்தவர் அனைவரையும் இழந்து தனிமரமாய் நிற்பவர்களும் எத்தகைய மனநிலைக்குள்ளாகியிருப்பர் என்பதைச் சொல்லித் தெரியவேண்டுமென்பதில்லை. இத்தகையோரது உளநெருக்கீடு, விரக்திநிலை, அழுத்த உணர்வு இவையெல்லாம் உடனடியாகத் தணிக்கப்படவேண்டியவை. இத்தணிப்பிற்காக சமகாலம் வரை முன்னேற்றகரமான உளவளத்துணை நலச் செயற்பாடுகள் பரவலாக முன்னெடுக்கப்படவில்லையென்பது வேதனைக்குரிய உண்மையாகும்.

2004 டிசம்பரில் சுனாமிப் பேரனர்த்தம் நிகழ்ந்தபின் முன்னெடுக்கப்பட்ட உள ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகளை இவ்விடத்தில் நினைவு கூர்வது பொருத்தப்பாடுடையது. சுனாமிப்பேரனர்த்தம் நிகழ்ந்த காலகட்டத்தில் வடக்கிலும் கிழக்கிலும் பரவலாக உள ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வந்தன. இதன் மூலம் நல்ல பயன்விளைவும் ஏற்பட்டது. சுனாமிப் பேரனர்த்தத்தைக் காட்டிலும் இறுதிக்கட்ட யுத்தத்தின் போதான பேரிழப்பென்பது மிகக் கணிசமானதென்ற நிலையில் நேரடிப் பாதிப்பிற்குள்ளான மக்கள் தொகையும் அதிகமானதாகும். ஆதலால் உளப்பாதிப்பும், மன அழுத்தமும், நெருக்கீடுகளும் உச்சநிலையடைந்திருக்கும் மக்களை அந்நெருக்கடிகளிலிருந்து மீட்டெடுப்பதென்பது நிவாரணமளித்து, மீளக்குடியமர்த்துவதைக் காட்டிலும் முதன்மையளித்து மேற்கொள்ளப்படவேண்டிய செயற்பாடாகும். ஆனால் இதுவரை எந்தவொரு அரசியல் கட்சியோ, பொது அமைப்புகளோ உளவளத்துணை நலம் குறித்து ஒரு வார்த்தையேனும் பேசவில்லை. இனி வருங்காலங்களிலாவது இது குறித்துக் கவனயீர்ப்பை ஏற்படுத்துவது மட்டுமன்றி செயன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு முன்வரவேண்டிய தேவைப்பாடுள்ளது. மனிதாபிமானமுள்ள யாவரும் இது குறித்துக் கவனம் செலுத்த வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அபிமான சமகாலம் இப்பொழுது உங்கள்
Tablet மற்றும் Android phone களில்




இப்பொழுதே Download செய்யுங்கள்!

Available on
play.google.com

Available on
www.magzter.com

Feedback and comments : samakalam@expressnewspapers.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd. at No.185,Grandpass Road,Colombo -14, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org